கல்கி

KALKI
15.12.2002
ரூ. 6.00

சீஸன் சிறப்பிதழ்





சங்கீத
கிருஷ்ணா!

WEIGHT REDUCTION(உடல் பருமன்) for LADIES & GENTS

- **Up to 10 - 14 kgs. in just 60 days** • No crash diet programme!
- No side effects!!! • Well planned diet according to your taste
- Natural therapies after thorough examination by our Doctors

ASTHMA - ஆஸ்துமா

1. Dyspnea *(மூச்சுத் திணறல்)* **2. Respiratory difficulties** *(மேல்மூச்சு வாங்குதல்)*
3. Dry cough *(வறட்டு இருமல்)* **4. Cough with sputum** *(சளியுடன் கூடிய இருமல்)*
5. Running Nose *(மூக்கில் நீர் வழிதல்)* **6. Nasal Block** *(மூக்கடைப்பு)*

எங்கள் மகள் சிந்துஜா (வயது 11) மகன் கார்த்திக் (வயது 8) ஆகிய இருவரும் ஆஸ்துமா பிரச்னையில், தூங்க கூட முடியாமல் கஷ்டப்பட்டார்கள். எவ்வளவோ ஆங்கில மருந்துகள் சாப்பிட்டும் பயன் இல்லை. அடையார் நேச்சர் க்யூர் சென்டர் வந்து இயற்கை சிகிச்சை எடுத்த பிறகு முழுவதும் குணம் அடைந்தார்கள். அங்குள்ள அனைவருக்கும் எங்களது நன்றி.

Mr. & Mrs. G.K. Ganesan
49/2A, Suppulakshmi Apts. Bheemasena Garden St., Mylapore, Chennai - 4.

ARTHRITIS - மூட்டுவலி

* கை, கால்களில் மூட்டு வீக்கமும், வலியும். * கை, கால் விரல் மூட்டுகளில் வீக்கமும் வலியும். * கழுத்து வலி (Cervical Spondylitis) * நடுமுதுகின் கீழ்பகுதியில் வலி (Lumbar vertebra and Sacral Joint area) * இடுப்பு எலும்பும் (Pelvic Bone) தொடை எலும்பு தலையும் (Femoral Head) சேருமிடம். * குதிகால் இணைப்புகளில் வலி. * குதிகால்களில் எலும்பு வளர்ந்து நடக்க முடியாமல் வலி. (Calcaneal Spur) முதலியவை பல ஆண்டுகளாக இருந்தாலும் ஆங்கில மருத்துவருடைய ஆலோசனையின்படி வித்தியாசமான இயற்கை வைத்திய முறையில், பக்கவிளைவுகள் இல்லாமல் நலம்பெற செய்கின்றோம். இந்தியா மற்றும் வெளிநாடுகளில் இருந்தும் வியாதியஸ்தர்கள் வருகிறார்கள்.

Dear Doctor,

Having failed at the door steps of Ayurvedic, Allopathic and Homeopathy I was mentally dispirited and depressed over the sufferings of my

1. Osteo Arthritis, 2. Rheumatoid Arthritis, 3. Ankylosing Spondylitis, 4. Gout

I happen to meet Director S. Purushothaman at his Hospital who with his team of Doctors thoroughly checked, advised the course of treatment required and more patiently gave assurance that I will come out of the problems soon.

What a delight it was! That after undergoing the treatment (within a week) gave me miraculous relief in such a short period. Six to 8 years old malady cured in a week which is CENT PERCENT TRUE. I will be failing in my duty if I do not express my gratitude from my bottom of my heart to **Director S. Purushothaman**, and other Doctors and their able assistants for implementing the treatment efficiently and cheerfully.

May God give them longevity to serve the "sufferers" like me.

Mrs. Kanchana Prabha, W/o Mr.S. Gopal, SDE(A),
Bharat Sanchar Nigam Ltd., (Govt. of India) 4/20, Easwari Nagar, Tambaram (E), Chennai - 59

நாள்பட்ட இதர நோய்களுக்கும் எங்களிடம் ஆலோசனை கேட்கலாம்.

அடையார் நேச்சர் கியூர் சென்டர்

ADYAR NATURE CURE CENTER (TM)

Regd. Hospital

No. 6, SECOND CROSS STREET, KASTURBHA NAGAR, ADYAR, CHENNAI - 20.
Phone:4413399, 4402470. Tele Fax: 044-4916650 (காந்திநகர் பஸ்டெப்போ எதிரில்)
www.adyarnaturecure.com E-mail: adyarnaturecure@yahoo.com,

குறிப்பு: பிராமணர்களால் தயாரிக்கப்பட்ட சைவ உணவு வசதி மட்டும் உண்டு. சாதா, A/c தங்கும் அறைகள் கிடைக்கும். முன்பதிவு அவசியம்.

ஓ... ரசிக சீமானே!



கைக்காக செலவழித்து, கச்சேரிக்குப் போய், கேட்டு ரசிக்கிற, ரசிகர்களை கௌரவிக்க வேண்டும் என்கிற எண்ணம் யாருக்காவது வந்தது உண்டா?

இந்த சீசனில் கர்நாடிகா. காம் இணைய தளக்காரர்களுக்கு வந்திருக்கிறது, என்பது சந்தோஷமான சமாசாரம்!

இந்த வருஷம், ரசனையில் சிறந்த ரசிகருக்கு 'ரசிக கலாநிதி' விருது வழங்கப் போகிறார்கள். இதன் நோக்கம் 'சங்கீத கலாநிதி' விருதைக் கிண்டலடிப்பது இல்லை'' என்கிறார் கர்நாடிகா.காமின் சௌம்யாவும் சசிகிரணும் படு சீரியஸாக.

இந்த வருடம் டிசம்பர் முதல் தேதி தொடங்கி, வரும் ஜனவரி முதல் தேதி வரை, அதிகபட்ச கச்சேரிகளுக்குச் செல்லும் ரசிகருக்கு விருது, மிக அதிக பட்சம் ஜூனியர் கலைஞர்களின் கச்சேரிகளுக்குப் போனால் விருது, லெக்சர், டெமோக்களுக்குப் போகிறவர்களுக்கு விருது என்று அரை டஜன் விருதுகளைக் கைவசம் வைத்துக் கொண்டு, கொடுக்கக் காத்திருக்கிறார்கள்.

''இந்தப் போட்டிகளில் பங்கேற்க என்ன செய்ய வேண்டும்?''

''சீனியர், ஜூனியர், பகல், மாலை, இரவு வித்தியாசம் பாராமல், சகல சபாக்களுக்கும் போய், ரசிகர்கள் கச்சேரி கேட்க வேண்டும். அனைத்து அரங்குகளிலும் நுழைவுப் படிவம் கிடைக்கும். அதைப் பூர்த்தி செய்து, கூடவே ஒரு நோட்டுப் புத்தகத்தை இணைக்க வேண்டும். அதில், எந்தத் தேதியில், எத்தனை மணிக்கு, எங்கே, யார் கச்சேரி? அதில் என்னென்ன கீர்த்தனைகள் பாடப்பட்டன? என்ன ராகம்? என்ற விவரங்களைக் கச்சேரி வாரியாகக் குறிப்பிட வேண்டும். கூடவே, அந்தக் கச்சேரி பற்றிய விமர்சனத்தையும் எழுதலாம்.

''அதெல்லாம் சரிதான்! நாளிதழ்களில் வரும் நிகழ்ச்சி நிரல்கள், கச்சேரிக்குப் போய் வந்த நண்பர்கள், விமர்சனங்கள் மூலமே பல விஷயங்களைத் திரட்டி விடலாமில்லையா? நிஜமான ரசிக கலாநிதியைத் தேர்ந்தெடுப்பது எப்படிச் சாத்தியம்?''



சீஸன் சிறப்புப் பக்கம்

''ஒவ்வொரு கச்சேரியின் போதும், சக ரசிகர்கள் இரண்டு பேரிடம், அத்தாட்சிக் கையெழுத்து பெற வேண்டும் என்று சொல்லியிருக்கிறோம். இன்னொரு விஷயம், கச்சேரிகளுக்கு அதிக அளவில் ரசிகர்களை வரவழைக்க வேண்டும் என்கிற நல்ல நோக்கத்துடன் செய்வதால், தில்லு முல்லு ஏதும் நடக்காது என்று நம்புகிறோம். விருதுகள் யார் யாருக்கு, என்று இறுதி முடிவு எடுக்கும் முன், சம்பந்தப்பட்ட ரசிகர்களை நேரிலேயே அழைத்து, கேள்விகள் கேட்டு, உண்மையை ஊர்ஜிதப் படுத்திக் கொள்வோம்.

யாரப்பா அந்த ரசிக கலாநிதி! சஸ்பென்ஸ் தாங்கலையே!

— எஸ். சந்திரமௌலி

கல்கி இண்டர்நெட் முகவரி : www.kalkiweekly.com
ஈ மெயில் முகவரிகள் : எடிடோரியல் : kalki@kalkiweekly.com
சந்தா : subscription@kalkiweekly.com பிற தகவல்கள் : info@kalkiweekly.com

அகலிகையின் மேல் ஏதோ வீண் பழியெல்லாம் சொல்கிறார்கள் அல்லவா? அதையெல்லாம் நீங்கள் நம்ப வேண்டாம். அவளுக்கும் கௌதமருக்கும் மனவேற்றுமை ஏற்பட்டதன் உண்மைக் காரணம் என்ன வென்று அறிய வேண்டுமானால், 'வேல் பிக்சர்ஸ்' கம்பெனியார் தயாரித்த 'சீதா கல்யாணம்' என்னும் தெலுங்கு டாக்கியைப் போய்ப் பாருங்கள்.

அகலிகை நல்ல சங்கீத உணர்ச்சி உள்ள வள். வெகு நன்றாய் உள்ளங் கனிந்து பாடக் கூடியவள். அத்தகையவள், கௌதம முனிவர் அபஸ்வரக் களஞ்சியமாய்ப் பாடும் பாட்டுக்களை எவ்வாறு, எத்தனை நாள் கேட்டுக் கொண்டிருக்க முடியும்? ஒரு நாள் பொறுக்க முடியாமல் போய், அவள் "நீங்கள் ஒன்று பாட்டுப் பாடுவதை நிறுத்த வேண்டும்; அல்லது நான் இந்தப் பொத்தல் குடிசையை விட்டுப் போய்விட வேண்டும்" என்று சொல்லியிருக்கலாம்.

"ஆஹா! ரிஷி பத்னியாகிய உனக்குச் சமதிருஷ்டி இன்னும் ஏற்படவில்லையே? நல்ல பாட்டுக்கும் கெட்ட பாட்டுக்கும் இன்னும் வித்தியாசம் தெரிகிறதே? செவிப் புலனுக்கு அடிமையாயிருக்கிறாயல்லவா? பிடி சாபம்! உருவமின்றி ஓயாமல் பாடிக் கொண்டு காற்றாய் அலைந்து கொண்டிருப்பாய்!" என்று கௌதமர் சபித்திருக்க வேண்டும்.

மேற்படி தெலுங்கு சீதா கல்யாணம் டாக்கியில், அகலிகை - கௌதமர் இவர்களுடைய பாட்டுகளைக் கேட்ட பின்னர், மேற்கண்ட உண்மை என்னுடைய ஞான திருஷ்டியில் உதயமாயிற்று.

இப்படிச் சிரிக்கச் சிரிக்க 'சீதா கல்யாணம்' திரைப்படத்துக்கு விமர்சனம் எழுதியவர்... கல்கியைத் தவிர வேறு யாராக இருக்க முடியும்!

இதுபோன்ற தெலுங்கு, ஹிந்தி மொழி டாக்கி படங்களுக்கும் தமிழ்த் திரைப்படங்களுக்கும் அமரர் கல்கி எழுதிய விமர்சனங்களின் தொகுப்பை நூலாக வெளியிட்டுள்ளார் வானதி திருநாவுக்கரசு.

டிசம்பம் 5, 2002, அமரர் கல்கியின் 48வது நினைவு தினத்தன்று, கல்கி கிருஷ்ணமூர்த்தி நினைவு அறக்கட்டளை நடத்திய நிகழ்ச்சியில் சுப்ர. பாலனால் மிகச் சிறப்பாகத் தொகுக்கப்பட்டுள்ள இந்நூல் வெளியிடப்பட்டது.



• தேனினிய இறைவணக்கம் பாடிய லாவண்யா



செய்வதும்

ஹிந்தி பிரசார சபா அரங்கத்தில் ஒரு தமிழ்த் திருவிழாவாக நடந்த அந்நிகழ்ச்சியில், பூர்ணம் விசுவநாதன் தலைமைதாங்கி நூலை வெளியிட்டார். செட்டி நாட்டரசர் குடும்பத்துக் குமார ராணி மீனா முத்தையா, முதல் பிரதியைப் பெற்றுக் கொண்டார்.

கல்கி எழுதிய 'கள்வனின் காதலியை' நாடகமாக அரங்கேற்றிய அனுபவங்களைப் பகிர்ந்து கொண்ட பூர்ணம் விச்வநாதன், பழைய நினைவுகளில் மூழ்கித் திளைத்து மகிழ, ஒரு சினிமா விமர்சகர் எவ்வாறு ஒரு திரைப்படத்தின் தலைவிதியை நிர்ணயிக்க முடியும் என்று குமார ராணி, உலகளாவிய உதாரணங்களை எடுத்துக் கூறி உரையாற்றினார். நாற்பது பாடல்கள் கொண்ட 'சங்கீத லவகுச' திரைப்படத்தை, 'இது டாக்கி அல்ல; பாட்டி!' என்று அமரர் கல்கி

அவலும் ஐச்வர்யமும்...

குறிப்பிட்டு எழுதியதை அவர் நினைவூட்டி மகிழ்வித்தார்.

"சினிமாவை வெறும் கேளிக்கை சாதனமாகக் கருதாமல், சமுதாயத்தை பாதிக்க வல்ல சக்தி வாய்ந்த சாதனமாகக் கருதினார்கள் மணிக்கொடி இலக்கியவாதிகள். அமரர் கல்கியும் அதன் வலிமையை உணர்ந்து,



* மேடையில்...

மிகுந்த பொறுப்போடும் நகைச்சுவை உணர்வோடும் ஆனந்த விகடனிலும், கல்கியிலும் எழுதினார்." - மீனா முத்தையா சுட்டிக் காட்டியதை அன்று வெளியான நூலின் தலைப்பே உணர்த்தியது.

'மனிதன் எப்படி உயர்கிறான்' என்ற அத்தலைப்பு, கலை வடிவங்கள் எவ்வாறு மனிதனை மேம்படுத்த வேண்டும் என்று கல்கி கிருஷ்ணமூர்த்தி எழுதிய கட்டுரையின் தலைப்பே!

மனிதன் உயர வேண்டுமானால் அவன் சிந்தனை உயர வேண்டும், ரசனை உயர வேண்டும் என்ற எண்ணங்களின் தொடர்ச்சியாக அமைந்தது, அமரர் கல்கி நினைவு தினத்தின் இறுதி நிகழ்ச்சியான குசேலோபாக்கியானம்.

ஜெயா ஸ்ரீநிவாஸன், பாகவதத்திலிருந்தும் தமிழ் நூல்களிலிருந்தும், கீதை, ராமாயணத்திலிருந்தும், தியாகையரின் பாடல்களிலிருந்தும் ஆதாரங்களும், உதாரணங்களும் ஒப்புவமைகளும் எடுத்தாண்டு, ஒன்றரை மணி நேரத்துக்குள் குசேலர் கதையை நல்ல சங்கீதமும் கலந்து உபன்யாஸமாக வழங்கினார்.

ஒரு பிடி அவலைக் கொண்டு சென்ற குசேலருக்கு, பகவான் கிருஷ்ணன் அஷ்ட ஐச்வர்யங்களும் கிடைக்கச் செய்தான் என்பது எல்லோருக்கும் தெரியும். காணிக்கையின் மதிப்பு முக்கியமல்ல; அதை வழங்கும் மனத்தின் உணர்வுதான் இறைவனுக்கு முக்கியம்; அத்தனை ஐச்வர்யங்களும் வாய்க்கப் பெற்ற பிறகும் பரம வேதாந்தியாகவே இறுதிவரை வாழ்ந்தார் குசேலர், என்ற தகவலுடன் முடித்தார் ஜெயா ஸ்ரீநிவாஸன்.

குசேலர் கதையோடு பொருந்தும் வகையில், நிகழ்ச்சிக்கு வந்த அன்பர்களுக்கு அவல் பொரி உருண்டை அளித்தனர் அறக் கட்டளையினர். 'மனிதன் எப்படி உயர்கிறான்' புத்தகத்தை வாங்கிச் சென்றவர்களோ, அவலையும் பெற்றுக் கொண்டு ஐச்வர்யத்தையும் அடைந்தார்கள்!

- நீலாயதாக்ஷி

படங்கள் : **யோகா**

(நூல் கிடைக்குமிடம் : வானதி பதிப்பகம், 13, தீனதயாளு தெரு, சென்னை - 17 விலை ரூ.75)

கணவன் — மனைவி இருவரும் பாடகர்களாக இருப்பது அனுகூலமா அவஸ்தையா...? இணைந்து எழுதுகிறார்கள் இவ்வாண்டின் இசைப் பேரொளி டி.எம்.கிருஷ்ணாவும் அவர் மனைவி சங்கீதாவும்.

கட்டுரையைப் பார்த்த மகிழ்ச்சியில் நாம் வைத்த தலைப்பு... 'சங்கீத கிருஷ்ணா!'

டி.எம்.கிருஷ்ணா–சங்கீதா கிருஷ்ணா

தொழில் ரீதியாக, ஒரே கலையில் ஈடுபட்டிருக்கும் ஆணும் பெண்ணும் வாழ்க்கையிலும் இணைந்தால், அதனால் சாதகமா, பாதகமா என்று நாங்கள் இரண்டு பேரும் கல்யாணத்துக்கு முன்பே நிறைய யோசித்திருக்கிறோம். மற்றவர்கள் பாதகம் என்றும், பிரச்னை என்றும் சொன்னவற்றையெல்லாம், வரங்களாகவே மாற்றிவிட்டது எங்கள் திருமண வாழ்க்கை.

கலைஞர்களுடைய அன்றாட வாழ்க்கையே, பிறரிடமிருந்து வேறுபடுத்தி அவர்களைத் தனித்துக்காட்டும். காலை ஆறு மணிக்கு எழுந்து, ஒன்பது மணிக்கு ஆபீஸ் போய், மாலை ஆறு மணிக்குத் திரும்பி குடும்பத்துடன் பொழுதைக் கழிக்கிற சராசரி வாழ்க்கை இல்லை எங்களுடையது.

அப்படியானால் நாங்கள் என்னதான் செய்கிறோம்?

ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு விதமாகத் தனிதனியாகத் தான் திட்டமிட வேண்டும். கச்சேரி தினம் என்றால், அன்றைய மாலை நிகழ்ச்சியைச் சுற்றியே அனைத்து ஏற்பாடுகளும் அமையும். யாருக்கு கச்சேரியோ, அவருடைய சிறிதும் பெரிதுமான படுத்தல்களும், தேவைகளும், பூர்த்தி செய்யப்பட்டாக வேண்டும். கச்சேரி இல்லாத தினங்களிலோ எந்தவித அழுத்தமும் இராது. எதுவுமே செய்யாமல் கூட ஒரு முழு தினத்தைக் கழிப்போம். முந்தைய தினங்களில் முடுக்கிவிடப்பட்ட உடலும் மனமும், இறுக்கம் தளர்ந்து அமைதியாகும்.

சங்கீத

இப்போது எண்ணிப் பாருங்கள்... இது போன்ற வாழ்க்கை முறையை ஒரு சராசரி நபரால் எளிதில் ஏற்றுக் கொண்டு ஈடு கொடுக்க முடியுமா...? நிறையப் பொறுமை வேண்டும் என்பதுடன் இப்படியொரு வாழ்க்கை முறைக்குப் பழக்கப்படவே நீண்ட நாட்கள் ஆகும். ஆனால், இரண்டு பேருமே இசைக் கலைஞர்களாக இருப்பதால் எங்களுக்கு இது சுலபத்தில் சாத்தியமாயிற்று. கச்சேரி தினங்களில் ஒருவரை மற்றவர் புரிந்து கொண்டு தேவைகளுக்கு ஈடுகொடுக்க முடிகிறது.

"கலை என்பது மிகவும் தனித்துவமான விஷயம். ஒரு



நாளின் இருபத்து நான்கு மணி நேரமும், வருஷத்தின் முந்நூற்று அறுபத்து ஐந்து நாட்களும், தணியாத ஆர்வ வெறி கொண்டு செயல்பட வேண்டிய தொழில். வீட்டிலே சண்டை போட்டு விட்டு, ஒரு வர்த்தக மீட்டிங்குக்குப் போய், பிஸினஸை வெற்றிகரமாக முடிக்க முடியும். ஆனால், கச்சேரி



ிருஷ்ணா!

செய்வது ரொம்பக் கஷ்டம். ஏனென்றால், கலை, மனசு சம்பந்தப்பட்ட விஷயம். ரசனை, அழகுணர்ச்சி, மெல்லுணர்வுகள்... இவைதான் எங்கள் கலைக்கு ஆதாரம். ஒரு கலைஞனின் கலாபூர்வமான வெற்றிக்குத் தனிப்பட்ட வாழ்க்கையின் பங்களிப்பு மிக முக்கியமானது. நம்முடைய வாழ்க்கைத் துணையும், ஒரு கலைஞராகவே வாய்க்கும் போது, அதே அலைவரிசையில் இயங்கி, பரஸ்பரம் மதித்து, பல வழிகளிலும் ஆதரவாகத் தாங்கி உயர்த்த, உயர முடியும்.

கலைஞர்கள் பெரும்பாலும் கனவுலகப் பிரஜைகள்தாம். அதுவும் சங்கீத சாம்ராஜ்ஜியத்தில் சஞ்சரிக்கும் போது, "இன்னிக்குப் போய், சல்வார் வாங்கலாமா?" போன்ற கேள்விகள் காதிலேயே விழாது. இது போன்ற சமயங்களில் ஆர்டிஸ்ட் அல்லாத மனைவியாக இருந்தால், எரிச்சல்தான் வரும். ஆனால் இருவருமே கனவுப் பிரஜைகள். என்பதால், இசை சம்பந்தமான ஆழ்ந்த யோசனையிலிருக்கிறார் என, புரிந்து கொண்டு வளைந்து கொடுக்க முடிகிறது.

"ஈகோ என்பது வெவ்வேறு தொழில் செய்யும் தம்பதிக்குள் மட்டும் வருவதில்லையா என்ன? என்ன.. கலைத் தம்பதிகள் விஷயத்தில் ஒரு படி அதிகமாக இருக்கும். ஒருவரது ஈகோவை, மற்றவர் மன முதிர்ச்சியுடன் ஏற்று மதித்து, பரஸ்பரம் போற்றும் போது, அதுவே கணவன் – மனைவிக்குள் நெருக்கத்தை அதிகரிக்கிறது. ஒருவருடைய ஈகோவை மற்றவருடையது சமன் செய்யவும் உதவுகிறது.

"நான் ஒரு சங்கீர்ண நடை பல்லவி பண்ணியிருக்கேன். எப்படியிருக்கு, கேட்டுச் சொல்லு!" பிருந்தாம்மா ஒரு சங்கதி பாடியிருக்கா... அந்த சஹானா... ஆஹா!" என்றெல்லாம் இசைக் கலைஞரல்லாத கணவன் – மனைவி பகிர்ந்து கொள்ள முடியுமா?

மாலையில் பாடிய கச்சேரியின் குறை நிறைகளைக் கேட்க, விமர்சகரே தேட வேண்டாம். நாங்களே பரஸ்பரம் அலசி, ஆராய்ந்து விடுவோம். முகஸ்துதியோ, வீண் பாராட்டோ தேவையில்லாத, கனகச்சிதமான, நேர்மையான விமரிசனம் என்பதால், அது எங்களை மேலும் வளர்த்துக் கொள்ளவே உதவும்."

கணவன் – மனைவிக்குள் கருத்து வேறுபாடு, வாக்குவாதம், எல்லாம் வராமல் இருக்குமா? ஆனால் அதுவும் பெரும்பாலும் இசை சம்பந்தமாகவே இருக்கும் என்பதால், வாழ்க்கை படு சுவாரசியமாகிவிடுகிறது.

சுருக்கமாகச் சொல்வதென்றால், ஒரு பாடகர் இன்னொரு பாடகரைக் கல்யாணம் செய்து கொள்வது, தன்னைத்தானே கல்யாணம் செய்து கொள்வது போலத்தான்!





• தலைமைச் செயலரின் பிறந்த வீடு

சிவகங்கைத் திருமகள்!



• லட்சுமி பிரானேஷ்

“சென்னை மாநிலக் கல்லூரியில் எம்.எஸ்.ஸி படித்து முடிக்கும் வரை என் மகளுக்கு ஐ.ஏ.எஸ் ஆக வேண்டும் என்ற எண்ணமே இல்லை. அதன் பிறகு 1967ல் ஐ.ஏ.எஸ் தேர்வு எழுதி, இந்தியாவிலேயே நான்காவது இடத்தைப் பெற்று தேர்ச்சியடைந்தார். பல்வேறு துறைகளில் பணியாற்றி இருப்பதால் இந்தப் பதவியில் சிறப்பாகச் செயல்படுவார். என் மகளின் திறமைக்கேற்ற பரிசு கிடைத்திருக்கிறது” என்று பூரித்தார், புதிய தலைமைச் செயலாளர் லட்சுமி பிரானேஷ் பிறந்த ஊரான சிவகங்கையில் உள்ள அவரது அம்மா சுபத்ரா.

படிக்கின்ற காலத்தில் படிப்பில் படுசுட்டி. இசையில் நாட்டம் அதிகம். அவள் ஐ.ஏ.எஸ் ஆன நாளிலிருந்து இன்று வரை தினமும் நேரம் ஒதுக்கி தொலைபேசியில் தாயாருடன் ஒரு நிமிடமாவது பேசுவாராம். “அதற்கு மேலே பேச அவளுக்கு எங்கே நேரம் கிடைக்கும்? அதுவே எனக்கு சந்தோஷம்தான்” என்கிறார் சுபத்ரா.

லட்சுமி பிரானேஷுக்கு ஐந்து சகோதரர்கள், இரு சகோதரிகள். பெரிய குடும்பத்தில் மூத்த பெண்ணான லட்சுமி பிரானேஷ் மட்டும்தான் ஐ.ஏ.எஸ். அவரது சகோதரர்களில் இரண்டு பேர் மருத்துவர்கள், இரண்டு பேர் இஞ்சினியர்கள், ஒருவர் ஆடிட்டர்... அனைவருமே அமெரிக்காவில் உள்ளனராம்.

தலைமைச் செயலாளராக நியமிக்கப்பட்டவுடன் விஷயத்தைத் தாயாரிடம் மட்டும் கூறி, தொலைபேசியில் ஆசி வாங்கிக் கொண்டாராம் லட்சுமி பிரானேஷ். அமெரிக்காவில் உள்ள சகோதரர்கள் டி.வி பார்த்துத்தான் விஷயத்தைத் தெரிந்து கொண்டு சந்தோஷப்பட்டிருக்கிறார்கள்.

சில ஆண்டுகளுக்கு முன் காலமான லட்சுமி பிரானேஷின் தந்தை வெங்கடேஸ்வர அய்யர். சிவகங்கையின் தலை சிறந்த வக்கீல். ஏழைக் குழந்தைகளுக்கு படிப்பு உதவி, திருமண உதவி என்று நிறைய உதவிகள் செய்வார் என்று சிவகங்கை மக்கள் வாயாரப் புகழ்கிறார்கள்.

“இதுவரைக்கும் எந்த ஒரு விஷயத்திற்காகவும் என் மகளிடம் பரிந்துரை செய்ததே கிடையாது. உறவினர்கள் சிபாரிசு செய்யச் சொல்லி வந்தால்கூட, நானே தவிர்த்து விடுவேன். எப்பவுமே என் மகள் நேர்மையானவள். மக்களுக்கு நன்மை செய்யத்தான் இந்தப் பதவி. கட்டாயம் செய்வாள் என்ற நம்பிக்கை எனக்கு உண்டு!” என்கிறார் சுபத்ரா.

கணவரின் மறைவுக்குப் பின் புகைப்படம் எடுத்துக் கொள்வதையே தவிர்த்து விட்ட சுபத்ரா... இப்போதும் மறுத்து விட்டார்.

‘வெங்கடேஸ்வரய்யர், அட்வகேட்’ என்ற பெயர்ப் பலகையுடன் சிவகங்கை கோகலே தெருவில் இருக்கிறது இவர்கள் வீடு. தலைமைச் செயலர் வீடு என்ற பரபரப்பும் இல்லை... ஆடம்பரமும் இல்லை.

— கி. சிங்காரவடிவேல்

"**சு**ந்தரீச...!" பாப்பா இப்போது கத்தவில்லை; பாடினாள்! பாட்டில் அவள் அழைத்தது திருவான்மியூர் க்ஷேத்திரத்துத் திரிபுர சுந்தரியை!

சுத்த ஸாவேரியை அவள் கையாண்ட அனாயாசத்தைக் கண்டு சுத்தமாக ஆடிப் போயிருந்தார் வாத்தியார். கீர்த்தனையை மட்டும்தான் கற்றுக் கொடுத்திருந்தார் அவளுக்கு - அதுவும் முந்தைய தினம் தான் பாடம் முடிந்திருந்தது. இன்று பாப்பா சுத்த



“இன்னும் ஒண்ணு இரண்டு வருஷமானா, பாப்பாவுக்கே ரசிகர் மன்றம் வருதா இல்லியா பாருங்க... அப்புறம் போஸ்டர், கட் அவுட்னு ஜமாய்ச்சுடலாம்.”

ஸரிகம பாப்பா

சீஸன் சிறப்புப் பக்கம்


ஸாவேரி ஆலாபனையும் பாடிவிட்டு, ஏதோ தினம் தினம் அந்த திரிபுரசுந்தரியைக் குசலம் விசாரித்து வரும் பக்கத்து வீட்டுக்காரிபோல், பரம சுலபமாக கீர்த்தனையோடு ஒன்றிக் கொண்டிருந்தாள்.

பாட்டு வாத்தியார் பஞ்சாபகேசன் பார்க்காத

சீஸன் சிரிப்புத் தொடர் 3

பால வித்வான்கள் இல்லை. அவரிடம் டியூஷன் பயின்று மேடையேறிய மூன்று பேர், இன்று இசையிளஞ்ஜோதி பட்டம் பெற்றதுடன் கல்யாணக் கச்சேரிகளிலும் சபா கச்சேரிகளிலும் கொடி கட்டிப் பறந்து கொண்டிருந்தார்கள். அதிலும் ஒரு பெண், கல்யாண மண்டப வாடகைக்குச் சமமாகக் கல்யாணக் கச்சேரி ரேட் வாங்கி, சக்கைப் போடு போட்டுக் கொண்டிருந்தது.

ஆனால் பாப்பா தனி ரகமாகத் தெரிந்தாள் பஞ்சாபகேசனுக்கு. மற்ற சிஷ்யர்களெல்லாம் அவரிடமிருந்து கற்றுக் கொண்டார்கள்; பாப்பாவோ, சுயம்பு மாதிரி முளைத்திருக்கிறாள். இவர் பாடும், அல்லது



கற்றுத் தரும் உருப்படிகள் ஏதோ பூர்வ ஜன்மத்து வாசனையை அவளுக்குள் தட்டிக் கொட்டி கிளர்த்திவிட்டது போல், பெற்றதை நான்கு மடங்காக்கி வெளிப்படுத்துகிறாள்.

இதுநாள்வரை அமானுஷ்யங்களில் அவ்வளவாக நம்பிக்கை இல்லாதிருந்த பஞ்சாபகேசனுக்கு, சமயத்தில் பாப்பாவின் திறமையைக் கண்டு பயமாய்க் கூட இருந்தது. இந்த வேகத்தில் போனால், இன்னும் ஆறு மாசத்தில் பாப்பாவுக்கு குருவே தேவையில்லை என்ற நிலைமைகூட வரலாம்.

சுந்தரி - சத்தியமூர்த்தி ஹிண்டுவில் கொடுத்த விளம்பரத்தைக் கண்டு இந்தப் பணிக்கு விண்ணப்பித்திருந்தார் பஞ்சாபகேசன்.

அபஸ்வரங்களைச் சகியாத, கச்சேரி தரத்துக்கு உயரக்கூடிய குழந்தை மேதைக்கு, பாட்டு வாத்தியார் தேவை. தினமும் வீட்டுக்கு வந்து கற்றுத்தர வேண்டும். சன்மானம் எவ்வளவாயினும் தடையில்லை. விண்ணப்பிக்க, அஞ்சல் பெட்டி எண் : ....

ஃப்ளாட் வாங்கிய கடனை அடைப்பதற்குக் கஷ்டப்பட்டுக் கொண்டிருந்ததால்தான், பஞ்சாபகேசன் விண்ணப்பித்தார். ஆனால் பாப்பாவின் திறமை அவருடைய அடுக்கு மாடிக் கவலைகளை இடிந்து விழச் செய்துவிட்டது.

ஊஞ்சல் பலகையில் அமர்ந்த படி ரங்கசாமி தம்மை 'இண்டர்வியூ' செய்தது அவருக்கு நன்றாக நினைவிருந்தது. சுந்தரியும் சத்தியமூர்த்தியும் பாப்பாவைப் பிடித்துக் கொண்டு பின்னால் நின்றார்கள். ஒரு மல்டிநேஷனல் கம்பெனியின் நேர்முகத்தில் கேட்கக் கூடிய கேள்விகளுக்கு அவர் பதில் சொல்ல வேண்டியிருந்தது. மூன்று பேரை மேடையேற்றிய ஆசிரியர் என்றும் பாராது, தம்மைப்பாடச் சொல்லி பரீட்சிப்பார்களோ என்றுகூடச் சற்று சந்தேகம் வந்தது.

திடீரென்று 'மூட்' வந்த பாப்பா, 'ஸ்ரீ ரகுவர..' என்று அழுத்தந் திருத்தமாகப் பாட ஆரம்பித்ததும் ஸ்தம்பித்துப் போனார் பஞ்சாபகேசன். அத்தனை திருத்தம், சுத்தம், அனாயாசம்.

ஃப்ளாட்டை மறந்தார்; தவணைகளை மறந்தார் - பாப்பாவுக்குப் பாட்டு கற்றுத் தரும் பேறு வாய்த்ததே பெரிதாகப் போய் விட்டது.

ஃபீஸ் தொகையை ரங்கசாமி குறிப்பிட்ட

சீதா ரவி

தும்தான் அவருக்கு மீண்டும் ஃப்ளாட் ஞாபகம் வந்தது. அதற்கான மாதத் தவணையில் சரிபாதி பாப்பாவுக்கு எடுக்கும் டியூஷன் மூலம் கிடைத்துவிடும் என்பது எத்தனை பெரிய விஷயம்!

ஆனாலும் இவ்வளவு சீக்கிரத்தில் பாப்பா தயாராகிவிடுவாள் என்று அவர் கணக்குப் போடவில்லை. எதிர்பார்த்ததைக் காட்டிலும் இரண்டாண்டுகள் முன்னதாகவே மேடையேறத் தயாராகியிருந்தாள்.

'**தா**யே திரிபுரசுந்தரியை' முடித்துவிட்டு, தம்பூராவைக் கீழே வைத்த பாப்பாவை ஒருவித பயபக்தியோடு பார்த்தபடி உட்கார்ந்திருந்த சுந்தரி - சத்தியமூர்த்தியைப் பார்த்துச் சொன்னார் பஞ்சாபகேசன் :

"பாப்பாவுக்குக் கச்சேரி பண்றதுக்கு ஆயிடுத்து... இனிமே எனக்கு ஜோலி குறைவுதான்..!"

"ஊஹூம்... அப்படிச் சொல்லக்கூடாது. இனிமேதான் உங்க ஜோலியே ஆரம்பிக்கறது..!" சத்தியமூர்த்தி இடைமறிக்க, சுந்தரி, "நன்னாயிருக்கே...!" என்று ஆரம்பித்து, பாப்பாவின் அரங்கேற்றத்துக்குப் பாட்டுப் பட்டியல் தயாரிப்பதிலிருந்து, பஞ்சாபகேசன் ஆற்ற வேண்டிய பெருங்கடமைகளை விவரித்தாள். எந்தெந்த சபாக்களில் ஒப்புக் கொள்ளலாம்; யார் யாரைப் பக்க வாத்தியம் போட்டுக் கொள்ளலாம். அதனினும் முக்கியமாக, யாரைப் போட்டுக் கொள்ளக் கூடாது. ஆரம்பத்திலேயே சப் சீனியர் ஸ்லாட் கேட்டால் என்ன? கல்யாணக் கச்சேரிக்கு ரேட் பேச, தனியே ஒரு ஏஜெண்ட் போட்டுவிடலாமா? அமெரிக்கா டூர் வந்தால், (படிப்புக்குப் பழுது வராமல் கோடை விடுமுறையில்தான்) ஒப்புக் கொள்ளலாமா? கச்சேரி ஒலிப்பதிவுகளை காசெட் கம்பெனிகளுக்கு விற்க வேண்டுமானால் என்ன பண்ண வேண்டும்...?

இத்தனை முடிவுகளெடுக்க பஞ்சாபகேசன் சார் அல்லவா வழிகாட்டியாக வேண்டும். அவ்வாறிருக்க கொஞ்சமும் தீர்க்க தரிசனம் இன்றி 'இனி எனக்கு ஜோலி இல்லை' என்று அவர் எவ்வாறு சொல்லலாச்சு! உரிமையோடு சுந்தரி கடிந்து கொள்ள, பாப்பா திடீரென்று பெரிசாக விசும்பி விசும்பி அழ ஆரம்பித்தாள்.

"ஏன் பாப்பா அழறே...?" என்று சத்தியமூர்த்தியும் அழுதுவிடுவான் போல் உருக...

"அழுதா தொண்டையைப் புடிச்சுக்கும். அப்புறம் எப்படிப் பாடறது? உடனே கண்ணைத் துடை!" என்று கஷ்டப்பட்டு அழுகையை அடக்கியபடி சுந்தரி அதட்ட,

பாப்பா கண்ணைத் துடைத்துக் கொண்டே இன்னும் பலமாக அழுதாள்.

முதலில் ஸ்தம்பித்த பஞ்சாபகேசன் சற்று யோசித்துவிட்டு, "தலையை வலிக்கிறதா பாப்பா?" என்றார் அப்பாவித்தனமாக.

வேக வேகமாக மறுத்து, பாப்பா தலையை ஆட்டினாள், ஜிமிக்கிகள் கன்னத்தில் வந்து மோதுவதைப் பொருட்படுத்தாமல்.

"பின்னே, ஏன் அழறே...? பசிக்கறதா?"

"ஊஹூம்..." விசும்பலிடையே பாப்பா முனக,

பஞ்சு ஸாரின் பஞ்சு மனம் வெதும்பி அவருக்கே அழுகை முட்டிக் கொண்டு வந்துவிட்டது.

அவருக்குக் காப்பி எடுத்து வந்த சத்தியமூர்த்தியின் அம்மா, பாச மலர் காட்சிபோல் எல்லோரும் மூக்குறிஞ்சிக் கொண்டு உட்கார்ந்திருப்பதைப் பார்த்துவிட்டு, "திருஷ்டி!" என்று சாம்பிராணிக்குத் தணல் தயாரிக்கப் போனாள்.

பஞ்சு ஸார் காப்பியைக் குடிக்காமல் பாப்பாவின் முகத்தைப் பார்த்தபடி இருக்க,

சுந்தரி பொறுமை இழந்து,

"எதுக்கு அழறேன்னு சொல்லிட்டு அழுது தொலையேன்டீ பாப்பா!" என்று ஓர் அதட்டு அதட்டினாள்...

"பஞ்சு ஸார் போகக்கூடாது!" என்று உச்சஸ்தாயியில் கேவினாள் பாப்பா.

பாளையம்பட்டி பஞ்சாபகேசன் பெரிய சங்கீத பரம்பரையில் வந்தவர்தான்... எத்தனையோ மகாவித்வான்களின் சங்கீதத்தை அவர் பிறந்தது முதலே கேட்டு வருகிறார். நாதஸ்வர மேதைகளின் தோடியும் கேதாரகௌளையும் அவரை நெக்குரு

ஷாமுக்கு ஷாகி!

யார் யாருடனேயோ கிசுகிசுக்கப்பட்ட நடிகர் ஷாம், வதந்திகளுக்கு முற்றுப் புள்ளி வைத்துவிட்டார். ஷாமின் காதலி கஷிகா, பஞ்சாபி முஸ்லிம். "இப்படி திடீர்னு கல்யாணம் பண்ணினா ரசிகைகள் மத்தியில மார்க்கெட் குறையாதா?" என்று எடக்குமடக்காகக் கேட்டால்,

கச் செய்ததுண்டு; முதிர்ந்த வைணீகர்களின் வீணா கானமும், தேர்ந்த வித்வான்களின் குழலிசையும் அவர் இதயத்தைக் கரைத்த துண்டு; பெரிய பெரிய பாடகர் / பாடகி களின் சுஸ்வர சங்கீதம் அவர் செவிகளில் தேனெனப் பாய்ந்ததுண்டு... ஆனால் அந்த இன்பங்களையெல்லாம் காட்டிலும், அவ ருக்கு மிகப் பெரிய இன்பமாய்த் தோன்றி யது பாப்பா அழுதுகொண்டே அன்று பேசிய அந்த மூன்று வார்த்தைகள்தான்!

ஆனால், மூன்று வயது வரை பேசா திருந்த பாப்பா, தனது பதின்மூன்றாவது வயதில் தன்னையும் அறியாமல் ஓர் அசரீரி வாக்கைப் பேசியிருந்தாள் என்பதை பஞ் சாபகேசனும் உணரவில்லை... பாப்பாவின் பெற்றோரும் உணரவில்லை. ஏன் பாப்பாவேகூட அதை உணரவில்லை.

நாள் பார்த்து, சபா பார்த்து, செகரடரி யைப் பார்த்து, பாப்பாவின் அரங்கேற்றத் துக்கு ஏற்பாடாகிவிட்டது.

ரங்கசாமிதான் ரசிகர் மன்ற உறுப்பினர் போல், வேலைகளை இழுத்துப் போட்டுக் கொண்டு செய்தார்.

சத்தியமூர்த்தியின் அம்மா இதைச் சுட்டிக் காட்டியபோது, "ஜஸ்ட் யூ வெயிட் மாமி... இன்னும் ஒண்ணு இரண்டு வருஷ மானா, பாப்பாவுக்கே ரசிகர் மன்றம் வருதா இல்லியா பாருங்க... அப்புறம் போஸ்டர், கட் அவுட்னு ஜமாய்ச்சுடலாம்."

இரண்டு வருடங்களில் பாப்பாவுக்கு ரசிகர் மன்றங்கள் உருவாகாவிட்டாலும் தனி வெப்ஸைட் உருவாகியிருந்தது - ஸரிகமபாப்பா@யாஹூ.காம்.

அதில் அந்தந்த மாதத்துக்கான கச்சேரிப் பட்டியல்கள்; அடுத்த மாதத்துக்கு 'புக்' ஆகி யிருந்த தேதிகள்; இன்னும் ஒப்புக் கொள் வதற்கு மிச்சமிருந்த தேதிகள்; பாப்பாவின் வாழ்க்கைக் குறிப்பு; ஆதி நாள் முதல் அவ ளைப் பற்றி வந்த பத்திரிகைச் செய்திகள் (அவள் கத்தி கப்பல் செய்து வைத்த பேப்பர் கட்டிங்குகளைக் கூட பிரித்து நீவி மீண்டும் ஒட்டி சரி செய்து பைல் பண்ணியிருந் தானே ரங்கசாமி), மூன்று வயதில் வாயில் விரல் போட்டுக் கொண்டிருந்த வண்ணப் படம், பஞ்சாபகேசன் சாரிடம் பாட்டு கற்றுக் கொள்ளும் போட்டோ; சூடிதாரில் சைக்கிள் விடும் படத்துக்குப் பக்கத்திலேயே, தம்பூரா மீட்டியபடி தன்னை மறந்து பாடும் ஸாஃப்ட் லைட்டிங் ஸ்டூடியோ பிக்சர் என்று பாப்பாவைக் காட்சிப்படுத்தினார்கள். அவள் கச்சேரியிலிருந்து சில இசைத் துளி களும் அவள் பாடிய டீ.வி. சீரியல் டைட் டில் சாங்கின் முழு ஒலிப்பதிவும்கூட அந்த இணைய தளத்தில் கேட்கக் கிடைத்தது.

திட்டமிட்டபடி அத்தனை வாய்ப்பு களும் வர, பாப்பாவை அவற்றை ஏற்கச் செய்த பெற்றோர், சினிமாப் பாட்டு வாய்ப்பை மட்டும் பதினெட்டாம் வயது வரை புறக்கணித்து வந்தார்கள்.

''வார்த்தைகள்னாம் கன்னா பின்னான்னு இருக்கு... குழந்தையைப் பாட வைக்கிறதாவது?" என்றாள் சுந்தரி.

''உரக்க சொல்லாதீங்க... அப்புறம் 'கன்னா பின்னா'ன்னே ஆரம்பிச்சு ஒரு சினி மாப் பாட்டைப் போட்டு ஹிட் ஆக்கிடு வாங்க..'' என்று கிண்டலடித்தார் ரங்கசாமி.

"நான் ஏன் சினிமாவில பாடக்கூடாது?" என்று கொஞ்சமும் முரண்டு பண்ணாமல் சொன்ன பேச்சைக் கேட்டுக் கொண்டு பஞ்சு சாரின் பாட்டு கிளாஸ்களில் மகிழ்ச்சி கொண்டாள் பாப்பா.

சினிமாப் பாடல்களைத் தடை செய்த தன் மூலம், அவள் வாழ்விலிருந்து சிருங்கார ரஸத்தைக் கண்ணியமாக வடிகட்டி வைத்திருப்பதாகப் பெற்றோர் புளகாங்கிதம் கொள்ள, அனாதிகாலமாக அண்ட சராசரங்களையும் ஆட்டிப் படைத்து வரும் அந்த ரஸம், மைசூர் ரசத்தின் காரம் மணம் குணமுடனும், எலுமிச்சை ரசத்தின் சுளீர் சுவையுட னும், பைனாப்பிள் ரசத்தின் அசட்டுத் தித்திப்புடனும், தினசரி வைக்கும் பருப்பு ரஸத்தின் பக்குவத்துடனும் அவள் வாழ்க் கைக்குள் கசிந்து வந்து கொண்டிருந்தது - வலைத்தளம் வழியாக.

(தொடரும்)

"ஐயையோ, கல்யாணத்துக்கு அப்புறம்தான் நிறைய பேர் சாதிச்சிருக்காங்க. அதனால எனக்கு பெண் ரசிகைகள் அதிகமாவாங்கன்னு எதிர்பார்க்கிறேன்" என்கிறார்.

- அப்பு



அடிக்கடி கோபம் வருகிறதா?

நாளமில்லா சுரப்பிகளுள் மிக முக்கியமானது தைராய்டு சுரப்பி. இதில் சுரக்கும் தைராக்சின் என்னும் (ஹார்மோன்) நீர், உடல் வளர்ச்சி, மூளை வளர்ச்சி மற்றும் ஆண், பெண் உறுப்புகள் முதிர்ச்சி பெறுவதற்கும் உதவுகிறது. இத்தகைய முக்கியம் வாய்ந்த தைராய்டு சுரப்பி தொண்டைப் பகுதியில் மூச்சுக் குழாய்க்கு முன்பாக பட்டாம்பூச்சி வடிவத்தில் அமைந்துள்ளது.

தைராக்சின் கூடுதலாகவோ அல்லது குறைவாகவோ சுரந்தால் பல்வேறு குறைபாடுகள் உண்டாகிறது.

மிகை தைராய்டு : பசி அதிகமாக இருக்கும். அடிக்கடி சாப்பிட்டாலும் உடல் மெலிந்துக் கொண்டே போகும். அடிக்கடி மலங்கழியும். நாடித் துடிப்பு அதிகமாக இருக்கும். சாதாரண குறைகளை கூட பொறுத்துக் கொள்ள முடியாமல் கோபம் வரும். சிலருக்கு கண் விழிகள் பெரிதாக முப்புக் கொண்டு பிதுங்கலாக வெளியே தள்ளிக் கொண்டு விகாரமாக தெரியும். தைராய்டு நீர் அதிகம் சுரப்பதால் நஞ்சு கலந்த வீக்கம், அதாவது விஷக்கட்டி வரும். மாத விலக்குத் தொந்தரவு, கால் வீக்கம், மூட்டுவலி ஏற்படும். ஞாபகசக்தி குறையும், வேலைகளில் ஈடுபாடற்ற தன்மையும் தோன்றும். பெண்கள் கருத்தரித்தலில் தடை ஏற்படும். பல வருடங்களாக சாதாரண கட்டியாக இருந்து புற்று நோய் கட்டியாக மாறலாம். அப்போது அறுவை சிகிச்சை மட்டுமே பரிகாரம். கதிர்வீச்சு சிகிச்சையும் அளிக்கலாம்.

இன்று வேகமாக வளர்ந்து வரும் அணுக்கதிர் மருத்துவத்தில் இத்தகைய நோய்களை கண்டுபிடிப்பதற்கும், குணப்படுத்துவதற்கும் ஐசோடோப் எனப்படும் அணுக்கதிர் மருந்து உபயோகப்படுகிறது.


கழுத்தில் ஏதேனும் கட்டி வந்தால் குழந்தைகள் படிப்பிலும், வளர்ச்சியிலும் மந்தமாக காணப்பட்டால் சுரப்பிகளில் குறைபாடு உள்ளது என்று அர்த்தம். இதனை போக்குவதற்கு தைராய்டு சுரப்பி பரிசோதனை செய்து மருத்துவ சிகிச்சைகள் பெற வேண்டியது மிக முக்கியமாகும்.

டாக்டர் ஆர். ராம்குமார் MBBS, DRM, RSO, DIT (MAHE) VONM (Germany) VFNM (USA)

R.K. Diagnostic Centre

Madras Isotope Laboratory & Research Centre

60, சாமி பண்டாரம் தெரு, சிந்தாதிரிப்பேட்டை, சென்னை - 2. போன் : 8551712, 8533595





கல்கி

தமிழ்த்திரு நாடுதன்னைப் பெற்ற
தாயென்று கும்பிடடி பாப்பா
- பாரதியார்.


புடின் விடுத்த அறிக்கை!

"பாகிஸ்தானுடன் நான்காவது யுத்தத்துக்கு நாங்கள் தயார்!" என்று நமது துணைப் பிரதமர் முழங்கியிருப்பது இன்றையச் சூழலில் வீரமும் அல்ல; விவேகமும் அல்ல. அந்த முழக்கம் குஜராத் தேர்தலில் பி.ஜே.பிக்கு வெற்றியைப் பெற்றுத் தரலாம். ஆனால், அந்த வெற்றிக்கு இந்த தேசமே ஒரு விலை கொடுக்க வேண்டும் என்று அத்வானியும் வாஜ்பாயும் எவ்வாறு எதிர்பார்க்கலாம்!

பாகிஸ்தானுடனான இப்போதைய பிரச்னை என்பது, எல்லை கடந்து ஊடுருவும் பயங்கரவாதம்தான். இதனை நேருக்கு நேர் யுத்தம் செய்து எதிர் கொள்ள முடியாத அளவுக்கு இன்று பாகிஸ்தான் வசம் அணு ஆயுதங்கள் உள்ளன. அங்கு நடைபெறும் ஆட்சியோ ராணுவ அதிபர் தலைமையிலான தலிபான் ஆதரவு நிர்வாகமாக இருக்கிறது. பாக்.



2002 டிசம்பர் 15
சித்ரபானு கார்த்திகை 29
மலர் : 61
இதழ் : 20



அரசாங்கம் வசமுள்ள அணு ஆயுதங்கள், வெறி பிடித்து அலையும் பயங்கரவாதிகளின் கைகளுக்குப் போகக்கூடிய அபாயம், ஒவ்வொரு கணமும் அச்சுறுத்துகிறது.

இதை அத்வானி உணராவிட்டாலும் இந்தியாவுக்கு வந்துள்ள ரஷ்ய அதிபர் புடின் நன்றாகவே உணர்ந்து, அறிக்கையும் விடுத்திருக்கிறார். உலக நாடுகள் அனைத்துமே பாகிஸ்தானை வற்புறுத்த வேண்டும் என்றும் தெரிவித்திருக்கிறார்.


எனினும் புடின் இந்தியா வந்தது, பாக். பற்றி நம்மை எச்சரித்துப் போவதற்கு அல்ல...! பிரதமர் வாஜ்பாயுடன் அவர் அரசியல் உறவுகள் தொடர்பான ஒப்பந்தங்களை விவாதித்துக் கொண்டிருக்க, நமது பாதுகாப்புத்துறை அமைச்சர் பெர்னாண்டஸ், ரஷ்யத் தொழில் - விஞ்ஞான - தொழில்நுட்ப அமைச்சர் கிளெபனோவ்வுடன் ராணுவ உபகரணங்கள் வாங்கும் ஒப்பந்தம் பற்றிப் பேசிக் கொண்டிருக்கிறார்.

கடந்த ஒரு மாதத்தில், இருமுறை இந்தியா வந்து போயிருக்கிறார் கிளெபனோவ். ரஷ்யாவிடம் உள்ள ஒரு விமானம் தாங்கிக் கப்பலை **(aircraft carrier)** இந்தியாவுக்கு விற்றுவிடும் முயற்சி மும்முரமாக நடக்கிறது. இத்தகைய போர்க்கப்பல் ஒன்று நம்மிடம் ஏற்கெனவே இருந்தாலும் அதன் ஆயுள் முடியும் தருவாயில் இருக்கிறது. ரஷ்யா நம்மிடம் விற்க முயற்சி செய்வதோ, ஏற்கெனவே தீப்பிடித்து பகுதியளவு எரிந்து போன கப்பலை. கப்பலையும் அதனுடனான நாற்பது விமானங்களையும் ருஷ்யாவே சீர் செய்து, பின்னர் இந்தியாவுக்கு விற்பதற்குத்தான் இப்போது பேரம் படிந்து கொண்டிருக்கிறது.

அதிபர் புடினின் நல்லெண்ண விஜயம் இந்த பேரத்தை ரஷ்யாவுக்குச் சாதகமாகப் படியவைத்துவிடும் என்று ரஷ்ய தரப்பில் பெரிய எதிர்பார்ப்பு இருக்கிறது.

இதைத் தவிர, ரஷ்ய நீர்மூழ்கிக் கப்பல்களை நமக்குக் குத்தகைக்கு விடுவதற்கான முயற்சிகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இந்த ராணுவ பேரங்கள் மூலம் ரஷ்யா பெறக்கூடிய லாபம், மேலும் நவீன நீர்மூழ்கிக்



கப்பல்களை அந்நாடு உருவாக்கப் பயன்படும் என்பது தெரிய வருகிறது.

ரஷ்யாவானாலும் சரி, அமெரிக்காவானாலும் சரி, வளர்ந்து வரும் நாடுகளிடம் போர் ஆயுதங்கள் விற்றுத் தங்கள் பொருளாதாரத்தை வளப்படுத்தி வருகின்றன.


ஆனால், இன்றைய சூழலில் எத்தனை வலிமையான ஆயுதத்தை வாங்கினாலும் அர்த்தமற்றது என்றாகி வருகிறது. வானில் பறக்கும் மிகப் பெரிய பயணிகள் விமானத்தை, தரையிலிருந்தபடி வீழ்த்தும் அளவுக்கு, மிக வலிமையான ஏவுகணைகளை பயங்கரவாதிகள் சேகரித்தும் தயாரித்தும் வைத்துள்ளனர். அறிவிக்கப்பட்ட யுத்தமாக இன்றி, தங்கள் மனம் போன போக்கில் தாக்குதல் நடத்துகின்றனர். இத்தகைய சூழலில் எத்தனை பெரிய கப்பல் வாங்கினாலும் பயங்கரவாதத்தின் அச்சுறுத்தலைச் சமாளிக்க இயலாது.

அத்தியாவசியமான ராணுவ உபகரணங்களை வாங்கித்தான் ஆக வேண்டும். ஆனால் அவற்றின் விலைக் குறைப்புக்கு வலுவாக வாதிட வேண்டும். அரசியல் அயலுறவுப் பேச்சு வார்த்தைகளும் இதர கலாசார ஒப்பந்தங்களும் வேறு; ராணுவ உபகரண பேரம் வேறு என்று பிரித்து நோக்கி, தாட்சண்யமின்றி புடினுடன் பேரம் பேச வேண்டும். வரிப்பணம் வீணாகாமல் காக்க வேண்டும்.

அதேசமயம் புடின் விடுத்த எச்சரிக்கையை நமது அரசு கவனத்தில் கொள்ள வேண்டும். பாக். ஆதரவு பயங்கரவாதம் அடங்கவும் ஒடுங்கவும் ராஜதந்திரம் கையாளப்பட வேண்டும்.

'பாகிஸ்தானுக்கு எதிராக அமெரிக்கா வன்மையாகச் செயல்படாது. அதற்குப் பதில் ருஷ்யாவை முடுக்கிவிட்டு, பாகிஸ்தானை நாம் வழிக்குக் கொணரலாம். சொல்லப் போனால், இன்னொரு தாஷ்கெண்ட் மாநாட்டுக்குக்கூட வழி வகுக்கலாம். அவ்வாறு உடன்பாடு ஏற்படுவதே நமது நாட்டின் ராணுவச் செலவுகள் குறையவும், இரு நாடுகளின் பொருளாதாரம் முன்னேறவும் ஒரே வழி. இதற்கான ஆரம்ப முயற்சியாகத் தெரிகிறது புடின் - வாஜ்பாய் வெளியிட்டிருக்கும் டெல்லி அறிக்கை. ○

தேவை மருந்து—20



அள்ளு... தள்ளு... அள்ளு... தள்ளு...

பாராட்டு மழை இன்னும் விட்டபாடில்லை. "வாரா வாரம் நீங்கள் தரும் செய்முறைக் குறிப்புகள் மிகுந்த பயனுள்ளதாக இருக்கின்றன டாக்டர்" என்று நிறையப் பேர் மகிழ்ச்சியுடன் தெரிவிப்பதால், இந்த வாரம் அஷ்வகந்தா கல்பம் பற்றி எழுதுகிறேன். தூக்கம் வராமல் தவிப்பவர்கள், பயம், டென்ஷன், மன அசதி கொண்டவர்களுக்கு மிகவும் பலன் தரும்.

அஷ்வகந்தா கல்பம்

அமுக்குராங்கிழங்கு என்று ஒரு வகை காய்ந்த கிழங்கு, எல்லா நாட்டு மருந்துக் கடைகளிலும் கிடைக்கும். 'நாட்டுஅமுக்குரா', 'சீமைஅமுக்குரா' என இரு வகையான கிழங்குகள் கிடைக்கின்றன. 'நாட்டுஅமுக்குரா' முடிச்சு முடிச்சாக இருக்கும். 'சீமைஅமுக்குரா' - வடநாட்டில் வளர்வது. உருண்டு நீண்டு, நார் குறைவாக இருக்கும். இரண்டுக்குமே குணம் ஒன்றுதான் என்றாலும், 'சீமை அமுக்குரா' கிழங்கில் இடித்துச் சூரணம் செய்வது சுலபம்.

சுத்தமான, புதிதான, அமுக்குராங் கிழங்குகளை வெயிலில் காய வைத்து, இடித்து, சலித்து, வஸ்திர காயம் செய்து சீசாவில் பத்திரப் படுத்திக் கொள்ளவும். இந்தச் சூரணத்தை, ஆவியில் வேக வைத்தும் தயாரிக்கலாம்.

ஒரு லிட்டர் பசும்பாலில், அரை லிட்டர் நீர் கலந்து, இட்லி பானையின் அடியில் ஊற்றி, துவாரமுள்ள இட்லித் தட்டுக்களில் மெல்லிய துணியைப் பரப்பவும். அமுக்குராங்கிழங்கை, சிறு சிறு துண்டங்களாக வெட்டி, பத்து நிமிடம் ஆவியில் வேக வைத்து இறக்கவும். பிறகு வெயிலில் காய வைத்து இடித்து, சலித்து சூக்ஷ்மம் சூரணம் செய்து கொள்ளவும்.

இந்த அஷ்வகந்தா பொடியை, இரண்டு ஸ்பூன் அளவு எடுத்து நல்லெண்ணெயில் கலந்து சாப்பிட்டால் வாதத்துக்கு நல்லது. நெய் கலந்து சாப்பிட்டால் பித்தம் குறையும். தேன் கலந்து சாப்பிட்டால், கபப் பிரச்னை இருக்காது.

தினமும் இரவு படுக்கப் போவதற்கு முன், ஒரு தம்ளர் பாலில், இரண்டு ஸ்பூன் அஷ்வகந்தா



டாக்டர் எல்.மகாதேவன்

பொடியைச் சேர்த்து, சாப்பிட நல்லதொரு ஆரோக்கிய பானமாக அமையும். நோய் எதிர்ப்புச் சக்தி உண்டாகும். தேகத்துக்கு வலு உண்டாக்கும். நரம்புத் தளர்ச்சி நீங்கும். தூக்கம் கண்களை அள்ளும். மனக் கவலைகளை வெளியே தள்ளும்.

முதல் மூன்று ரஸங்களாகிய, இனிப்பு, புளிப்பு, உப்பு மூன்றுமே உடலைப் போஷிக்கக் கூடிய நரிஷிங் டேஸ்ட். அடுத்து வரக்கூடிய கசப்பு, காரம், துவர்ப்பு மூன்றுமே உடலை மெலியச் செய்யும் டீஜெனரேடிவ் டேஸ்ட்.

கசப்பு என்பது வாயுவும் ஆகாசமும் கொண்டது. கசப்பு வாயுவைக் கூட்டும், பித்தத்தையும் கபத்தையும் குறைக்கும்.

கசப்புக்கு அநேக மருத்துவ குணங்கள் இருக்கு. 'ஆமம்' எனப்படும் ஒரு வகை அஜீரண அவஸ்தையை மாற்றும். மெடபாலிஸம் சரியா நடக்காததனாலேயும், அக்னி முறையா இயங்காததாலேயும், ஆகாரம் சரியாக ஜீரணம் ஆகாமல், அபத்துவமாக ஜீரணமாகி, ஒரு வகை துஷ்ட ரஸத்தை உண்டு பண்ணும். இதற்கு 'ஆமம்'னு பெயர். இதை கவனிக்காமல் விடும்போது கொலஸ்ட்ரால் (எல்.டி.எல்) போன்றவை ஏற்படும்.

சரும நோய்கள், விஷ சம்பந்தமுள்ள நோய்கள், கிருமி நோய்கள், ஜுரம், பித்த விகாரங்கள் போன்றவற்றுக்கு நல்லது. ஆனால் ரொம்ப அதிகமாகச் சாப்பிட்டால் ஒரு வித வறட்சித் தன்மை, மனத்திலும் உடலிலும் வந்துவிடும், மலச்சிக்கல் உண்டு பண்ணும்.

கண்டங்கத்திரி, பாகல், வெட்டிவேர், பேய்ப்புடல், நில வேம்பு இதெல்லாம் திக்த ரஸத்துக்கு ஆதாரமானது.

'கடு' என்பது அக்னி வாயுவினால் ஆனது. வாயுவையும் பித்தத்தையும் கூட்டி, கபத்தைக் குறைக்கும். தொண்டையில் உண்டாகும் வியாதிகளையும் சோகத்தையும் போக்கும். அக்னி திபனம் - ஜீரணிக்கும் தன்மை - உண்டு. இரத்தக் குழாய்களில் அடைந்து கிடக்கும் துஷ்ட கபத்தையும், மேதஸ்ஸையும் கொழுப்பையும் மாற்றக் கூடிய தன்மை குறுமிளகுக்கு உண்டு. அதிகமாகப் பயன்படுத்தினால், நாவறட்சி, பைல்ஸ், நீர்க்கடுப்பு, மூர்ச்சை, அல்ஸர் இதெல்லாம் வரும்.

காயம், மிளகு, சேரான்கொட்டை, வாயு விளங்கம், மிளகாய் எல்லாமே கார வர்க்கம்தான்.

'கஷாய ரஸம்' என்பது துவர்ப்பு ரஸம். பூமியினாலும் வாயுவினாலும் ஆனது. இது உடம்பைச் சுருங்க வைக்கும் தன்மை கொண்டது. பித்தத்தையும், கபத்தையும் குறைக்கும், வாதத்தைக் கூட்டும். கொஞ்சம் ஹெவியானது. ரத்த சுத்தி பண்ணும் ஸ்தம்பன குணமுண்டு. அதிக ரத்தப் போக்குக்கும் வயிற்றுப் போக்குக்கும் துவர்ப்பு குணமுடைய மருந்து தரப்படுவது வழக்கம்.

பெண்களுக்கு மாதவிடாய்க் காலங்களில் உதிரப் போக்கு அதிகமாக இருந்தால், துவர்ப்பு பிரதானமாக இருக்கின்ற புஷ்யானுக சூரணத்தைத் தேனில் கொடுப்பது வழக்கம்.

'கபித்தாஷ்டக சூரணம்' என்பது விளாம்பழத்தில் செய்யப்பட்டது. இதுவும் துவர்ப்பு சமாசாரம்தான். வயிற்றுப் போக்கு, கிரகணி, அதிசாரம் எல்லாவற்றையும் உடனே நிறுத்தும். ஆஸ்ட்ரின்ஜென்ட் டேஸ்ட்டுக்கு நல்ல குணமுண்டு. நம்ப வீட்டிலே தயாரிக்கக் கூடிய தேனீரும் ஆஸ்ட்ரின்ஜென்ட்தான். பால் சேர்க்காமல் டீ குடிச்சாலே மலத்தை இறுக்கும்தான்.

துவர்ப்புச் சுவையை அதிகமாகச் சாப்பிட்டால் நாவறட்சி ஏற்படும். வாதக் கோபம், வயிற்று உப்புஸம், இருதய ரோகம் வரும்.

கடுக்காய், தாணிக்காய், தேநீர், சில வகைத் தேன் இவையெல்லாம் கஷாய ரஸம் கொண்டவை.

சுவைகள் எல்லாமே பஞ்சபூதங்கள். அறுசுவை என்பது இரண்டிரண்டு சுவைகளின் சேர்க்கைதான். ஒவ்வொரு சுவையும் மனித உடலின் தாதுக்களையும், தோஷங்களையும் பாதிக்கின்றன என்பதை மனத்தில் கொண்டு, உங்கள் பிரக்ருதிக்கு ஏற்ப சாப்பிடவும்.

"வீடு மாறிப் பார்த்தேன். தொழிலை மாற்றிப் பார்த்தேன். கடையை மாற்றிப் பார்த்தேன். எதிலும் முன்னேற்றமில்லே. அப்புறம் ஒரு சின்ன மாற்றம் ஏற்படவும் இப்ப வசதியாயிருக்கேன்..."

"என்ன மாற்றம் செஞ்சீங்க?"

"கட்சி மாறினேன்!"

- தேனி முருகேசன்



பலன் தரும் பண்ணை நிலம் – பழத்தோட்டம் – சொந்தமாக வாங்குதல் – செய்தி

"கல்கி வார இதழ்கள் 5 ஆண்டுகளுக்கு அன்பளிப்பு"

வாலாஜாபாத அருகே (காஞ்சிபுரம் செல்லும் வழி) பாலாற்றங்கரையில் ஆசூர் கிராமத்தில் முன்பு அறிவித்த திட்டத்தின்படி ஏற்றுமதித் தரம் வாய்ந்த மாங்கன்றுகள் ஏற்கெனவே நடப்பட்டு பராமரிக்கப்பட்டு வருகின்றன. பலர் அந்த நிலங்களை வாங்கியுள்ளனர்.

புதிய திட்டத்தின்படி 1200 ச.அடி உள்ள பண்ணை நிலங்கள் ரூபாய் 20,000/– மட்டுமே

உங்கள் வாழ்நாள் முழுமையும், பிறகும் உங்கள் குடும்பத்திற்கு ஆண்டுக்கு ஒரு முறை கணிசமான வருமானம் கிடைக்கும். முழு தொகையும் மொத்தமாக கொடுப்பவர்களுக்கு சலுகை விலையில் ரூ.18,000/– மட்டுமே.


உடனே எங்கள் செலவில் பத்திரம் பதிவு செய்து தரப்படும். விலை கொடுத்து வாங்கிய நிலம்உங்களுடையதாகிவிடுகிறது.

அந்த நிலத்தை கட்டாந் தரையாக விடாமல் நல்ல வருவாய் தரும் மாங்கன்றுகளை நட்டு, உங்களுக்குக் கவலையில்லாமல் நாங்களே பராமரித்துத் தருகிறோம்.

5 ஆண்டுகளுக்குப் பிறகு மாங்கனிகள் விற்பனை மூலம் கிடைக்கும் வருவாய் வாழ்நாள் முழுமையும் உங்களுக்குத்தானே.

5 அல்லது 6 ஆண்டுகளில் சுவையான மாங்கனிகள் உள்நாட்டில் வெளிநாட்டில் விற்பனை மூலம் ஆண்டிற் கொருமுறை நல்ல வருமானம் ஈட்டலாம்.

ரூ.18,000 மொத்தமாகக் கொடுக்க முடியாதவர்களுக்கு மாதம் ரூபாய்.500 வீதம் 40 மாதாந்தர தவணைகளில் செலுத்தும் தவணைமுறைத் திட்டமும் உண்டு.



(வளர்ந்த செடியின் அருகில் கலைமாமணி விக்கிரமன்)

இந்த புதிய திட்டத்தின்படி பண்ணை நிலங்கள் வாங்கும் அனைவருக்கும் ஐந்து ஆண்டுகளுக்கு வைரவிழா காணும் "கல்கி" வார இதழ்கள் அன்பளிப்பாக அனுப்பப்படும்.

மேலும் "இலக்கியப்பீடம்" எனும் உயர்தர மாத இதழ் ஐந்து ஆண்டுகளுக்கு அன்பளிப்பாக அனுப்பப்படும்.

மேலும் விவரங்களுக்கு.


<u>தொடர்பு கொள்க :</u> அன்னை ஆர்ச்சர்ட்ஸ் (பி) லிட்.,
3 ஜெயசங்கர் தெரு, மேற்கு மாம்பலம், சென்னை–600 033.
தொலைபேசி : 4812822
E-mail : manivikraman@yahoo.com
இப்படிக்கு வி.வி.எஸ். மணியன், இயக்குநர், அன்னை ஆர்ச்சர்ட்ஸ் (பி) லிட்.,



சபா கான்டீன்களில் நாவுக்கு விருந்தாக அளிக்கப்படும் ஐட்டங்களைப் பற்றி 'அறுசுவை விமர்சகர்' குப்புடு விமர்சித்த பகுதிகளிலிருந்து சூடான சில விள்ளல்கள் இதோ!

மியூசிக் அகாடமி : சங்கீதக் கச்சேரிகளுக்கும், கோர்ட் கச்சேரிகளுக்கும் இடையே அதிக காரமில்லை என்ற நினைப்புடன் காண்டீனில் நுழைந்தபோது, சிற்

குப்புடு ஸ்பெஷல்!





சீஸன் சிறப்புப் பக்கம்

றுண்டிகளில் அவ்வளவாக காரமுமில்லை - விகாரமும் இல்லை என்பது புலனாயிற்று. மெதுவடை துரித கதியில் வந்து சேர்ந்த போதிலும், மலபார் அடை தயாரிப்பில் காலப் பிரமாணம் இழுவையாகிவிட்டது. பருப்பை ஜன்யராகமாகக் கொண்ட அகர டிபனான அடையை அரை வேக்காடாகவோ அல்லது அரை வேக்காடுகளோ கையாண்டால் அபரிமிதமான ருசியை அடைய முடியாது. லேட்டாக வந்தாலும் ரோஸ்ட்டாக வந்த மலபார் அடை, அப்போதுதான் மேக்கப் முடிந்த கதகளி ஆட்டக்காரரின் வண்ணமுகம் போல பளபளவென்று ஜொலித்தது. கேளிக்கொட்டு மாதிரி சப்போர்ட்டாக அளிக்கப்பட்ட அவியல், ருசியின் குவியல் ஐயா! துக்கடாவாக இடம் பிடித்த வெல்லக் கட்டியும், உறைந்த நெய் விழுதும் அடை - அவியல் ஜமாவை மேல் ஸ்தாயியில் 'ஜிவ்'வென்று சஞ்சாரம் செய்ய வைத்தாலும், அன்று மென்று தின்ற முதல் அடை வயிற்றையும், அதன் விலை பர்ஸையும் முறையே கிள்ளவில்லை, கடிக்கவில்லை என்பதாலும், அடுத்த அடைக்கு ஆர்டர் கொடுத்துவிட்டு காண்டீனில் அடைபட்டுக் கிடந்தேன்.

மைலாப்பூர் ஃபைன் ஆர்ட்ஸ் :

மைலாப்பூர் என்றாலே வக்கீல்கள் நினைவுக்கு வந்தாலும், அன்று காப்பியைப் பற்றி காண்டீனில் நடந்த சதஸில் இரண்டு கட்சிகளும் வக்கீல் வைத்து வாதாடாத குறைதான். சர்ச்சை இதுதான் ஸ்வாமி! போர்டில் எழுதியிருந்த 'டிகிரி காபி' என்ற அந்த தேவ பானத்தின் வார்த்தை எழுத்துக்கள் (அதா



கப்பட்டது 'ஸ்பெல் லிங்') காபியா? அல்லது காப்பியா?' காப்பிதான் என்று வாதாடிய ஒரு ஸில்க் ஜிப்பா, "ஃபில்டரிலிருந்து கன்னிச் சொட்டாகத் தருவிக்கப்படும் சம்பிரதாய டிகாக்ஷனில் ஜனனமாகும் காப்பிதான் காப்பியே தவிர, 'இன்ஸ்டன்ட்' என்ற பெயரில் உலவிவரும் போலியை வேண்டுமானால் 'காபி' என்று 'ப்' பஞ்ச் இல்லாமல் கூறிக் கொள்ளலாம்' என்று பாய, "காபி"தான் சரி, அந்த ஒரிஜினல் பானத்தை 'காப்பி' என்று கொச்சைப்படுத்துபவர்கள் மகா பாபி என்று ஒரு மயில்கண் வேஷ்டி மறுக்க, ஒரே கலாட்டா. அருகில் இருந்த ஒரு 'சிந்தாத கலாநிதி' இடைமறித்து, 'சம்பிரதாயமாக டபரா-டம்ளரில் நொடியில் ஒரு பாட்டம் ஆற்றிச் சூடாக குடிப்பதுதான் காப்பி. கப்-அண்ட்சாஸரில் நாசூக்காக நாள் பூரா உறிஞ்சிக் குடிக்கப்படும் ஆறி அவலான திரவமே காபி என்று தன் தீர்ப்பை வழங்கி, தமக்காகக் கொண்டு வரப் பட்ட காப்பியை, சர்வர் சீனுவிடமிருந்து காலம் தாழ்ந்து விருது வாங்கும் சூப்பர் சீனியர் வித்வானின் எகத்தாளத்துடன் பெற்றுக் கொண்டார்.

நாரத கான சபா :

நேற்று மாலையில் சாப்பிட்ட பொடி தோசையைப் பற்றிக் கட்டாயம் சொல்லிவிட வேண்டும். இந்த தோசைக்காக பொடி நடை என்ன, நீண்ட பயணமே மேற்கொள்ளலாம்! பொன் நிறத்தில் மொறு மொறுவென்று நெய்விட்டு பௌர்ணமி நிலாமாதிரி வார்த்த அந்த தங்க ரேக்கை இரட்டையாக மடிப்பதற்குமுன், மிளகாய்ப் பொடியை உள் பகுதியில் சர்வாங்கமாகத் தடவி தயாரிக்கப்படுவதுதான் பொடி தோசை. ஆனால் அன்று நான் சாப்பிட்ட தோசையில் மிளகாய்ப் பொடி போடவில்லை என்று சிறப்பு நீதி மன்றங்களின் பொடி ஏறி (சாரி, படி ஏறி) சத்தியம் செய்வேன். உள்ளே போடப்பட்டிருந்தது சொக்குப் பொடி ஐயா! அவ்வளவு சுவை. அவ்வளவு ஈர்ப்பு. கச்சேரி நடுவில் யாருக்கும் தெரியாமல் ரகசியமாக அரியக்குடி பொடி போடுவதுபோல், சட்டென்று சபையிலிருந்து நழுவி, இன்னொரு பொடி தோசையையும் உள்ளே தள்ளிவிட்டு வந்தேன் என்றால் பார்த்துக் கொள்ளுங்களேன்!

தமிழ் இசைச் சங்கம் :

கோபாலகிருஷ்ண பாரதி அவர்கள் 'சபாபதிக்கு வேறு தெய்வம் சமானமாகுமா?' என்று ஆபோகியில் வினவியது போல, இரவில் 'சப்பாத்திக்கு வேறு டிபன் சமானமாகுமா?' என்று இட்லியை பூபாளமாகவும், சப்பாத்தியை நீலாம்பரியாகவும் பாவிக்கும் தமிழ் இன உணர்வோடு, அன்று இரவில் நான் சாப்பிட்ட இரண்டு சப்பாத்திகளையும் டால்டாவிற்கு பதில் வானிஷிங் க்ரீம் தடவித் தட்டியிருந்தார்களோ என்னவோ?



தெரியவில்லை! இள நங்கையின் பட்டுக் கன்னம் போல அவ்வளவு மிருது. அவ்வளவு பளபளப்பு. அவரவர் 'கர்மா'வை அவரவர் அனுபவிக்க வேண்டும் என்பதெல்லாம் வறட்டு வேதாந்தம் என்றாலும், நான் அன்று அனுபவித்த 'குருமா'வை அனுபவிக்காமல் விட்டிருந்தால், இந்த ஜன்மம் எடுத்ததின் பயன் இல்லாமல் போயிருந்திருக்கும். சப்பாத்தியை சர்வலகு பாணியில் உள்ளே தள்ளிய கையோடு, சூடாகக் குடித்த மசாலாபால் ஏப்ப ஒலிகளை 'சவால்-ஜவாப்' ரீதியில் ஏற்ற இறக்கங்களுடன் ஏவி விட்டு, அன்றைய பொழுதையும், சீஸனையும், வயிற்றையும், மனத்தையும் மங்களகரமாக நிறைவு செய்தது.

ஜே.எஸ்.ராகவன்



தங்க கிளாரினெட்!

ஏ.கேசி நடராஜனின் அப்பா சின்னகிருஷ்ண நாயுடு, ஒரு கிளாரினெட் வித்துவான். மாண்டலின் போலவே கிளாரினட்டும் மேற்கத்திய வாத்தியம்தான். அதில் அவர் கர்நாடக இசை வாசிக்க நடராஜனுக்குக் கற்றுக் கொடுத்தார். பிறகு பத்து வயதில் ஆலத்தூர் நடேசய்யரிடம் கர்நாடக இசையும், எளுப்பூர் நடேசப் பிள்ளையிடம் நாதசுரமும் கற்றுக் கொண்டார் ஏ.கேசி.

முதல் மேடைக் கச்சேரி செய்த போது ஏகேசிக்குப் பதினைந்து வயது தான். கச்சேரி முடிந்ததும் பெரிய பெரிய வித்துவான்கள் எல்லாரும் வியந்து போய்ப் பாராட்டினார்களாம்.

இந்தியா, மலேசியா, சிங்கப்பூர், ஸ்ரீலங்கா, லண்டன், ஜெர்மனி, கனடா, அமெரிக்கா என்று இந்த கிளாரினெட் கலைஞர் வாசிக்காத இடமில்லை.

சுவாமி சிவானந்தர் முன் ரிஷிகேஷில் இவர் வாசித்த போது 'கிளாரினெட் சாம்ராட்' என்று பட்டம் கொடுத்தாராம். மைசூர் மகாராஜா கொடுத்ததோ 'கிளாரினெட் சக்ரவர்த்தி'. நாகப்பட்டினம் நீலாயதாட்சி திருக்கோயிலில் ஏ.கே.சி. வாசித்தபோது, திருவாவடுதுறை டி.என். ராஜரத்தினம் பிள்ளை கொடுத்த பட்டம் மிக உயர்ந்தது. 'கிளாரினெட் எவரெஸ்ட்'. சிருங்கேரி சன்னிதானமும் விருது வழங்கியிருக்கிறது.

பகவான் சத்ய சாயிபாபா, திருச்சியில் இவர் வீட்டுக்கு வந்து தங்கியிருக்கிறார். திருச்சியில் சத்ய சாயி சேவா சமிதியின் செயலராக இருந்து, வருடா வருடம் அமர்க்களமாக இசை விழாவைத் தொடர்ந்து நடத்தியிருக்கிறார் ஏ.கே.சி. காஞ்சி காமகோடி பீடம் மற்றும் திருவாவடுதுறை ஆதீனம் இரண்டிலுமே ஆஸ்தான வித்வான்.

வால்ட் டிஸ்னி நிறுவிய இன்ஸ்டிட்யூட் ஆஃப் ஆர்ட்ஸ் பல் கலைக்கழகத்தில், இவரது சாதனைகளையும் உத்திகளையும் பற்றி, கலிஃபோர்னியாவில் பேராசிரியர் வில்லியம் பொவெல் என்பவர் ஆராய்ச்சி செய்து தீஸிஸ் தயாரித்திருக்கிறார்.

மலேசிய - சிங்கப்பூர் பயணங்களின்போது வாசித்துத் திரட்டிய நிதியை, டாக்டர் சுப்பையா ஸ்காலர்ஷிப் டிரஸ்ட்டுக்கு வழங்கியவர் ஏ.கே.சி.

கனடாவிலும், அமெரிக்காவிலும் பல்கலைக் கழகங்களில் கிளாரினெட்டில் கர்நாடக இசை பொழிந்து, விளக்கியவர். திருச்சி பிஷப் ஹீபர் கல்லூரியில், இந்தியப் பல்கலைக் கழகங்களின் தமிழ்ப் பேராசிரியர்கள் அமைப்பு, இவருக்கு 'இசைச் செல்வர்' விருது வழங்கியது.

1958ல், தங்கத்தால் ஒரு கிளாரினெட் செய்து, ஆரிய வைசியர்கள் திருச்சி கன்னிகாபரமேசுவரி கோயிலில் இவருக்குக் கொடுத்தார்கள். அந்தத் தங்க கிளாரினெட்டை அப்படியே தேசியப் பாதுகாப்பு நிதியில் சேர்க்கச் சொல்லிக் கொடுத்துவிட்டார் ஏ.கே.சி. நடராஜன்.


- **எஸ்.வி.என்.**

(ஏ.கே.சி. நடராஜனுக்கு நாரத கான சபா இந்த ஆண்டு 'நாதப்பிரம்மம்' விருது வழங்கிக் கௌரவிக்கிறது.)

சீஸன் சிறப்புப் பக்கம்

தாய்லாந்தின் இந்திய ஆதிக்கம் வடக்கு தெற்கு என்று இரு பகுதிகளிலிருந்தும் வந்திருந்தாலும், அதில் தென் இந்தியாவின் பங்கு அதிகமானது என்று ஜார்ஜ் கோர்ட்ஸ் மற்றும் சில சரித்திர ஆராய்ச்சியாளர்கள் ஒப்புக் கொண்டிருக்கிறார்கள். அதை உணர்த்தும் ஓர் உதாரணம் :

மகேந்திரவர்மன் என்று தன்னை அழைத்துக் கொண்ட கெமர் அரசன், கி.பி. 604 இல், தான் பெற்ற வெற்றிகளை நிலை நாட்ட மலையின்மீது ஈஸ்வரனுக்கு ஒரு கோயிலை எழுப்பி, மாபெரும் லிங்கம் ஒன்றைப் பிரதிஷ்டை செய்தான். இதை ஆராய்ந்த நீலகண்ட சாஸ்திரி கள் அதே கால கட்டத்தில் மகேந்திரவர்மன் என்னும் பல்லவ அரசன் தமிழக வரலாற்றில் புகழ் பெற்று விளங்கியதையும், காவிரி ஆற்றை எதிர்நோக்கியபடி திருச்சிராப்பள்ளிக் குன்றின் மீது அவனும் ஈசுவரனுக்கு ஒரு கோயிலை எழுப்பியதையும் சுட்டிக்காட்டுகிறார். இந்த இருவருடைய கல்வெட்டுகளில் காணப்படும் எழுத்துகளில், நெருக்கமான ஒற்றுமைகளை வெளிப்படுத்தி மூவாயிரம் மைல்கள் இடைவெளியில் உள்ள இரு மன்னர்கள் ஒரே பெயரை வைத்துக் கொள்வதும், ஒரே வகையில் கோயில் கட்டுவதும், அவர்களின் கல்வெட்டுகள் இரண்டும் ஒரே போல இருப்பதும் தற்செயலாக நிகழ்ந்திருக்காது என்று, நெத்தி அடி அடித்திருக்கிறார்.








• மகாபலிபுர கோயிலை ஒத்த பனோம் ரங் கோயில்

மன்னரை இறைவனாகப் போற்றி வணங்கும் தேவராஜ வழிபாடு என்ற சித்தாந்தம் தென் கிழக்கு ஆசியாவில் இருந்தது. கெமர் அரசர்கள் இறந்த பிறகு அவர்களுக்கு பட்டப் பெயர்கள் சூட்டப்படுவது இந்த தேவராஜ நெறியின் ஓர்



திருவெம்பாவையும்
திருப்பாவையும்
பதினைந்து நாள்
உற்சவமாய் இங்கு தமிழ்
தெரியாத தாய்லாந்து
பிராமணர்களால்
பாராயணம்
செய்யப்படுவதும்...

• பனோம் ரங்க் -
முகப்புத் தோற்றம்

தாய்லாந்தில் வீரப்பன்!


புன்னகை பூமி 7

ஆனந்த் ராகவ்

அம்சமாய் விளங்கியது. பாதன், லோகன் என்ற பட்டப் பெயர்கள் விஷ்ணு, சிவன், பிரம்மன் என்ற பெயர்களோடு இணைக்கப்பட்டு மறைந்த மன்னர்களுக்குப் புதிய பெயர்களாக வைக்கப்பட்டன. நான்காம் ஜெயவர்மன் 'பரம சிவப் பாதன்' என்றும், மூன்றாம் ஜெயவர்மன் 'விஷ்ணு லோகன்' என்றும் பெயரிடப்பட்டார்கள்.

இந்த நெறி சோழ சாம்ராஜ்யத்தில் பின் பற்றப்பட்டு வந்தது என்கிறார் டாக்டர் திரு நாவுக்கரசு. சோழ அரசர்கள் இறந்துவிட்டால் சவக்குழியில் சிவலிங்கம் அமைத்து 'பள்ளிப் படை' என்ற கோயில்கள் எழுப்பப் பட்ட வழக்கம் இருந்திருக்கிறது. இந்த வழக்கங்களே தென்கிழக்கு ஆசியாவில் தேவராஜ நெறியாக உருமாறியதாய் அவர் கருதுகிறார்.

தாய்லாந்தின் ஊஞ்சலாட்டும் விழாவின் காரணத்தையும் டாக்டர் திரு நாவுக்கரசு சோழர்களின் வழக்கத்திலிருந்து வந்ததாய் எழுதுகிறார். மார்கழித் திருவாதிரைத் திரு நாளில் பிறந்த முதலாம் ராஜேந்திர



கையைப் பார் கைது செய்!

கைரேகையை வைத்து குற்றவாளிகளை அடையாளம் கண்டுபிடிக்கும் முறையை பிரான்சு நாடுதான் நூறு ஆண்டுக்கு முன்பு கண்டு பிடித்தது.

அதை - நினைவு படுத்தும் வகையில் - இதுவரை பாரிஸில் நடந்த குற்றங்களில் - சில முக்கியமானவற்றைக் கண்காட்சியாக வைத்திருந்தனர்.

- பாரீஸ் பார்த்தசாரதி

சோழன், ஆட்சிக்கு வந்த பிறகு, சிவன் கோயில்களில் இந்த ஊஞ்சல் திருவிழா சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. அந்த விழாவின் ஒரு பகுதியே, திருவாசகத்தின் 'திருப்பொன்னூசல்' பாடல்களைப் பாடி, நடராஜரையும் சிவகாமி அம்மையையும் ஊஞ்சலில் வைத்து ஊஞ்சலாட்டுவதாகும். இதுவே தஞ்சை மாவட்டத்தில் திருவாதிரை நாளில் முறைப் பெண்களை ஊஞ்சலில் வைத்து முறை மாப்பிள்ளைகள் ஊஞ்சலாட்டும் வழக்கமாக மாறியது. இந்த ஊஞ்சலாட்டுத் திருவிழாவே தாய்லாந்தில் வந்திருக்கிறதென்று தர்க்க ரீதியாய்ச் சொல்கிறார். தாய்லாந்தில் கண்டெடுக்கப்பட்ட சில சிவன், விஷ்ணு, பிரம்மா, லக்ஷ்மி வெண்கலச் சிலைகள், சோழர் காலத்திய கலைப் பாணியில் உள்ளன.

சில பேச்சு வழக்குத் தமிழ்ச் சொற்கள் தாய் மொழியில் எட்டிப் பார்க்கின்றன. மன்னர் இருக்கும் சாலையின் பெயர் 'ராச வீதி' என்றழைக்கப்படுகிறது. இதுபோல வேளை என்பதற்கு 'வேளா' என்றும், கருணை என்பதற்கு 'கருணா' என்றும், பட்டணம் என்பதற்கு 'பட்டோம்' என்றும், மல்லிகை 'மல்லி' என்றும், பூமாலை 'மாலை' என்றும், ஆசான் என்பதற்கு 'அசான்' என்றும், சிந்தனை என்பதற்கு 'சிந்தனா' என்றும் விநாடி என்பதற்கு ' விநத்தி' என்றும் சொல்லப்படும் தாய்ச் சொற்களில் தமிழின் சிம்மக் குரல் கேட்கிறது. வீரப்பன், சாத்தப்பன், மல்லிகா, சுஜாதா, அகல்யா, சுகன்யா போன்ற பெயர்கள் நிறைய உள்ளன. வெற்றிலை போடும் பழக்கமும், துண்டு அணியும் வழக்கமும் இருக்கிறது. மன்னர் மட்டும் துண்டைத் தோளிலும், மற்றவர்கள் இடுப்பிலும் அணிவதை அவர்களின் பாரம்பரிய உடைகளில் காணலாம்.

இந்த ஆதாரங்கள் எல்லாம் தாய்லாந்தின் இந்தியமயமாக்கலில் தென் இந்தியாவின் பங்கு அதிகம் இருப்பதையே நிரூபிக்கின்றன. திருவெம்பாவையும் திருப்பாவையும் பதினைந்து நாள் உற்சவமாய் இங்கு தமிழ் தெரியாத தாய்லாந்து பிராமணர்களால் பாராயணம் செய்யப்படுவதும், மன்னரின் முடிசூட்டல் விழாவில் தேவாரத்திலிருந்து பாடல்களும், மாணிக்கவாசகரின் பாடல்களும் பாடப்படும் வழக்கமும், தமிழ் நாட்டவர்களின் மூலமாய் ஏற்பட்ட கலாசாரத் தாக்கத்துக்கு சாட்சி.

"என் காதலியோட அப்பா பயங்கர கில்லாடி பேர்வழி!"

"ஏன் அப்படிச் சொல்றே?"

"நான் அவளுக்கு எழுதிய காதல் கடிதங்களை எல்லாம் தொகுத்து புத்தகமாகப் போட்டு காசு பார்த்துட்டாரு!"

- ஜி. சுந்தரராஜன்



புத்தமங்கலம் ஒரு குக்கிராமம். ஏழெட்டு மைல் தூரத்தில் பந்தநல்லூர். ஒருநாள் திடீரென்று அந்தக் குக்கிராமத்துத் தெருவில் ஜல் ஜல் என்ற சலங்கை ஒலியுடன் ஒரு இரட்டை மாட்டு வண்டி வந்தது. எங்கள் வீட்டு வாசலுக்கு வந்தபோது அப்பாவும், பெரியப்பாவும் திண்ணையிலிருந்து எழுந்து நின்று, "வாங்கோ! வாங்கோ!" என்று வரவேற்றார்கள். யார் என்று நினைக்கிறீர்கள்...?

ஸாக்ஷாத் பந்தநல்லூர் மீனாட்சி சுந்தரம் பிள்ளையவர்கள் வந்து இறங்கினார். அவருடன் அவருடைய மருமகன் சுப்பிரமணியப் பிள்ளையும் வந்தார். குசலம் விசாரித்துக் கொண்ட பின் காப்பி சாப்பிட்டார்கள்.

அப்பாவும் பெரியப்பாவும் பெஞ்சு மேல் உட்கார்ந்திருக்க, வீட்டில் இருந்த ஒரே நாற்காலியில் மீனாட்சி சுந்தரம் பிள்ளை உட்கார்ந்து என்னைப் பார்த்து, "தட்டி, நமஸ்காரம் பண்ணும்மா" என்று சொன்னார். நான் சற்றுத் தயங்கிவிட்டு நமஸ்காரம் செய்தேன். நாட்டியப் பயிற்சி தொடங்கியது.

அன்றைய தினம் புத்தமங்கலம் முழுவதும் அதே பேச்சுதான். என் பாட்டிக்கு இந்த ஏற்பாடு அவ்வளவாகச் சம்மதமில்லை. "எதுக்கு ஆட்டம் பாட்டமெல்லாம்?" என்று என் தாயாரிடம் சொல்லிக் கொண்டிருந்தார்.

அக்ரஹாரத்தில் பெண் குழந்தை டான்ஸ் கற்றுக் கொள்வது அப்போது பெரிய அதிசயமாகவும், சற்று பரிகாசமாகவும்கூட இருந்தது. எங்கள் குடும்பத்து மூதாட்டி ஒருவர் "நன்னாயிருக்கு! கூத்துத்தான்!" என்று சொல்லிக் கொண்டே முகவாயைத் தோளில் இடித்துக் கொண்டது இன்னும் ஞாபகமிருக்கிறது.

ஆனால், அப்பா சத்தியாகிரஹம் செய்து சிறை புகுவதாகத் தீர்மானித்ததும் எடுத்த முக்கியமான முடிவு, எனது நாட்டிய வகுப்புகள் தொடங்க வேண்டும் என்பது. அம்மாவையும் எங்களையும் (நானும் தம்பியும்) சொந்த ஊரான புத்தமங்கலத்தில் கொண்டு விட்டுவிட்டு, இப்படி ஓர் ஏற்பாடும் செய்தார்.

> "அதெல்லாம் உங்களுக்கு ஒண்ணும் வராது. குழந்தைகள் ஆடப் போறா. குஞ்சம்மா பாடப் போறா. நீங்க சும்மா சொல்லிக் கொடுங்கோ!"

ஆடுவோமே-







பாடுவோமே!

அன்று முதல் பந்தநல்லூரிலிருந்து இரட்டை மாட்டு வண்டி புத்தமங்கலத்துக்கு வருவது சகஜமாகப் போய்விட்டது. சுப்ரமணியப் பிள்ளை வந்து மூன்று நாட்கள் திண்ணையில் வாசம் செய்வார். இரண்டு வேளையும் நான் ஆட வேண்டும். நான்காவது நாள் மறுபடியும் வண்டியைப் பூட்டச் சொல்லி ஊருக்குப் போவார். இரண்டு நாட்கள் கழித்து வருவார். அதற்குள் நான் கற்றுக் கொண்ட அடவுகளைச் சாதகம் பண்ணியாக வேண்டும்.

அம்மா அவருக்காகத் தனியாகச் சமையல் செய்து கவனித்துக் கொள்வார். மூன்று வேளையும் வீட்டில் தான் சாப்பாடு. கிராமத்தில் வேறு எங்கே உணவு கிடைக்கும்! வீட்டில் மற்றப் பெண்மணிகளுக்கு என் தாயார் நட்டுவனாருக்கு உபசாரம் செய்வது பிடிக்காது. ஆனால் அம்மா அதையெல்லாம் கண்டு கொள்ளவே மாட்டார். குழந்தைக்கு நாட்டியம் கற்றுக் கொடுக்க வருகிறார் என்பதால் ரொம்ப மரியாதை. கலைஞர்களை மதிப்பதற்கு அவர் தெரிந்து கொண்டிருந்தது. இப்போது நினைத்துப் பார்த்தால் ஆச்சரியமாக இருக்கிறது. ''நீ சரியாகக் கவனித்துக் கொள்'' என்று அப்பா அம்மாவிடம் சொல்லியிருந்தார் போலிருக்கிறது.

திருச்சி சிறையிலிருந்து அப்பாவின் கடிதம் வரும். அனைவருக்கும் தனித்தனியாகக் கடிதம் எழுதுவார். எனக்கு எழுதும் கடிதங்களில், நான் நாட்டியம் கற்பதைப் பற்றி விசாரிக்காமலிருக்க மாட்டார். ஒருதடவை, ''நாட்டியத்தில் நீ அடைந்திருக்கும் தேர்ச்சியைக் கண்டு ருக்மணிதேவியே ஆச்சரியப்பட வேண்டும்'' என்று எழுதினார்!

நாட்டியமும் சங்கீதமும் எல்லாக் குழந்தைகளுக்கும் உரியது என்றும், கலைகள் பயில்வது ஒரு முக்கியமான கல்வி, குழந்தைகளின் திறனை வளர்க்கும் கல்வி என்றும் அப்பா கருதினார். மேடையில் ஏறி நான் ஆட வேண்டும் என்ற எண்ணம் அவருக்கு ஆரம்பத்தில் இல்லை. நாட்டியம் கற்பதால் ஓரளவு இசை ஞானம், லய ஞானம், தவிர கவிதை உணர்வு இவை உண்டாவதோடு, தேகப் பயிற்சியும் கிடைக்கிறது என்பது அவருடைய கருத்து.

கலைகள் பயில்வதற்கு எல்லாக் குழந்தைகளுக்கும் வாய்ப்புத் தர வேண்டும். கலைகளில் சிறந்த நாடுதான், பிற நாட்டார் போற்றும் நிலைக்கு உயர முடியும் என்றும் அவர் நினைத்தார்.



அவருடைய சிறைவாசம் முடிவடைந்தபோது, எனது நடனப் பயிற்சியும் நின்று போயிற்று.

சென்னைக்கு வந்து சதா

ஆனந்தி

சிவம் துணையோடு கல்கி பத்திரிகை தொடங்கினார். சதாசிவம் அவர்களுடைய குமாரி ராதா, அப்போதுதான் ராமையாப் பிள்ளையிடம் பயிற்சி பெறத் தொடங்கியிருந்தாள். என்னுடைய பயிற்சி தொடர வாய்ப்புக் கிடைத்தது. இருவரும் சேர்ந்து கற்றுக் கொண்டோம்.

வழுவூர் ராமையாப் பிள்ளை ரொம்ப சிரத்தையாகத் தன் சிஷ்யையான திருமதி ஸரஸாவுடன் வந்து, எங்கள் இருவருக்கும் சங்கராபரணபதவர்ணம் கற்றுக் கொடுத்தார்.

என் தாயாருடைய வற்புறுத்தலினாலும் ராமையாப் பிள்ளையைத் திருப்தி செய்வதற்காகவும் ஒருநாள் நாங்கள் நாட்டியம் செய்யும்போது என் தந்தையும் சதாசிவம் அவர்களும் வந்து உட்கார்ந்தார்கள். எம்.எஸ்ஸும் வந்து சுருதிப் பெட்டியுடன் பாயில் அமர்ந்தார்.

வழக்கமான அலாரிப்பு, ஜதிஸ்வரம் வர்ணம் முடிந்த பிறகு, எம்.எஸ் ''தாயே யசோதா' பாடத் தொடங்கினார். நாங்கள் அபிநயம் செய்தோம்.

அன்று மாலையில் எல்லாரும் சேர்ந்து எங்களுக்கு அரங்கேற்றம் செய்யலாம் என்று தீர்மானம் நிறைவேற்றினார்கள். 1945 ஆம் ஆண்டு, ஏப்ரல் மாதம். தமிழ்ப்புத்தாண்டு தினம். அன்று நடைபெற்ற எங்கள் அரங்கேற்ற நிகழ்ச்சியின் பின்னணியில் பலரது பங்கேற்பு இருந்தது.

அந்தச் சமயத்தில் சி.வி. நரசிம்மன் ''மயிலை சங்கீத சபா'' நடத்தி வந்தார். மைலாப்பூர் பி.எஸ்.ஹைஸ்கூல் மைதானத்தில் கொட்டகை போட்டு, கச்சேரிகளை தடபுடலாக நடத்துவது அவர் வழக்கம். முதல் ஆண்டு விழாவில், எம்.எஸ்ஸின் கச்சேரி ஆண்டு விழாவோடு சேர்த்து, அரங்கேற்றமும் வைத்துக் கொள்ளலாம் என்று ஏற்பாடு செய்தனர்.

அரங்கேற்றம் என்று தீர்மானமானவுடனே பரபரப்பாகக் காரியங்கள் நடக்கத் தொடங்கின. எல்லாம் சற்றுப் புதுமையாக இருக்க வேண்டும், சம்பிரதாய வழுவும் கூடாது என்று ராமையாப் பிள்ளையின் ஒத்துழைப்பைக் கோரினார் அப்பா.

தமிழிசை இயக்கத்தில் தீவிரமாக இருந்த காலம். ரசிகமணி டி.கே.சியும் கல்கியும் பரத நாட்டியக் கலையை எவ்வளவு தூரம் ரசித்துப் போற்றினார்களோ, அவ்வளவு தீவிரத்துடன் தமிழ் இசையைப் போற்றி வந்தார்கள்.

பொன்னையாப் பிள்ளையின் வர்ணத்தைத் தமிழ்ப்படுத்தலாமா என்று ராமையாப் பிள்ளையிடம் கேட்டார் அப்பா. அவர் எழுதிக் கொடுத்த பதவர்ணத்தை பாபநாசம் சிவனிடம் அனுப்பி வைத்தார்கள். தஞ்சை பிருஹதீச்வரர் மீது மையல் கொண்ட நாயகியின் வேண்டுகோள் அப்படியே அர்த்த பாவம் மாறாமல்.

'திரு மாட மயிலை நகரில்

திகழும் ஸ்ரீ கபாலீசா' என்ற அனுபவல்லவியுடன் மயிலாப்பூரில், மயிலை சங்கீத சபாவில் ஆடுவதற்குப் பொருத்தமாக மாற்றப்பட்டு விட்டது. கிட்டத்தட்ட அதே கோர்வைகளுடன் ஹஸ்தங்களை ஓரளவு



• எம்.எஸ். பாட... ராதா ஆட...

மாற்றியமைத்து, சங்கராபரண வர்ணத்தைத் திருத்தினார் ராமையாப் பிள்ளை.

எங்களுடைய அரங்கேற்றத்துக்காகப் புதிதாக அமைக்கப்பட்ட வர்ணம் என்பதால், எங்களிருவருக்கும் ஒரே உற்சாகம். திரும்பத் திரும்ப ஆடி மகிழ்ந்தோம்.

பாரதியார் பாடலொன்றுக்கு நாங்கள் அபிநயம் பிடிக்க வேண்டுமென்று அப்பாவுக்கு ஆசை. என்னிடம் நாலைந்து பாடல்களைப் படித்துக் காட்டினார். ''ஆடுவோமே பள்ளுப் பாடுவோமே'' என்று படித்ததுமே, ''பேஷ்! இது நன்னாயிருக்கு'' என்று சொல்லித் தன் கையாலேயே மூன்று அடிகளுக்கு, புத்தகத்தில் கோடு இழுத்தார். உடனே சதாசிவம் மாமாவைத் தேடிக் கொண்டு போனார்.

அன்று மாலையே எஸ்.வி. வெங்கடராமனை அழைத்து வரச் செய்தார் சதாசிவம். பாடலைக் கையில் கொடுத்துவிட்டு, மெட்டு வேண்டும் என்றார்கள்.

சுமார் அரைமணி நேரம் பேப்பரில் எழுதியிருந்த மூன்றடிகளைப் படித்துக் கொண்டு, தலையை ஆட்டிக் கொண்டு உட்கார்ந்திருந்தார் எஸ்.வி. வெங்கடராமன். அவருடைய கம்பீரமான குரலில் திடீரென்று, "ஆடுவோமே பள்ளுப் பாடுவோமே" என்று மாண்ட் ராகத்தில் பாடத் தொடங்கினார். எல்லோருக்கும் ஒரே மகிழ்ச்சி. "அப்படியே இருக்கட்டும். மாற்ற வேண்டாம்'' என்றார் சதாசிவம் மாமா. "பேஷாப் போச்சு" என்றார் அப்பா. அடுத்த நாள் முதல் ஆடுவோமே பாடலுக்கு நடனம் அமைக்கத் தொடங்கிவிட்டார் ராமையாப் பிள்ளை.

தேசியப் பாடலுக்கு நடனம் அமைப்பது அவருக்கு முதல் அனுபவம். மேலும் பிரிட்டிஷ் ஆட்சி நடந்து கொண்டிருந்த காலம். நாங்கள் குதித்துக் குனிந்து ஆடிக் கொண்டிருந்தபோது சதாசிவ மாமா வந்தார். ராமையாப் பிள்ளை தயங்கிக்கொண்டே அவரிடம்"இந்தப் பாட்டினாலே ஒன்றும் தொந்திரவு வராதே!" என்று கேட்டார். அவர் போலீஸ் கமிஷனராக இருந்த விஜய ராகவன் ஐ.பி.எஸ், மகளுக்கு நடனம் சொல்லிக் கொடுத்துக் கொண்டிருந்தார். ஏதாவது தர்ம சங்கடம் வருமோ என்று சற்றுக் கவலை.


* குரு ராமையாப் பிள்ளையுடன் ராதா - ஆனந்தி

"அதெல்லாம் உங்களுக்கு ஒண்ணும் வராது. குழந்தைகள் ஆடப் போறா. குஞ்சம்மா பாடப் போறா. நீங்க சும்மா சொல்லிக் கொடுங்கோ!" என்றார் மாமா.

கல்கி காரியாலயத்தில் ஓவியராக இருந்த இளைஞர் மணியம், நிகழ்ச்சி நிரலுக்கு அட்டைப்படம் வரைந்தார். படுத்திருக்கும் நந்தி, பலிபீடம், துவஜஸ்தம்பம் என்று கோவில் சூழ்நிலை. அப்பாவுக்கு அதைப் பார்த்தவுடனே, நாட்டிய அரங்கத்துக்குத் திரை இப்படி இருந்தால் நன்றாக இருக்குமே என்று தோன்றிவிட்டது. செயல் வீரர் சதாசிவம் உடனே நியூட்டோன் ஸ்டுடியோவிலிருந்து ஓவியரை வர வழைத்து, திரைச்சீலைக்காகத் துணியும் தந்து, இந்தப் படத்தையும் கொடுத்து விட்டார்.

அந்தப் படத்தின் மீது சிறு சிறு கட்டங்கள் வரைந்து வைத்துக் கொண்டார் ஓவியர். பிறகு பிரும்மாண்டமான துணியை வராண்டா முழுவதும் விரித்து, அதன் மீது உட்கார்ந்தும் குனிந்தும் சதுரமாகக் கட்டங்கள் வரைந்து கொண்டார். பிறகு சித்திரம் வரையத் தொடங்கினார். அவர் சிவப்பு, மஞ்சள், கறுப்பு நீல வர்ணங்களைக் குழைப்பதைப் பார்க்கவே வீட்டுக் குழந்தைகள் எல்லோரும் கூடி விட்டோம். இரண்டு நாட்களில் அந்தத் திரை (சிலப்பதிகார மொழியில் சொல்வதானால் ஒருமுக எழுனி!) தயாராயிற்று.

நிகழ்ச்சி தினத்தன்று அப்படியொரு சலசலப்பை அது ஏற்படுத்தும் என்று யார்தான் எதிர்பார்த்தார்கள்...?

(அடுத்த இதழில் முடியும்)

கல்கி

ChennaiOnline™
all @bout the city.™



கல்கி
சென்னை ஆன்லைன்
இணைந்து வழங்கும்

இசை விழா

தொகுப்பு







visit @: www.chennaionline.com/musicseason2002

என்னாச்சு, சீனியர் சுயசரிதை?



* இளம் வயதில்

நாதஸ்வர வித்வான் ராஜரத்னம் பிள்ளைக்கான விழா ஒன்றில், அவரைக் குறித்த பல சுவையான விவரங்களை அடுக்கினார் செம்மங்குடி ஸ்ரீனிவாச ஐயர். அதைக் கேட்ட அப்போதைய முதல்வர் கலைஞர், செம்மங்குடியாரின் சுயசரிதை எழுதப்படவேண்டும் என்ற தமது விருப்பத்தை வெளிப்படுத்தியதோடு, அரசாங்கமே இந்த நூலை வெளியிடத் தயார் என்றும் அறிவித்தார். சங்கீதம் குறித்த பல ஆராய்ச்சிகளைச் செய்துவரும் ''ப்ருஹத்வனி'' என்ற அமைப்பு, இந்த முயற்சியை மேற்கொள்ள வேண்டும் என்று விரும்பினார் சுயசரிதைக்காரர்.

அடுத்த அரை வருடத்தில் மளமளவென ஏற்பாடுகள் நடைபெற்றன.



செம்மங்குடி அவர்களே பலமுறை 'ப்ருஹத்வனி' அலுவலகத்துக்கு வந்து தமது சரிதத்தைச் சொல்ல, அவை ஒலிப்பதிவாயின. பின் அந்த அமைப்பின் அப்போதைய நிர்வாகத் தலைவர் விஜய திருவேங்கடம், கவிஞர் எஸ். வைத்தீஸ்வரன், அமைப்பின் இயக்குனராக விளங்கும் காரைக்குடி சுப்ரமணியம் ஆகியோரின் கூட்டமைப்பில், புத்தகம் வேகமாக உருவானது. 'செம்மங்குடியின் குரல்' என்ற தலைப்பு இதற்குப் பரிந்

சீஸன் சிறப்புப் பக்கம்

துரைக்கப்பட்டு, அரசுக்கு அனுப்பப்பட்டது. ஓவியர் கோபுலு அருமையான சித்திரங்கள் போட்டுக் கொடுத்தார். ஆனால் ஒன்றரை வருடங்களாகியும் இந்த நூல் இன்னமும் வெளிவரவில்லை.

அந்தப் புத்தகத்துக்கென்று செம்மங்குடி விவரித்துள்ள சில சம்பவங்கள் மிக சுவாரஸ்யமானவை :

★ தாய்மாமனின் ஊரான செம்மங்குடியில் அவர் பிறந்த வருடம் ஒரு கோயில் கட்டப்பட்டது. அதன் உற்சவமூர்த்தி ஸ்ரீநிவாசன் பெயர்க் காரணம் இதுதான்.

★ சிறுவயதிலிருந்தே பலவிளையாட்டுகளில் ரசனை உண்டு. முக்கியமாகக் காற்றாடி விடுவது. "மின்சார ஒயரெல்லாம் கிடையாது. ஹாய்யா இருக்கும். இஷ்டம் போலப் பட்டம் விடலாம்."

★ குருநாதரின் அத்தனை சுமைகளையும் சுமந்து கொண்டு, ரயில்வே ஸ்டேஷனுக்குச் செல்வது அந்தக் காலத்தின் கட்டாயம். உள்ளே நுழைந்தவுடன் குருநாதர் படுக்கையை விரித்துப் படுத்துக் கொள்ள, கூஜா, பெட்டி, தம்புராவைச் சுற்றிக்கட்டி ஒரு முனையைத் தன் இடுப்பில் கட்டிக்கொண்டு, உட்கார்ந்து கொண்டிருப்பாராம் இவர்.

★ திருவனந்தபுரம் சமஸ்தானத்தின் வேண்டுகோளின்படி 'சுவாதித்திருநாள் இசை அகாடமி'யின் முதல்வராக இருபது வருடம் இருந்தவர். சென்னை வானொலி நிலையம் 1938ல் தொடங்கியபோது ஒலிபரப்பான முதல் கச்சேரி இவருடையதுதான். திருவையாறு தியாகய்யர் விழாவின்போது நடைபெற்ற பூசல்களை நீக்கியது (குறைத்தது?), அப்போது வித்வான்கள் பாடிய தனிக் கீர்த்தனைகளிலிருந்து, சேர்ந்திசையாக பஞ்சரத்னக் கீர்த்தனைகளைப் பாடும் மாற்றத்தைக் கொண்டு வந்தது, என்று பல சாதனைகளின் நாயகராக இருந்திருக்கிறார்.

★ 1989ல் அரங்கு நிறைந்த மியூசிக் அகாடமி நிகழ்ச்சியில் தொண்டை சரியாக ஒத்துழைக்க மறுக்க, "இதுதான் நான் கடைசியாகச் செய்யும் பொதுக் கச்சேரி" என்று இவர் அறிவித்தது பலருக்கும் தெரிந்திருக்கும். ஆனால் சிறுவயதிலேயே ஒரு முறை இவரது தொண்டை ஒத்துழையாமை இயக்கத்தைச் செய்திருக்கிறது. கச்சேரிகள் செய்யத் தொடங்கிய புதிதில் சேலம் சென்ற போது ஏற்பட்ட ஓர் அசம்பாவிதம். 'வைசாலை' வகை மாம்பழத்தின் இனிப்பில் மயங்கி நான்கே நாட்களில் நூறு பழங்களை இவர் சாப்பிட்டுவிட, குரல்வளம் போச்சு. ஆனால் தினமும் பத்துமணி நேரம் சாதகம் செய்து, இழந்ததைப் பெற்றது இவர் வாழ்வின் அடுத்த அத்தியாயம்.

★ காஞ்சிப் பெரியவரை காளஹஸ்தியில் சந்தித்தபோது தீட்சிதரின் 'மகாலக்ஷ்மி' கீர்த்தனையை இவர்பாட, மீண்டும் மீண்டும் அதைப்பாடச் சொன்னாராம் பெரியவர். பின்பு அதை கிரகித்துக் கொண்டு அப்படியே பெரியவர் பாட, அதைக் கேட்கும் பாக்கியம் கிடைத்திருக்கிறது செம்மங்குடிக்கு.

இருவருடங்களுக்கு முன், "நூற்றாண்டு முடியற இடத்துக்கு வந்து நின்னுண்டிருக்கேன். எது முதலில் முடியப் போறதோ _ நூற்றாண்டா நானான்னு தெரியலே" என்று பெரும் சிரிப்புடன் செம்மங்குடி ஸ்ரீனிவாச ஐயர் கூறியதுண்டு. நூற்றாண்டைக் கடந்து வாழ்கிறார் என்பது மட்டுமல்ல, கர்நாடக இசைச் சரித்திரம் உள்ளவரை, அவரது பெயர் வாழ்ந்து கொண்டு இருக்கும் என்பதில் ஐயமில்லை. சங்கீத பிதாமகர் என்று அனைவரும் ஏற்கும் ஒரு சீனியர் இசைக் கலைஞரின் சுயசரிதை, அவர் வாழும் காலத்திலேயே வெளியாக வேண்டும் என்பதும், அதைக் கண்டு இன்புற்று அவர் மேலும் பலகாலம் வாழவேண்டும் என்பதும் சங்கீத ரசிகர்களின் ஆசை, மற்றும் ஆதங்கம். அது நிறைவேற அரசு வழி செய்ய வேண்டும்.

— ஜி.எஸ்.எஸ்.

"பதில் சொல்றதில் நம்ம சபா செகரட்டரியை யாரும் மிஞ்சமுடியாது!"

"புரியும்படி சொல்லுப்பா!"

"காம்போதிக்கும், ஹரிகாம்போதிக்கும் என்ன வித்தியாசம்னு ஒரு மெம்பர் கேட்டதுக்கு காம்போதியை விரைவா பாடினா hurryகாம்போதிங்கறார்!"

- புளியரை கணேசன்



> “இதுபோன்ற குறையுள்ள மாணவர்களை, நிறையுள்ள மனிதர்களாக மாற்ற, என் வாழ்நாள் முழுவதையும் ஒதுக்கத் தயாராக இருக்கிறேன்.”

புதிய பாதை

தெருவிளக்குகள் மட்டுமே விழித்திருந்த அதிகாலை ஐந்துமணி. சங்கீத மும்மூர்த்திகளைத் தந்த பெருமை கொண்ட தஞ்சையில் இறங்கி, மேலவீதியில் நடக்கிறோம். “அம்மா பால்” என்று கூவியழைத்தபடி ஒரு வீட்டு வாசலில் நின்றிருந்த பால்காரரிடம், போலீஸ் நாயக்கன் தெருவுக்கு எப்படிப் போவதென்று கேட்க, “இன்னும் முப்பது வீடு தள்ளிப் போங்க... காதைக் குடைகின்ற மாதிரி மிருதங்க சப்தம் கேக்கும். அப்படியே லெட்டுல திரும்புங்க” என்கிறார். பத்து வீடுகளைக் கடந்ததும் மிருதங்க ஒலி மெல்ல காதுகளை எட்டுகிறது. நடக்க, நடக்கச் செவிப்பறைகளை இதமாய் வருடிக் கொடுக்கிற லயம் பிசகாத மிருதங்க ஒலி. இருபது இருபத்தைந்து மிருதங்கங்களின் கூட்டொலி. (பால்காரரை மன்னிப்போம்! அவர் குறிப்பிட்டதைப் போல இது காதைக் குடைகிற சப்தமல்ல) கூடவே மிருதங்க வாசிப்பை ஓரணியில் வழி நடத்தும், ஒரு பாட்டொலி. காதில் தேன் பாய்ச்சும் கல்யாண வசந்தத்தில் “நீ தயராதா” என்ற தியாகராஜ கீர்த்தனை. தெருவுக்குள் நுழைந்து, முகவரியைத் தேட வேண்டிய அவசியமற்று, இசை வரவேற்ற இல்லத்திற்குள் நுழைகிறோம். பாகவத திலகம், மிருதங்க வித்வான் டி.கே. இராமச்சந்திரனின் இல்லம்.


• டி.கே. இராமச்சந்திரன்

வீட்டின் நடுக் கூடத்தில் விரிக்கப்பட்டிருந்த மெகா ஜமுக்காளத்தில் அமர்ந்து, இருபது மாணவர்கள் மிருதங்கம் வாசித்துக் கொண்டிருக்க, ஒரு மாணவர் பாடிக் கொண்டிருந்தார். நடுநாயகமாக ஆசிரியர் இராமச்சந்திரன்.

நம்மைக் கண்டதும் மாணவர்களுக்குக் கையை உயர்த்தி சைகை காட்ட, வாசிப்புக்கும், பாடலுக்கும் தற்காலிக இடைவேளை. ஆசிரியர் இப்போது சைகை காட்டவில்லை. தனதருகில் அமர்ந்திருந்த கருணாநிதி என்ற



• மழலைத் தாளங்கள்!



காட்டுகிறார்!

மாணவரின் தோள்களைத் தொட்டு, அவரை மட்டும் வாசிக்கச் சொல்கிறார். மற்றொரு மாணவரான கௌதமை பாடச் சொல்கிறார். மற்ற மாணவர்கள் அமைதியாகக் கவனிக்கிறார்கள். கௌதம் "மகா கணபதிம்" பாடத் தொடங்கியதும் உள்ளம் கொள்ளை போகிறது. கருணாநிதியின் மிருதங்க வாசிப்பு கண்களைப் பனிக்கச் செய்கிறது.

மற்ற மாணவர்களிடமிருந்து இந்த இருவரும் முற்றிலுமாக வேறுபடுகிறார்கள்! இருபத்து மூன்று வயதான கருணாநிதிக்கு பிறவியிலேயே கண் பார்வை கிடையாது. பதினேழு வயதான கௌதமுக்கோ ஐந்து வயதுச் சிறுவனுக்கான மனவளர்ச்சி மட்டுமே உள்ளது. ஆனால் இருவரும் வெளிப்படுத்திய இசைத் திறமை, மனத்தை நிறைத்தது. மிருதங்க வித்வான் டி.கே.இராமச்சந்திரனின் மிருதங்கப் பள்ளியில் கருணாநிதி, கௌதம் தவிர, ஜெயவிக்னேஷ், பாலாஜி ஆகிய மனவளம் குன்றிய மாணவர்கள் இருக்கிறார்கள். உடல் ஊனமுற்ற, மனவளர்ச்சி குறைந்த இவர்களுக்கு, இலவசமாகவே மிருதங்கம் சொல்லித் தருகிறார் ராமச்சந்திரன்.



• கருணாநிதி

''ஆறு வருடங்களுக்கு முன்பு கௌதமின் பெற்றோர் அவனை என்னிடம் அழைத்து வந்தார்கள். உன்னிகிருஷ்ணனின் கிளாசிக்ஸ், பக்திப் பாடல்களை டேப் – ரிக்கார்டரில் கேட்டு, பாத்திரத்தில் தாளம் போடுகிறான். இவனுக்கு மிருதங்கம் கற்றுத் தர முடியுமா என்றார்கள். அந்த கணத்தில் நான் கொஞ்சம் கூட யோசிக்கவில்லை. இதையொரு சவாலாக எடுத்துக் கொண்டேன். கௌதமைப் பற்றிக் கேள்விப்பட்டு, அவனைப் போன்ற பிற குழந்தைகளை, பெற்றோர் நம்பிக்கையோடு அழைத்து வந்தார்கள். மற்ற சாதாரண மாணவர்களைப் போல இல்லாமல், மனவளர்ச்சி குன்றிய மாணவர்களுக்கு, ஒரு நேரத்தில் இருக்கும் ஆர்வம், ஈடுபாடு மற்றொரு நேரத்தில் இருக்காது. எனவே அவர்களது நிலைக்கு நானும் இறங்கிச் சென்று கற்றுக் கொடுக்க ஆரம்பித்தேன். பெரிய குடும்பத்தில் பிறந்ததால், இயல்பாகவே எனக்குப் பொறுமை அதிகம். அதன் துணையோடு இந்த மாணவர்களை அணுகினேன்.

"கௌதமிற்கு இப்போது அரங்கேற்றம் முடிந்து விட்டது. சுதந்திரப் பொன் விழாக் கொண்டாட்டத்தையொட்டி புதுடெல்லியில் நடந்து முடிந்த 'உமங்' கலாசார விழாவில் கௌதம் கலந்து கொண்டு, அபாரமாக மிருதங்கம் வாசித்து, பாராட்டு பெற்றார். இதுபோன்ற குறையுள்ள மாணவர்களை, நிறையுள்ள மனிதர்களாக மாற்ற, என் வாழ்நாள் மொத்தத்தையும் ஒதுக்கத் தயாராக இருக்கிறேன்" என்கிறார்.

''சங்கீதத்திற்கு அதிக ஞாபக சக்தி வேண்டும். அது இவர்களுக்கு அளவுக்கு அதிகமாகவே உள்ளது. ஆனால் இவர்களைப் பக்க வாத்தியமாக வைத்து வாசிக்கச் செய்து, கர்நாடக சங்கீதக் கச்சேரி செய்ய



• வாத்திய சிகிச்சை

பாடகர்கள் யாரும் தயாராக இல்லை. சங்கீதத்திற்கு போஷாக்கும், அங்கீகாரமும் சென்னையில்தான் கிடைக்கிறது. சென்னை சபாக்கள் இது போன்ற இளைஞர்களுக்கும் வாய்ப்புத் தரவேண்டும். இவர்களை 'மென்டலி ரிட்டார்டெட்' என்று சொல்வதைவிட, இனி 'அதர்வைஸ் டேலண்டெட்' என்று சொல்வதுதான் சரி" என்கிறார் ராமச்சந்திரன்.

"இந்தியா முழுவதும் மனவளர்ச்சி குன்றிய, ஆட்டிஸம் குறைபாடுள்ள, உடல் ஊனமுற்ற குழந்தைகள் லட்சக் கணக்கில் இருக்கிறார்கள். அவர்களை வாத்திய இசை, வாய்ப்பாட்டு என இசையின் பால் திருப்ப வேண்டும். இப்படிச் செய்தால், இசையே அவர்களுக்குச் சிகிச்சையாகி, அவர்களின் வாழ்க்கைக்குப் புது அர்த்தம் கிடைத்து விடும்" என்று நம்புகிறார்.

ஹரிகதா விற்பன்னர் தஞ்சை நாகராஜ பாகவதரின் பேரனான இராமச்சந்திரன், கடந்த இருபத்தைந்து ஆண்டு காலமாக பல நூறு மாணவர்களுக்குப் பயிற்சி அளித்திருக்கிறார். வி.எஸ்.வெங்கட்ரமணராவ், கல்யாணபுரம் ஆராவமுதன், போன்ற ஜாம்பவான்களின் கச்சேரிகளுக்கும் வாசித்து வருகிறார்.

ஒரு வயதே ஆன ஆகாஷும், ஏழு வயதான ஹரீஷும் இவருடைய தளிர் விரல் மாணவர்கள்!

பேட்டி, படங்கள்:

ஆர்.சி. ஜெயந்தன்



தாஸ்! நீ ஒரு பாஸ்!

மண் வாசமிக்க, நெகிழ்ச்சிமிக்க, கலை நயமிக்க என ஏகப்பட்ட ரசிப்புமிக்க படத்துக்கான வேலைகளில் மும்முரமாக இறங்கியிருக்கிறார் பூகிசேது. படத்தின் தலைப்பு 'வையாதுரை'. கதாநாயகியாக ரீமா சென், நந்திதா தாஸ் என இரண்டு அழகிகளின் பெயர்கள் அடிபடுகின்றன. கோக் நிற அழகி ஓ.கே. சொல்வார் எனத் தெரிகிறது!

— ஐஸ்வர்யா

காசியில் கங்கையில் செய்யும் தீபவழிபாடு மனிதவாழ்வுக்கு மேன்மை அளிக்கக்கூடியது!

பித்ரு தர்ப்பண க்ஷேத்ரமான காசியில்
தை அமாவாசையன்று
கங்கைக்கு தீபமேற்றி அன்னதானம் செய்வோம் வாருங்கள்!

ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதி ஸ்ரீ ஜெயேந்திர சரஸ்வதி சுவாமிகளின் அருளாசியுடன்
புனித க்ஷேத்ரமான காசியில் அன்னதானம் செய்வதில் நீங்களும் பங்கேற்கலாம்...

ஸ்ரீ அன்னபூரணி அன்னதான ஸேவா டிரஸ்டின் நான்காம் ஆண்டில் தொடர்ந்து அன்னதான சேவை!

பேரன்புடையீர்! வணக்கம். அருள்மிகு ஸ்ரீ அன்னபூரணி அன்னை தங்களுக்கு அனைத்து நலன்களையும் தந்தருளப் பிரார்த்திக்கிறோம்.

பிரபஞ்சம் முழுமைக்கும் உணவுபடைக்கும் தாயாக விளங்கும் ஸ்ரீ அன்னபூரணி மாதா கொலுவீற்றிருக்கும் காசியில் மாதாமாதம் அமாவாசை அன்று கங்கைக்கு தீபமேற்றி, அன்னதானம் செய்யப்படுகிறது என்பதை தெரிவித்துக் கொள்கிறோம். ஆன்மீக அன்பர்கள் அனைவராலும் காசியில் கங்கைக்கு தீபமேற்றி அன்னதானமிட முடியும் என்ற இறைசிந்தனையோடு "ஸ்ரீ அன்னபூரணி அன்னதான ஸேவா டிரஸ்ட்" என்ற தனி அமைப்பை ஏற்படுத்தியுள்ளோம். இந்த அன்னதான இறைபணிக்கு தங்களால் இயன்ற நன்கொடையை வழங்கி "இறையருளால் காசியில் ஏழைகளுக்கும், அடியார்களுக்கும் அன்னம் அளிப்பதில் நாமும் ஓரளவேனும் பங்குகொண்டோம்" என்ற ஆத்ம திருப்தியை அடைய இது ஒரு சிறந்த வாய்ப்பாகும்.

தாங்கள் அளிக்கும் நன்கொடை எவ்வளவு சிறியதாக இருந்தாலும் அன்புடன் ஏற்றுக்கொள்ளப்படும்.
ரூ.500/ - அனுப்பும் ஆன்மிக அன்பர்களுக்கு, 'ஆன்மீகம்' மாத இதழ் ஒரு ஆண்டிற்கு அனுப்பி வைக்கப்படும்.
ரூ.1000/ - அனுப்பும் ஆன்மிக அன்பர்களுக்கு, 'ஆன்மீகம்' மாத இதழ் இரண்டு ஆண்டுகளுக்கு அனுப்பி வைக்கப்படும்.
ரூ.5000/ - அனுப்பும் ஆன்மிக அன்பர்களுக்கு, 'ஆன்மீகம்' மாத இதழ் பத்து ஆண்டுகளுக்கு அனுப்பி வைக்கப்படும்.

அன்னதானத்திற்கு நன்கொடையை அனுப்புவோர், திருமண நாள், பிறந்தநாள் மற்றும் திதி நாள் மேலும் தாங்கள் எதை நினைத்து அன்னதானம் செய்ய விரும்புகிறீர்கள் என்பதைத் தெரிவித்தால் அதன்படி தாங்கள் விரும்பும் மாதத்தில் அமாவாசை அன்று காசியில் அன்னதானம் செய்கிறோம். அன்னதானத்திற்கு நன்கொடையாக ரூ.500, ரூ.1000, ரூ.5000 அனுப்பும் ஆன்மீக அன்பர்களுக்கு கங்கா தீர்த்தத்துடன் கூடிய காசி சொம்பும் காசியில் பூஜிக்கப்பட்ட ஸ்ரீ அன்னபூரணி அன்னையின் விக்கிரகமும் ஸ்ரீ அன்னபூரணி அன்னையின் வண்ணப்படமும், சிறிய அளவில் சிவபுராண புத்தகமும் அனுப்பி வைக்கப்படும்.

ரூ.5000/- அனுப்பும் ஆன்மீக அன்பர்கள் சார்பாக, ஒவ்வொரு வருடமும் அமாவாசை அன்று காசியில் அன்னதானமும், கங்கையில்தீபமேற்றும் பணியும் செய்து பத்து வருடங்கள் "ஆன்மீகம்" மாத இதழ் தங்களுக்கு அனுப்பி வைக்கப்படும். மேலும் தாங்கள் விரும்பும்போது சந்நிதிகளின் முகவரிக்கும் மாற்றம் செய்து தருகிறோம். ஆன்மீக அன்பர்கள் ஒவ்வொருவரின் பூஜை அறையும் புனிதம் பெறவேண்டும் என்ற எண்ணத்துடன் ரூ.5000 செலுத்துபவர்களுக்கு 1024 பக்கங்களுடன் கூடிய பெரிய அளவில் உள்ள ஸ்ரீமத் பகவத் கீதை புத்தகத்தை (தமிழில்) அனுப்பி வைக்கிறோம்.

காசி, கயா, பிரயாகை (திரிவேணி சங்கமம்) ஆகிய இம்மூன்று பித்ரு க்ஷேத்ரங்களிலும் புண்ணிய காரியங்கள், பித்ரு காரியங்கள், பிண்டம் போடுதல், தர்மங்கள், ச்ராத்தம், திவசம், தர்ப்பணம் போன்றவற்றை அவரவர் விருப்பப்படி அன்னதானக் கைங்கர்ய அன்பர்களுக்கு செய்து தரப்படும்.

குடும்பத்தில் தாய் தந்தையர்கள், மூதாதையர்களுக்கு பிண்டப்பிரதானம் மற்றும் தர்ப்பணம் காசியிலும், கயாவிலும், பிரயாகையிலும் நேரில் சென்று செய்ய முடியாதவர்களுக்காக, சாஸ்திரிகளைக் கொண்டு "ஸ்ரீ அன்னபூரணி அன்னதான ஸேவா டிரஸ்ட்" மூலம் செய்யப்படுகிறது.

பித்ருக்களுக்கு பிண்டப்பிரதானம் செய்ய காசி, கயா, பிரயாகை ஆகிய மூன்று பித்ரு க்ஷேத்ரங்களுக்கும் தனித்தனியாக ரூபாய் 1000/- அனுப்பும்போது யாருக்கு ச்ராத்தம் செய்ய விரும்புகிறீர்களோ அவரின் பெயர், திதி மற்றும் கோத்ரம் போன்ற விபரங்களையும் அவசியம் தெரிவிக்குமாறு கேட்டுக்கொள்கிறோம். பிண்ட பிரதானத்திற்காக ரூ.5000/= அனுப்பும் ஆன்மீக அன்பர்கள் சார்பாக தொடர்ந்து வருடத்திற்கு ஒருமுறை பத்து ஆண்டுகளுக்கு மூன்று பித்ரு க்ஷேத்ரங்களிலும் எந்த இடத்தில் யாருக்கு ச்ராத்தம் செய்ய விரும்புகிறீர்களோ அவர்களுக்கு ச்ராத்தம் செய்யப்படும். பித்ரு காரியங்களுக்குப் பணம் அனுப்பும் ஆன்மீக அன்பர்களுக்கு காசி, கயா, பிரயாகை ஆகிய மூன்று இடங்களிலும் உள்ள தெய்வீக ஆலமரமான 'அக்ஷய வடத்தின்' படமும், கயாவில் உள்ள விஷ்ணு பாதத்தின் படமும் அனுப்பி வைக்கப்படும். நம் வீட்டில் செய்யும் ச்ராத்தத்திற்கு தாய், தந்தையர், உறவினர்கள் மட்டுமே பங்குகொள்ள வாய்ப்புண்டு. மூன்று பித்ரு க்ஷேத்ரங்களில் ஏதாவது ஒரு அக்ஷய வடத்தில் (ஆலமரம்) பிண்டப்பிரதானம் செய்தால் ஏழு தலைமுறைக்கு பித்ருக்கள் கூட்டமே முக்தி அடைவதுடன் பித்ரு தோஷங்களும் நிவர்த்தியாகும்.

அன்னதான சேவையிலும், கங்கைக்கு தீபமேற்றும் பணியிலும் ஈடுபட விரும்பும் ஆன்மீக அன்பர்கள் தங்கள் நன்கொடையை Cheque/D.D/M.O மூலம் (Sri Annapoorani Annadhana Seva Trust, Chennai - 4) என்ற பெயருக்கு எடுத்து கீழ்க்கண்ட முகவரிக்கு அனுப்பி வைக்கவும். கலியுகத்தில் அன்னதான சமுதாயப்பணி மகத்தான தெய்வீகப்பணியாக காசி திருத்தலத்தில் தழைத்திட உதவுமாறு அன்புகூர்ந்து வேண்டுகிறோம்.

நன்கொடைகளுக்கு 80 G பிரிவின்படி வரிவிலக்கு உண்டு.



Cheque/D.D./M.O அனுப்ப வேண்டிய முகவரி:

ஸ்ரீ அன்னபூரணி அன்னதான ஸேவா டிரஸ்ட்
SRI ANNAPOORANI ANNADHANA SEVA TRUST (Regd.)
68, Nadu Street, (Opp: Sri Kapaleeswarar Temple), Mylapore, Chennai - 600 004.
Tel : 4959302 Fax: (044) 7102308 E-mail : siva siva@vsnl.net



காசியில் தை அமாவாசையன்று பித்ருக்களுக்கு தர்ப்பண பூஜை செய்வது ஒவ்வொருவரின் இன்றியமையாத கடமையாகும்!



சிவகாமியின் சபதம்

இருபத்து ஏழாம் அத்தியாயம்

வெற்றி வீரர்

சோழ நாட்டைச் சேர்ந்த திருவெண்காடு என்னும் கிராமம் திமிலோகப்பட்டுக் கொண்டிருந்தது. பல்லவ சாம்ராஜ்யத்தின் குமார சக்கரவர்த்தி நரசிம்ம வர்மர் அன்று அந்தக் கிராமத்துக்கு விஜயம் செய்யப் போகிறார்; தம் ஆருயிர்த் தோழரான வீர தளபதி பரஞ்சோதியையும் அழைத்து வரப் போகிறார் என்னும் செய்தி வந்ததிலிருந்து அந்த ஊரார் யாரும் பூமியிலேயே நிற்கவில்லை.

இரண்டு நாளைக்கு முன்பு பாண்டிய சைனியத்துக்கும் பல்லவ சைனியத்துக்கும் கொள்ளிடக் கரையில் நடந்த பெரும் போரைப் பற்றி அந்தக் கிராமவாசிகள் கேள்விப்பட்டிருந்தார்கள். பாண்டியன் ஜயந்தவர்மன் தோல்வியடைந்து புறமுதுகிட்டு ஓடியதைப் பற்றியும் அறிந்திருந்தார்கள். அந்த யுத்தத்தின் காரணமாக, கொள்ளிட நதியின் தண்ணீர்ப் பிரவாகம் இரத்த வெள்ளமாக மாறி ஓடியதை நேரில் பார்த்தவர்கள் வந்து அவர்களுக்குத் தெரிவித்திருந்தார்கள். பாண்டிய சைனியம் பல்லவ சைனியத்தைவிடப் பெரியது என்பதும், மாமல்லர், பரஞ்சோதி இவர்களின் வீர சாகஸச் செயல்களினாலேயே பாண்டிய சைனியம் தோல்வியடைந்து சிதறி ஓடியது என்பதும் எல்லாரும் அறிந்த விஷயங்களாயின.

அப்பேர்ப்பட்ட வீராதி வீரர்கள் வருகிறார்கள் என்றால், அந்தக் கிராமவாசிகள் தலை தெரியாத ஆனந்தத்தில் மூழ்கியிருந்ததில் வியப்பு ஒன்றும்

அமரர் கல்கி

இல்லையல்லவா?

ஏற்கெனவே அந்தக் கிராமவாசிகளுக்கு இன்னொரு வகை அதிர்ஷ்டம் கைகூடியிருந்தது. பத்துத் தினங்களுக்கு முன்பு திருநாவுக்கரசர் பெருமான் அவ்வூருக்கு விஜயம் செய்து சைவத் திருமடத்தில் எழுந்தருளியிருந்தார். ஆலயப் பிராகாரங்களில் அப் பெரியார் தம் திருக் கைகளினால் புல் செதுக்கும் திருப்பணியை நடத்தியதுடன், மாலை நேரங்களில் ஆலய மண்டபத்தில் தம் தேனிசைப் பாசுரங்களைச் சீடர்களைக் கொண்டு பாடுவித்து வந்தார்.

அவ்விதம் சிவானந்தத்திலும் தமிழின் பத்திலும் ஆழ்ந்திருந்தவர்களுக்கு, சக்கரவர்த்தி திருக்குமாரரும் அவருடைய வீர தளபதியும் வரப் போகும் செய்தி மேலும் குதூகலத்தை உண்டாக்கிற்று. திருநாவுக்கரசரைத் தரிசிப்பதற்காகவே மாமல்லரும் பரஞ்சோதியும் வருவதாக ஒரு வதந்தியும் பரவியிருந்தது.

ஆனால், நமசிவாய வைத்தியர் வீட்டைச் சேர்ந்தவர்களுக்கு மட்டும் உண்மையில் அவர்கள் வருகிற காரணம் இன்னதென்று தெரிந்திருந்தது. பரஞ்சோதியின் அருமைத் தாயார் அந்த வீட்டிலேதான் இருந்தாள். பரஞ்சோதிக்கு வாழ்க்கைப்படுவதற்காகக் காத்திருந்த பெண்ணும் அந்த வீட்டிலேதான் இருந்தாள். அப்படியிருக்கும்போது, தளபதி பரஞ்சோதியும் அவருடைய தோழரும் திருவெண்காட்டுக்கு வருவதற்கு வேறு காரணம் எதற்காகத் தேட வேண்டும்?

எனவே, அந்தக் கிராமத்தில் மற்ற எந்த வீட்டையும் விட நமசிவாய வைத்தியரின் வீட்டிலே குதூகலமும் பரபரப்பும் அதிகமாயிருந்ததென்று சொல்ல வேண்டியதில்லையல்லவா?

சாதாரணமாய்ச் சாந்த நிலையில் இருப்பவரான நமசிவாய வைத்தியர் அன்று வீட்டுக்குள்ளிருந்து வெளியிலும் வெளியிலிருந்து உள்ளேயும் நூறு தடவை போய் வந்துகொண்டிருந்தார். அவருடைய மனையாள் தன் மகள் உமையாளை ஆபரணங்களால் அலங்கரிப்பதில் அன்று காட்டிய சிரத்தை அதற்குமுன் எப்போதும் காட்டியதில்லை. உமையாளின் தம்பியும் தங்கைகளும் அவளைப் பரிகாசம் செய்வதில் மிகவும் தீவிரமாயிருந்தார்கள். உமையாளின் உள்ளமோ, பெரும் புயல் அடிக்கும்போது கொந்தளித்து அலைவீசும் கடலை ஒத்திருந்தது.

பரஞ்சோதியின் அன்னை கண்ணீரும் கம்பலையுமாய்த் தன் ஏக புத்திரனை எதிர்பார்த்த வண்ணமிருந்தாள்.

இங்கு இப்படி இருக்க, திருவெண்காட்டுக்கு ஒரு யோசனை தூரத்தில் வந்து கொண்டிருந்த மாமல்லர், பரஞ்சோதி இவர்களுக்குள்ளே மாமல்லரிடமே உற்சாகம் அதிகம் காணப்பட்டது. பரஞ்சோதியின் முகத்தில் சோர்வு அதிகமாயிருந்ததுடன் அவருடைய குதிரை அடிக்கடி பின்னால் தங்கியது. அவரை மாமல்லர் அவ்வப்போது பரிகாசம் செய்து விரைவு படுத்தினார். "இது என்ன தளபதி! உம்முடைய குதிரை ஏன் இப்படிப் பின்வாங்குகிறது? 'உம்முடைய அவசரம் அதற்குத் தெரியவில்லையா, என்ன? குதிரைகளை வேணுமானால் மாற்றிக் கொள்ளலாமா?' என்றார். 'உம்முடைய முகம் ஏன் இவ்வளவு பிரகாசமாயிருக்கிறது? இதென்ன, நீர் உம்முடைய காதலியைக் காணப் போகிறீரா? அல்லது கொலைக் களத்துக்குப் போகிறீரா? பயப்படாதீர்! நான் நல்ல வார்த்தை சொல்லி உமையாள் உம்மை அதிகமாகக் கண்டிக்காமல் பார்த்துக் கொள்கிறேன்' என்று கேலி செய்தார். பொறுத்துப் பொறுத்துப் பார்த்துக் கடைசியில் பரஞ்சோதியால் பொறுக்க முடியாமல் போகவே, அவர் கூறியதாவது: "ஐயோ என்னுடைய மனநிலையை அறிந்து கொள்



ளாமல் புண்ணில் கோலிடுவது போல் பேசகிறீர்கள். உண்மையாகவே எனக்கு இங்கு வருவதற்கு விருப்பம் இல்லை. நீங்கள் வற்புறுத்தியபோது இணங்கி விட்டேன். ஏன் இணங்கினோம்

என்று இப்போது வருத்தமாயிருக்கிறது. உங்களுக்குப் புண்ணியமாய்ப் போகட்டும். இப்போதாவது நான் திரும்பிப் போவதற்கு அநுமதி கொடுங்கள். தாங்கள் எனக்காகச் சென்று என் தாயாரைப் பார்த்து, நான் சௌக்கியமாயிருக்கிறேன்; ஆனால், அவருக்கு நான் கொடுத்த வாக்கை நிறைவேற்ற முடியவில்லை. ஆகையால், அவரைப் பார்க்க வெட்கப்பட்டுக் கொண்டு வராமல் நின்றுவிட்டேன் என்று சொல்லி விடுங்கள்!''

இவ்விதம் உணர்ச்சி ததும்பிய குரலில் பரஞ்சோதி கூறியதைக் கேட்டு மாமல்லர் சிறிது திடுக்கிட்டார். ''தளபதி! உம்முடைய தாயாருக்கு நீர் என்ன வாக்குறுதி கொடுத்தீர்? அதை ஏன் நிறைவேற்ற முடியவில்லை?' என்று கவலை கொண்ட குரலில் வினவினார்.

''பிரபு! எதற்காக நான் பிறந்த ஊரையும் வீட்டையும் விட்டுக் கிளம்பினேன் என்று தங்களுக்குச் சொன்னேனே, அது ஞாபகமில்லையா? என்னுடைய மாமன் நமசிவாய வைத்தியர் தம்முடைய மகளை, கல்வி கேள்விகளில் சிறந்த உமையாளை, நிரட்சரகுட்சியான எனக்குக் கட்டிக் கொடுக்கப் பிரியப்படவில்லை. அதற்காக, கல்வியிற் கரையிலாத காஞ்சிமா நகருக்குப் போய் வாகீசப் பெருமானின் திருமடத்தில் சேர்ந்து படித்துச் சகல கலா வல்லவனாகத் திரும்பி வரும் எண்ணத்துடன் புறப்பட்டேன். ஆனால், நடந்தது என்ன? போனது போலவே நிரட்சரகுட்சியாகத் திரும்பி வந்திருக்கிறேன். திருநாவுக்கரசர் பெருமானைக் கண்ணாலேகூடப் பார்க்கவில்லை...'' என்று பரஞ்சோதி சொல்லி வந்த போது, நரசிம்மவர்மர் கலகலவென்று சிரித்தார். ''பல்லவ குமாரா! தங்களுடைய சிரிப்பு என் உள்ளத்தில் நெருப்பாய் எரிகிறது! வடக்குப் போர் முனையிலிருந்து சக்கரவர்த்தி என்னைத் தங்களிடம் அனுப்பியபோது தங்களை எனக்குக் கல்வி கற்பிக்கும்படியாகச் சொல்லியனுப்பினார்! ஆனால், தாங்கள் எனக்குக் கல்வி கற்பிக்கவும் இல்லை; நானாக ஏட்டைக் கையில் எடுப்பதற்கும் விடவில்லை; எப்போதாவது சிறிது நேரம் கிடைத்தால், அந்த நேரத்தில் ஆயனரின் குமாரியைப் பற்றிப் பேசிப் பொழுது போக்கி விட்டீர்கள்! ஆ! இராஜகுலத்தினரைப் போல் சுயநலக்காரர்களை நான் கண்டதில்லை!'' என்று சோகம் ததும்பிய குரலில் பரஞ்சோதி சொல்ல, அதைக் கேட்ட குமார சக்கரவர்த்தி இன்னும் உரத்த சத்தத்துடன் சிரித்தார்.

மாமல்லரும் பரஞ்சோதியும் திருவெண்காட்டை அடைந்தபோது கிராமத்தின் முகப்பில் அவர்களுக்குச் சிறப்பான வரவேற்புக் காத்திருந்தது. அப்போது மாமல்லருக்கு முன்னொரு நாள் மண்டபப்பட்டுக் கிராமத்தில் நிகழ்ந்த வரவேற்புக் காட்சியும், அன்று ஆயனரும் சிவகாமியும் முக்கியமாக வரவேற்புக்குரியவர்களாக இருந்ததும், தம்மை இன்னாரென்று தெரிவித்துக் கொள்ளாமல் அவர்களைப் பின் தொடர்ந்து சென்றதும் ஞாபகம் வந்தன.

ஆஹா! அதற்குப் பிறகு எத்தனை எத்தனை சம்பவங்கள் நிகழ்ந்து விட்டன! இதற்குள்ளாகக் கண்ணபிரான் மண்டபப்பட்டுக் கிராமத்துக்குச் சென்று, கொள்ளிடக்கரைச் சண்டையைப் பற்றியும் பாண்டியன் புறமுதுகிட்டு ஓடியதைப் பற்றியும் சொல்லியிருப்பான். சிவகாமி எவ்வளவு மகிழ்ச்சியடைந்திருப்பாள்! எவ்வளவு ஆர்வத்துடன் தம்முடைய வருகையை எதிர்பார்த்துக் கொண்டிருப்பாள்? இந்தத் தடவை அவளும் மற்றக் கிராமவாசிகளுடனே வந்து தம்மை வரவேற்பாளா? மாமல்லர் இத்தகைய மனோராஜ்ய பகற்கனவுகளில் ஈடுபட்டிருந்த சமயத்தில்,



"குமார சக்கரவர்த்தி நரசிம்ம பல்லவேந்திரர் வாழ்க!"

"கங்க மன்னனையும் மதுரைப் பாண்டியனையும் போரில் புறங் கண்ட வீர மாமல்லர் வாழ்க!"

"வீராதி வீரர் தளபதி பரஞ்சோதி வாழ்க!" என்பது போன்ற ஆகாச மளாவிய கோஷங்கள் அவருடைய பகற் கனவுகளைக் கலைத்துத் திருவெண்காட்டுக் கிராமத்துக்கு அவர்கள் வந்துவிட்டதைத் தெரியப்படுத்தின.

இருபத்து எட்டாம் அத்தியாயம்

பட்டிக்காட்டுப் பெண்

வரவேற்பு வைபவங்கள் எல்லாம் முடிந்த பிறகு நமசிவாய வைத்தியரின் வீட்டுக்குள்ளே மாமல்லரும் பரஞ்சோதியும் பிரவேசித்தார்கள்.

பல்லவ சாம்ராஜ்யத்தின் குமார சக்கரவர்த்தி திடீரென்று தங்கள் சின்னஞ்சிறு இல்லத்துக்குள் பிரவேசிக்கவே, அந்த வீட்டாரெல்லோரும் இன்னது செய்வதென்று தெரியாமல் திகைத்து நின்றார்கள். தளபதிக்குரிய வீர உடை தரித்திருந்த காரணத்தினால் பரஞ்சோதியை நிமிர்ந்து பார்த்துப் பேசக்கூட அவர்களுக்குக் கூச்சமாயிருந்தது. பரஞ்சோதிக்கோ அதைவிடக் கூச்சமாயிருந்தது.

கூடத்தில் போட்டிருந்த ஆசனம் ஒன்றில் யாரும் சொல்லாமல் தாமே மாமல்லர் உட்கார்ந்துகொண்டு சுற்றும் முற்றும் பார்த்தார். நிலைமையை ஒருவாறு அறிந்துகொண்டார். கண்களில் கண்ணீர் ததும்ப நின்ற மூதாட்டிதான் பரஞ்சோதியின் தாயார் என்று ஊகித்துத் தெரிந்துகொண்டு, "எங்கள் வீர தளபதியைப் பெற்ற பாக்கியசாலியான தாயைத் தரிசிக்க வேண்டும் என்று எனக்கு எவ்வளவோ ஆவலாயிருந்தது. அந்த பாக்கியம் இன்று கிட்டிற்று!" என்று சொல்லிவிட்டு பரஞ்சோதியைப் பார்த்து, "தளபதி! இது என்ன? அன்னைக்கு நமஸ்காரம் செய்யும். தொண்டை மண்டலத்துக்குப் போனதனால் மரியாதைகூட மறந்து போய் விட்டதென்றல்லவா நாளைக்கு எல்லாரும் குறை சொல்லுவார்கள்?" என்றார்.

உடனே பரஞ்சோதி முன்னால் சென்று அன்னையின் பாதங்களில் நமஸ்காரம் செய்தார். நமஸ்கரித்த குமாரனை வாரி 'எடுத்து உச்சி முகர வேண்டுமென்று ஆசை அந்த அம்மாளுக்கு எவ்வளவோ இருந்தது. ஆனால் குமார சக்கரவர்த்தி அங்கு வீற்றிருந்ததும், தன் குமாரன் போர்க்கோல உடை தரித்திருந்ததும் அவளுக்குத் தயக்கத்தை உண்டு பண்ணிற்று. பிறகு, நமசிவாய வைத்தியருக்கும் பரஞ்சோதி நமஸ்காரம் செய்துவிட்டுத் திரும்பி வந்து மாமல்லரின் பக்கத்திலே அமர்ந்து உச்சி மோட்டைப் பார்த்தார்.

நமசிவாய வைத்தியர், மாமல்லரை நோக்கி, "இந்தக் குடிசைக்குத் தாங்கள் வந்தது எங்களுடைய பாக்கியம்!" என்றார்.

மாமல்லர் அவரை நோக்கி, "ஓகோ! நமசிவாய வைத்தியர் என்பது தாங்கள் தானே? தங்களுக்கு ஓர் எச்சரிக்கை செய்ய விரும்புகிறேன். தங்கள் குமாரி என் சிநேகிதரை ரொம்பவும் பயப்படுத்தி வைத்திருக்கிறாள் போலிருக்கிறது. அதோ அந்தக் கதவண்டை நிற்பவள்தானே தங்கள் புதல்வி? பார்த்

தால் வெகு சாதுவாகத் தோன்றுகிறாள். ஆனால் பல்லவ சைனியத்தின் தலை சிறந்த தளபதியை, - வாதாபியின் யானைப் படையைச் சிதற அடித்த தீரரை, - கங்க நாட்டானையும், பாண்டியராஜனையும் புறமுதுகிடச் செய்த மகாவீரரை, - ரொம்பவும் பயப்படுத்தியிருக்கிறாள். இனிமேலாவது அப்படியெல்லாம் செய்ய வேண்டாமென்று தங்கள் குமாரியிடம் சொல்லுங்கள். பரஞ்சோதியை இங்கே அழைத்து வருவதற்கு நான் என்ன பாடுபட வேண்டியிருந்தது. தெரியுமா? கையைப் பிடித்துப் பலாத்காரமாய் அழைத்து வர வேண்டியிருந்தது. அம்மா! தாங்களே கேளுங்கள். தங்கள் புதல்வர் இங்கே வர மாட்டேன் என்று பிடிவாதம் பிடித்தாரா, இல்லையா என்று! கேளுங்கள், அம்மா!'' என்று மாமல்லர் கூறியபோது பரஞ்சோதியின் அன்னை மகனை அன்பும் கர்வமும் ததும்பிய கண்களால் பார்த்து, "குழந்தாய்! மாமல்லர் பிரபு சொல்வது உண்மையா? எங்களையெல்லாம் வந்து பார்க்க உனக்குப் பிடிக்கவில்லையா?'' என்றாள்.

"ஆம், அம்மா! பல்லவ குமாரர் உண்மையைத் தவிர வேறு எதுவும் சொல்லுவதில்லை. ஆனால் ஏன் எனக்கு இங்கு வந்து உங்களையெல்லாம் பார்க்கப் பிடிக்கவில்லையென்று அவரையே கேளுங்கள்!'' என்றார் பரஞ்சோதி.

அன்னை கேட்க வேண்டுமென்று வைத்துக் கொள்ளாமல் மாமல்லரே சொன்னார்: ''தங்கள் அருமை மகன் காஞ்சிக்குப் போய்க் கல்வி கற்றுப் புலவராகத் திரும்பி வருகிறேன் என்று தங்களிடம் வாக்குறுதி கூறிவிட்டுப் புறப்பட்டாராம். அந்த வாக்கை நிறைவேற்ற முடியவில்லையாம். போனபோது எப்படிப் போனாரோ அப்படியே திரும்பி வந்திருக்கிறார். அதனால் உங்களையெல்லாம் நிமிர்ந்து பார்க்கவே வெட்கமாயிருக்கிறதாம். எப்படியிருக்கிறது கதை?''

இவ்விதம் மாமல்லர் சொன்னதும் பரஞ்சோதியின் தாயார் மகனுக்கு அருகில் வந்து உட்கார்ந்து அவனுடைய முதுகைத் தடவிக் கொடுத்துக் கொண்டே, ''அப்பா! குழந்தாய்; நீ படித்தால் என்ன; படிக்காவிட்டால் என்ன? ஏதோ சிவபெருமான் அருளால் நீ உயிரோடு நல்லபடியாய்த் திரும்பி வந்தாயே, அதுவே எனக்குப் போதும். அந்நாளில் உனக்குப் படிப்புச் சொல்லிக் கொடுக்க வந்த அண்ணாவிமார்களை நீ அடித்து விரட்டினாயே, அதற்காகவெல்லாம் நான் உன்னை எப்போதாவது கோபித்ததுண்டா?'' என்றாள். இதைக் கேட்ட மாமல்லர் சிரித்துக் கொண்டே சொன்னதாவது:

''என்ன? என்ன? உபாத்தியாயர்களை அடித்து விரட்டினாரா உங்கள் மகன்! நல்லவேளை! நான் பிழைத்தேன்! இந்தச் சாதுப் பிள்ளைதான் என்னைத் தனக்குப் படிக்கக் கற்றுக் கொடுக்கும்படி தொந்தரவு செய்தார். அவர் சொல்வது உண்மை என்று எண்ணிக் கொண்டு நான் பாடம் கற்பிக்க ஆரம்பித்திருந்தேனானால் என்னையும் அப்படித்தானே அடித்துத் துரத்தியிருப்பார்? பிழைத்தேன்!'' என்று சொல்லி மீண்டும் சிரித்தார் நரசிம்மவர்மர்.

பரஞ்சோதி அவரைப் பரிதாப நோக்குடன் பார்த்துக் கூறினார்: "பிரபு! இது ஏதோ சிரிப்பதற்குறிய விஷயமாக நினைக்கிறீர்கள். உண்மையில் அப்படியல்ல. காக்கைக்குத் தன் குஞ்சு பொன் குஞ்சு ஆகையால், என் தாயார் நான் கல்வி கல்லாமல் திரும்பி வந்திருப்பதைப் பொறுக்கிறாள். ஆனால் என் மாமாவைக் கேளுங்கள். படிப்பில்லாத இந்த மூடனுக்கு அவர் தமது மகளைக் கட்டிக் கொடுப்பாரா என்று கேளுங்கள்...!

நமசிவாய வைத்தியரும் அந்தப் பரிகாசப் பேச்சில் கலந்து கொள்ள

எண்ணி "என்னைக் கேட்பானேன்? கல்யாணம் பண்ணிக் கொள்ளப் போகிற பெண்ணையே கேளுங்களேன்? அவளுக்குச் சம்மதமாயிருந்தால் எனக்கும் சம்மதந்தான்!" என்றார்.

அச்சமயம் ஏதோ கதவு திறந்த சத்தம் கேட்கவே எல்லாரும் அந்தப் பக்கம் நோக்கினார்கள். உமையாள் கதவைத் திறந்து கொண்டு உள் அறைக்குப் போய்க் கொண்டிருந்தாள்.

"எல்லாரும் சேர்ந்து பரிகாசம் செய்தால், குழந்தை என்ன செய்வாள்?" என்று உமையாளின் தாயார் முணுமுணுத்தாள்.



பிறகு நமசிவாய வைத்தியர், சக்கரவர்த்தி குமாரரைப் பார்த்து, "பரஞ்சோதியின் பராக்கிரமச் செயல்களைக் குறித்து அடிக்கடி கேள்விப்பட்டுக் கொண்டுதானிருக்கிறோம். அவனால் இந்தச் சோழ நாடே பெருமை அடைந்திருக்கிறது. மறுபடியும் இந்தப் பக்கம் எப்போது வருவானோ என்னவோ என்று எல்லாரும் ஏக்கப்பட்டுக் கொண்டிருந்தோம். ஏதோ எங்கள் அதிர்ஷ்டம் இவ்வளவு சீக்கிரத்தில் அவன் இங்கு வரலாயிற்று. அவனோடு தாங்களும் விஜயம் செய்தது, எங்கள் பூர்வ ஜன்ம தவத்தின் பலன் என்றுதான் சொல்ல வேண்டும். புவிக்கரசராகிய தாங்கள் வந்திருக்கும் சமயத்தில் நாவுக்கரசர் பெருமானும் இவ்வூருக்கு வந்திருக்கிறார். இப்பேர்ப்பட்ட நல்ல



சந்தர்ப்பம் மறுபடி எங்கே கிடைக்கப் போகிறது? இப்போதே ஒருநாள் பார்த்துச் சுப முகூர்த்தத்தில் விவாகத்தை நடத்தி விடுவோம். உமையாளையும் உங்களுடனேயே அழைத்துப் போய் விடுங்கள்!'' என்று நமசிவாய வைத்தியர் கூறி நிறுத்தினார்.

அப்போது மாமல்லர், ''பாரத்தீரல்லவா தளபதி! எப்படியும் உனக்குக் கல்வி கற்பித்துப் புலவராக்கி விடுவது என்று வைத்தியர் தீர்மானித்திருக்கிறார் என்று தெரிகிறது. வேறு எந்த உபாயமும் பயன்படாமற் போகவே, அவருடைய மகளைக் கொண்டே உமக்குக் கல்வி போதிக்கத் தீர்மானித்திருக்கிறார். ஆகா! கடைசியாக, நீர் அடித்துத் துரத்த முடியாத உபாத்தியாயர் ஒருவர் உமக்கு ஏற்படப் போகிறாரல்லவா?'' என்றதும் ஸ்திரீகள் உள்பட எல்லாரும் 'கொல்'லென்று சிரித்தார்கள்.

பிறகு, குமார சக்கரவர்த்தி நமசிவாய வைத்தியரைப் பார்த்து, ''ஐயா! அதெல்லாம் முடியாது. பல்லவ சாம்ராஜ்யத்தின் வீர தளபதிக்குத் தலைநகரத்திலே சக்கரவர்த்தியின் முன்னிலையிலேதான் கல்யாணம் நடைபெற வேண்டும். இது என் தந்தையின் ஆக்ஞை. காஞ்சிக்கு நாங்கள் போனவுடனே ஆள் விடுகிறோம். எல்லாரும் வந்து சேருங்கள். இன்னும் ஒரு விஷயமும் சொல்லி வைக்கிறேன். அப்படி ஒருவேளை உங்களுடைய குமாரி கல்வி கேள்விகளில் வல்ல புலவரைத்தான் கல்யாணம் செய்து கொள்வேன் என்று பிடிவாதம் பிடித்தால் அதற்கும் வழி இருக்கிறது. காஞ்சியில் எங்கள் குலகுரு ருத்ராச்சாரியார் இருக்கிறார். வயது தொண்ணூறுதான் ஆகிறது. தாடி ஒரு முழ நீளத்துக்குக் குறையாது. அவர் அறியாத கலையோ அவர் படியாத ஏடோ ஒன்றும் கிடையாது. அவரை வேண்டுமானாலும் உங்கள் புலமை மிகுந்த மகளைக் கல்யாணம் செய்து கொள்ளச் செய்கிறேன்!'' என்று பலத்த சிரிப்புக்களிடையே கூறிவிட்டு, ''தளபதி! வாரும், போகலாம்! திருநாவுக்கரசரைத் தரிசித்து விட்டு வரலாம்!'' என்று சொல்லிக் கொண்டே எழுந்தார்.

மாமல்லரும் பரஞ்சோதியும் நாவுக்கரசர் பெருமானை அவர் தங்கியிருந்த திருமடத்தில் பார்த்துவிட்டுத் திரும்பி வந்தவுடன், பரஞ்சோதியின் தாயார் அவருடைய கையைப் பிடித்துக் கொண்டு, ''இங்கே வா, தம்பி! ஒரு சமாசாரம்!'' என்று உள் அறைக்கு அவரை அழைத்துக் கொண்டு போனாள்.

அங்கே தரையில் படுத்துத் தேம்பிக் கொண்டிருந்த உமையாளைக் காட்டி, ''பார்த்தாயா உன்னுடைய பரிகாசப் பேச்சு இந்தப் பெண்ணை என்ன பாடுபடுத்தியிருக்கிறது! இப்படிச் செய்யலாமா, அப்பா!'' என்றாள்.

பரஞ்சோதி மனம் இளகியவராய், ''ஐயோ! இது என்ன பழி; நான் ஒன்றும் பரிகாசம் செய்யவில்லையே?'' என்றார்.

''செய்ததையும் செய்துவிட்டு இல்லை என்று சாதியாதே! இந்தக் குழந்தை என்ன சொல்லுகிறாள் தெரியுமா? நீ காஞ்சிப் பட்டணத்துக்குப் போய் அரண்மனை உத்தியோகமும் சக்கரவர்த்தியின் சிநேகிதமும் சம்பாதித்துக் கொண்டாயாம். இந்தப் பட்டிக் காட்டுப் பெண்ணைக் கலியாணம் செய்து கொள்ள உனக்கு இஷ்டம் இல்லையாம். அதனாலேதான் இப்படியெல்லாம் பேசுகிறாயாம்!''

''ஐயோ! அப்படி இல்லவே இல்லை, அம்மா!''

''இல்லையென்றால் நீயே இந்தப் பெண்ணுக்குச் சமாதானம் சொல்லித் தேற்று. நான் எவ்வளவோ சொல்லியும் இவள் கேட்கவில்லை!'' என்று கூறிவிட்டு, பரஞ்சோதியின் தாயார் வெளியேறினாள்.

அன்னையின் கட்டளையைச் சிரமேற்கொண்டு பரஞ்சோதி உமையா

ளைத் தேற்றத் தொடங்கினார். ஆனால் உமையாள் அவ்வளவு சீக்கிரம் தேறுகிற தாகக் காணவில்லை. வெகு நேரம் பரஞ்சோதி தன்னைத் தேற்ற வேண்டும் என்று அவள் ஆசைப்பட்டதாகத் தோன்றியது. தேறுவது போல் ஒரு கணம் இருப்பாள், மறுகணத்தில் மறு படியும் விம்மவும் விசிக்கவும் தொடங்கி விடுவாள்.

உமையாள் பட்டணத்து நாகரிகம் அறியாத பட்டுக்காட்டுப் பெண்தான். ஆன போதிலும் தன்னுடைய மனோ ரதத்தை நிறைவேற்றிக் கொள்வதற்கு உபாயம் அவளுக்குத் தெரிந்திருந்தது. பரஞ்சோதி சீக்கிரம் வெளியில் போவதற்கு முடியாதவண்ணம் வெகு நேரம் தன்னைத் தேற்றிக் கொண்டே இருக்க வேண்டிய அவசியத்தை அவள் உண்டு பண்ணிக் கொண்டிருந் தாள்.

எவ்வளவு நீளமான நாடகத்துக்கும் ஒரு முடிவு உண்டு அல்லவா? அவ் விதம் இந்தப் பொய்ச் சோக நாடகத் துக்கும் முடிவான மங்களம் பாட வேண்டிய சமயம் வந்தபோது உமை யாள் பரஞ்சோதியிடம் சத்தியம் வாங் இக் கொண்டாள்; தன்னையே அவர் மணந்து கொள்ள வேண்டும் என்ப தாகத்தான்.

அவ்வாறு சத்தியம் செய்து கொடுத்த பின் பரஞ்சோதி கூறினார்: "ஆனால், உமா! ஒன்று சொல்கிறேன், நம் கல்யாணம் உன் தந்தை சொன்னது போல் அவ்வளவு சீக்கிரமாக நடை பெறாது. வெகு காலம் நீ காத்திருக்க வேண்டியிருக்கலாம். என் சிநேகிதர் மாமல்லருக்கு எப்போது திருமணம் நடக்கிறதோ, அப்போதுதான் நமது கலியாணமும் நடைபெறும். அவருக்கு முன்னால் நான் இல்லறத்தை மேற் கொள்ள மாட்டேன்!"

"தங்களுக்காக அவசியமானால் யுக யுகமாக வேண்டுமானாலும் காத்திருக் கிறேன்!" என்றாள் உமா.

(தொடரும்)

அருள்வாக்கு

வேதாந்தத்திலே எல்லாம் உள் ளத்துக்குள்ளே ஹ்ருதய குகையில் சாந் தத்தில் ஒடுங்கி விடுவதாகச் சொல்லி யிருக்கும். அந்த சாந்தத்திலே நம்மைச் சேர்க் கத்தான் சங்கீதம் ஏற்பட்டிருக்கிறது. சியா மளா என்று ஸங்கீத மூர்த்தியாகப் பராசக்தி இருக்கிறபோது அவளுடைய உள்ளம் அப் படியே குழைந்திருக்கிறது. (ம்ருதுள ஸ்வாந்தாம்), அவள் பரம சாந்தையாக இருக் கிறாள் (சாந்தாம்) என்று காளிதாஸன் 'நவரத்னமாலா'வில் சொல்கிறார். உள்ளக் குழைவு என்பது ப்ரேமை, கருணை, ஸங்கீதத்தினாலே ஆத்ம சாந்தம் உண்டான பிறகு, ஸகலமும் அந்த ஆத்மாவே என்ப தால் எல்லாவற் றிடமும் அன்பு பொங்குவதைத் தான் சாந்தாம், ம்ரு துள ஸ்வாந்தாம் என்று கவி சொல்கிறார்.




இந்த்ரிய இன்பமாயில்லாமல், ஆத்மானந்தத்தில் சேர்ப்பதாலேயே ஸங் கீதம் இப்படிப்பட்ட ப்ரேமையுள்ளத்தை உண்டாக்குகிறது. நினைத்துப் பார்த்தாலே மனம் குளிர்கிறது. அம்பிகை வீணையில் சப்த ஸ்வரங்களையும் மீட்டியபடி, அந்த ரீங்காரத்திலேயே சொக்கிப் பரம சாந் தையாக இருக்கிறாள், அவளுடைய ஹ்ரு தயம் புஷ்பம் மாதிரி ம்ருதுளமாக ஆகி கருணை மதுவைப் பொழிகிறது. இதை நினைக்கும்போது பக்தர்களுக்கும் மனம் குழைகிறது. பக்தியும் அன்பும் சாந்தமும் தன்னால் ஏற்படுகின்றன. வர்ணனாதீத மான சாந்தத்தில், ஆனந்தத்தில் முழுகி யிருக்கிற ஸங்கீத அம்பிகை நமக்கும் சாந்தம், ஆனந்தம், அன்பினால் குழைந்த மனம் முதலியவற்றை அனுக்கிரஹிக் கிறாள்.

- ஜகத்குரு காஞ்சி காமகோடி
ஸ்ரீ சந்திரசேகரேந்திர சரஸ்வதி
சங்கராச்சார்ய சுவாமிகள்.

“நான் ஒண்ணு சொல்றேன். கோச்சுக்க மாட்டேளே!”

“இசை என்பது இறையனுபவம். தன்னை மறந்து பாடும் சங்கீதத்துக்கு ஒரு வடிவம் உண்டு. ஓர் அனுபவம் உண்டு. ஓர் ஒலி உண்டு. தியானத்தில் பிரும்மானுபவம் கிடைக்கும் எனில், அது மனம் ஒன்றிய நிலை. பிரபஞ்ச அலைகளையும் மன அலைகளையும் ஒரே சுருதியில் மீட்டும் நிலை, சங்கீதம் அதைத் தான் செய்கிறது. சுருதியும், தாளமும், லயமுமான சங்கீதம் ஒன்றாய் இணையும் பொழுது, நிச்சயமாக நமக்கு ஈஸ்வர ஸ்வரூபம் பிரத்யக்ஷமாகும்.”

- இப்பொழுதெல்லாம் சங்கீத கலாநிதி சுந்தர கணபதி இதையே



கிரீடத்தின்



சீஸன் சிறப்புப் பக்கம்

சொல்லிச் சொல்லி உருவேற்றி வருகிறார். இவர் என்ன சொன்னாலும் சங்கீதம்; என்ன செய்தாலும் சங்கீதம். மேதை, ஸ்வரம் இழுத்த இழுப்பிற்கு வா என்றால் வரும். நில் என்றால் நிற்கும். ஆடு என்றால் ஆடும். கேட்பவனின் பிரமிப்பில் உழைப்பு, நுணுக்கம், பயிற்சி, கற்பனைத் திறம் எதுவும் தோன்றாது. வாய் பிளந்து பொத்தாம் பொதுவில் ஒரு பாராட்டு.



கீழே!

பிரமாதம், நிஜமாகவே சுந்தரகணபதி பாடினா, சஸ்வர தரிசனம் கிடைக்கிறது. அவருக்கு வேறு என்ன வேண்டும், மித மிஞ்சிய பாராட்டைத் தவிர?

சரஸ்வதி நெய்யில் வறுத்த முந்திரிப் பருப்பை பாயசத்தின் தலையில் கொட்டினான். மணி சத்தம் கேட்கவில்லை. தம்பூராவின் சுருதி ஓங்காரமாய் ஒலிப்பதும், சுந்தரகணபதி இழைவதும், மீண்டும் ஒலி நிற்பது மட்டும் கேட்கிறது. சொந்த சாகித்தியம். இசை பகுக்கப்பட்டதிலிருந்து ட்யூன் போட்டு, ராக லக்ஷணத்தை மேல் ஏற்றி, அளந்து, அளந்து வார்த்தைகளைப் போட்டு, ஜீவ ஸ்வரம், சிட்டை ஸ்வரம் என பார்த்து, பார்த்து அலங்கரிக்கப்பட்ட சாகித்தியம். இசைப் பாரம்பரியம் பாதியில்

சத்தியப்ரியன்

நிற்பதை விரும்பாத சுந்தரகணபதி சொந்த சாகித்யம் இயற்றி, இசை அமைத்து முழு வடிவம் கொடுக்கிறார். மாதம் ஒரு சாகித்தியம் என்ற ரீதியில்.

இந்த முறை அடாணா. சரஸ்வதிக்கும் ஒரு சின்ன ஆசை இருந்தது. அவருக்கு முன்னதாகவே அடாணாவுக்கு ஒரு வடிவம் கொடுத்தால் என்ன, எனத் தோன்றியது. பதினைந்து வருட தாம்பத்யத்தில் இசைப் பரிவர்த்தனைகள் இருவருக்கு இடையிலும் இல்லை எனினும், அவரது ப்ராடிஜி மற்றும் முப்பது வருட இசை அனுபவத்தின் முன் நிரவல்கள் பற்றியோ, ஆலாபனை பற்றியோ, ராக சஞ்சாரம் பற்றியோ, விஸ்தாரமாகப் பேச முடிந்ததில்லை. அவர் கேட்டதில்லை. அவளும் சொன்னதில்லை. இசை என்பது மூன்றாவதாய் ஒரு சூட்சம உருவை அடைந்த பின்பு, அந்த வடிவைப் பார்த்து பரவசப்படுவதும், பிரமிப்பதும், சொல் பேச்சு கேட்க வைப்பதுமாய் ஆகி விட்டது. அதே வடிவு மூலமே அவரைச் சந்திக்க வேண்டியிருக்கிறது என்பதை உணர்ந்தபொழுது, பல வேளைகளில் தான் ஒரு ஞான சூன்யம் என்ற தாழ்வு மனப்பான்மை அவளுக்கு ஏற்பட்டிருக்கிறது. எனவே, அவரைப் போல் அவள் அசுர சாதகம் செய்ததில்லை. துலக்கித் துலக்கி வைக்கத்தான் தாமிரப் பாத்திரம் அழகு; இல்லை என்றால் பச்சை ஏறி விடும் என கூறிக் கொண்டு அவர் இரவு, பகல் பாராமல் பண்ணும் சாதகம் வெறியோடு இருக்கும். அதுபோல் எல்லாம் அவளால் முடியாது.

மேலும் அவள் ஓர் இசைப் பாரம்பரியத்தின் தொடர்கண்ணியான வீட்டில் வாழ்க்கைப் பட்டது, சங்கீத அனுபவத்துடன் இணைய மட்டுமில்லை என்பது புரிந்தது. ஸ்வாமி கூடத்தில் வீணையை மீட்டி இசையுடன் ஒன்றியபொழுது "வெள்ளமா சங்கீதம் கொட்ற வீடும்மா இது. அவனோட தனி சாதகம்; சிஷ்யாளுக்குப் பயிற்சி வகுப்புகள்; பகவான் முன்னாடி சங்கீத நாமாவளின்னு பல ரூபங்களில் இசைதான் இங்கே உணவு. வாசல்ல பூவா கொட்டும் தங்க அரளிச் செடிக்குக் கூட லதாங்கி எது, கல்யாணி எதுன்னு பேதம் கண்டுபிடிக்கத் தெரியும். இசை பற்றிய விஷயங்களை அவன் பார்த்துக்கட்டும். நீ வீட்டை மட்டும் பார்த்துண்டா போதும்" என்றார் மாமனார். மைலாப்பூரில் கற்பகாம்பளைப் பார்த்து வெளிப்பிரகாரம் சுற்றிக் கொண்டிருந்தபொழுது, பழைய சங்கீத குருவைப் பார்க்க நேர்ந்தது. "பெரிய சங்கீத பரம்பரை வீட்டில் வாக்கப்பட்டு போனது சந்தோஷமா இருக்கு குழந்தே. தினம் பாடிண்டிருக்கியோ?" என்றதற்கு அவள் சொன்ன பதில், 'தினம் கேட்டுண்டிருக்கேன்.'

அம்பாள் முன்னால் பாத்திரத்தை வைத்து மூடியைத் திறந்தாள். இசை பிரவாகமாய்ப் பொங்கி எழ, அவர் நாதம் எங்கும் வியாபிக்க, ஒரே ஒரு தலையசைப்பு சம்மதத்துடன் அவள் தீபாராதனை காட்டி பாயசத்தை நைவேத்யம் செய்கிறாள்.

"சிவ சிவா!" என சுந்தரகணபதி சாஷ்டாங்கமாக அம்பாள் முன்னால் விழுந்து நமஸ்கரித்தார்.

"சாகித்தியம் முழுத் திருப்தியோட உருவாயிடுத்து" என்றார் பொதுவில். அவருக்காகவே சொல்லிக் கொண்டாரோ என்னவோ, அவள் பேசாமல் வாய் மூடிக் கிடந்தாள்.

"சிஷ்யப்பசங்க வருவதற்கு முன்னால் கீழ வந்து கையை நனைச்சிண்டு போயிடுங்கோளேன்."

சரஸ்வதி சொன்னதைக் கேட்டு கீழே டைனிங் ஹாலுக்குச் சென்றார்.

"இந்தப் படத்துக்கு அவர் சிறையில வச்சு வசனம் எழுதினார்!"
"அப்ப சிறை - கதை - வசனம்'னு சொல்லுங்க!"
- எஸ். முகம்மது யூசுப்

"**அ**ம்மா, அப்பா எங்கே?"

"கபாலி கோவிலில் தொடர் சொற்பொழிவு கேட்கப் போயிருக்கா."

"குழந்தைகள்?"

"சிநேகிதா வீட்டிற்கு விளையாடப் போயிருக்கா."

மணி ஊர்ந்து கொண்டே இருந்தது. சாப்பிடுவதாகப் பெயர் பண்ணிக் கொண்டிருந்தார். மனம் முழுவதும் புதிதாக இயற்றிய சாகித்தியம், அதன் மெட்டு, அதன் கட்டமைப்பு இதில்தான் உழன்று கொண்டிருந்தது. சொந்த சாகித்தியம் என்பது கன்றுக்குட்டியை இழுத்துக் கொண்டு களத்துமேட்டில் ஓடுவது போல. சொல் பேச்சு கேட்காத, திமிரும் கன்றுக்குட்டி, இழுப்பாய், இழுத்துக் கொண்டு ஓடும் கன்றுக்குட்டி, போக்கு போல ஓட்டி, நீர் காட்டி, புல் மேய விட்டு கழுத்தோடு அணைத்துக் கொண்டால் எழும் பரவசம் இதற்கும்

உண்டு.

"பத்தரை மணியாச்சே! இன்னும் பசங்களைக் காணுமே" என்றார். பித்து பிடித்தவர் போல கூடத்தில் தாறுமாறாக நடந்ததில் முகம் சிவந்து போயிருந்தது. முதல் நாள் இரவு பரீட்சைக்கு விழுந்து, விழுந்து படித்து நாளை விடைத்தாளில் கொட்டி விடலாம் எனக் காத்திருந்து, தேசத் தலைவரின் மரணத்தால் பரீட்சை தள்ளிப் போனால் ஒரு மாணவன் எவ்வளவு அவஸ்தைப் படுவானோ, அப்படிப் பட்டுக் கொண்டிருந்தார்.

"தலை போகும் காரியம்னாலும் ஒரு டெலிஃபோன் அடிச்சுச் சொல்லலாம் இல்லியா?"

அந்த ஆங்காரம் அச்சமூட்டுவதாக



இருந்தது.

அவர் முன்னால் போய் நின்றாள். கீழ்க் கண்ணால் ஒரு வீச்சு. உனக்கென்ன தெரியும் என்பதாய் பாவம்.

"நான் ஒண்ணு சொல்றேன். கோச்சுக்க மாட்டேளே" நேராய்ப் பார்த்துப் பேசுவதற்குள் நூறுமுறை மென்று விழுங்க வேண்டியதாயிற்று.

"சொல்லு" சிம்மம் உத்தரவு கொடுத்தது.

"நான் கணக்கா உருவேத்தி சாகித்தியம் பண்ணி வெச்சிருக்கேன். அதை பாவம் மாறாம நீங்க பாடினா நான் உங்க சிஷ்யர்களுக்குப் பதிலா பாடறேன். நன்னா வர்றதா, அதாவது நீங்க இயற்றின சாகித்தியம் நன்னா வர்றதான்னு பாருங்கோ."

சுந்தரகணபதி அவளை ஏறெடுத்துப் பார்த்தார். இப்படி ஒரு வழி இருக்கிறதா?

"தம்பூராவை எடுத்துண்டு வா."

சுந்தரகணபதி சரஸ்வதியின் எதிரில் அமர்ந்தார். தம்பூராவில் சுருதி சேர்க்கப் பட்டது. சரஸ்வதி சில நொடிகள் கண்களை மூடி இயானித்தாள். என்ன அற்புதமான ஒரு நாள். அவர் இயற்றிய கீர்த்தனையை அவர் முன் அமர்ந்து அவர்பாட, தான் திருப்பிப் பாடும் பாக்கியம் கிடைத்த நாள்.

ஆலாபனை, சங்கீதம் கடவுளாகத் தோன்றவில்லை அவளுக்கு. ஒரு கணிதப் புதிர். கடவுள் என்றால் அதனுடன் ஒன்ற முடியாமல் போகிறது. சிறுமிகள் விளையாடும் பாண்டி விளையாட்டு. ரைட்டா? ரைட்டு! ரைட்டா? ரைட்டு! ரைட்டா? தப்பு. கண்களைப் பொத்தி ஆள் பிடிக்கத் துழாவும் கைகளுக்கு உள்ள ஆர்வமே சங்கீதம். ஆலாபனையில் முழுமையாகக் குரல் பொருந்தியது.

பல்லவி, வார்த்தைகள் ஒவ்வொன்றும் இசையின் லக்ஷணத்தை சிதைக்காமல், மேலும் ராகத்தை பிரதிபலிப்பதாக அமைக்கப்பட்டிருந்தன. கண்களை மூடினால் கீர்த்தனை கண்காணாத லோகங்களுக்கு இட்டுச் சென்றது. இதுநாள் வரை மூடி வைக்கப்பட்ட சிறையின் கதவு திறக்கப்பட்டு, ஆகாயமும், பூமியும், காற்றும், ஸ்வதந்திரமுமான பெரு வெளியில் தள்ளி விடப்பட்டதைப் போல அவள் ஓடினாள்; சுழன்றாள்; தாவினாள்; மருகினாள்; உருகினாள்.

நிதமுனைப் பணிந்து சதாசிவா!

நிழலெனத்தொடர்ந்தேன் சதாசிவா!

அடாணா நெருடியது. மேதை கால் சறுக்கிய இடம். பள்ளத்தில் கால் வைக்காமல் தாவ நினைத்து முடியாமல் மீண்டும் கால் வைக்காமல், தாவ நினைத்து முடியாமல், மீண்டும் கால் இடறியது. பீடத்தில் அமர்ந்து விட்டால் ஆலோசனை வழங்கலாமே அன்றி, பெற முடியாது.

ஒரே ஒருமுறை அவள் நிறுத்தினாள்.

நிதமுனைப் பணிந்தேன் சதாசிவா!

நிழலெனத் தொடர்ந்தேன் சதாசிவா!

நிஷாதம் என்ற சின்ன பல்சக்கரம் தூக்கப்பட, எவ்வித உராய்வுமின்றி அடாணா படு வேகமாகச் சுழலத் தொடங்கியது.

சுந்தரகணபதி அவளைப் பார்த்தார்.

"*நிதமுனைப் பணிந்து சதாசிவா!*" என்றார் மீண்டும். இது மீண்டும் பரிசோதனை. ஸெர்வீசுக்குப் போய்விட்டு வந்த காஸ் அடுப்பின் வால்வு திறந்து, பர்னரை எரிய விட்டு, குவியதாக நீலத்தழல் வருகிறதா என சோதிக்கும் தன்மை.

'*நிதமுனைப் பணிந்தேன் சதாசிவா!*" அவளும் விடாமல் பாடினாள். இயல்பாய் அடாணாவில் உட்கார முடிந்தது.

'*நிதமுனைப் பணிந்தேன் சதாசிவா!*"

என சுந்தரகணபதியும் பாடினார். ஒரு சந்தோஷ ஊற்று அவளுக்குள்ளே வெடித்துக் கிளை பரப்பி விரிந்தது. என்ன ஒரு அங்கீகாரம். ஆஹா!

கீர்த்தனை முடிந்தது.

அவர் முகத்தில் பழைய தவிப்பு இல்லை. பரபரப்பு இல்லை.

அவள் சிறிது நேரம் அவர் சொல்லுக்குக் காத்திருந்தாள். அவர் கண்கள் மூடிய நிலையில் இருந்தார். என்ன யோசனை ஓடுகிறதென்று பார்ப்பவர்களுக்கு எப்படித் தெரியும்?

தம்பூராவை மூலையில் சாத்தி வைத்தாள்.

"சரி! சரி! நீ கீழ போய்க்கோ. நான் சித்த நாழி கழிச்சு வர்ரேன்" என்று மட்டும் கூறினார்.

மதியம் மாமனார், மாமியாரை கவனிப்பதும், குழந்தைகளை விரட்டுவதுமாகக் கழிந்தது.

நான்கு மணி சுமாருக்கு கோபியும் மற்ற நான்கு சிஷ்யர்களும் வந்தார்கள். முரட்டு, முரட்டுப் பைகளில் ஸ்வீட், காரம், பழம் இத்தனையும் வைத்து சுந்தரகணபதி முன்னால் சாஷ்டாங்கமாக விழுந்து வணங்கினார்கள். கீர்த்தனை, அப்பியாசம் முடியாமல் போனதற்கு, கத்தி, கூப்பாடு போடலாம் என்பதற்குள் ஸ்வீட், பழம் என வாயை அடைத்து விட்டனர்.

"கோபிக்கு சினிமாவில் பாட சான்ஸ் கிடைச்சிருக்கு!"

ஏற்கெனவே அறிமுகமான பிரபல இசையமைப்பாளர் முன்னறிவிப்பின்றி காலையில் ரிக்கார்ட்டிங் தியேட்டருக்கு வரச் சொல்ல, சிஷ்யர்கள் ஐவரும் ஏவிஎம் ஸ்டுடியோவுக்குப் போய் விட்டார்களாம். சினிமாக்காரர்கள்தான் க்ஷணசித்தம் க்ஷணபித்தம் உடையவர்கள் என்பதால், நெறிமுறைகள் மீறப்பட்டு தகவல் தெரிவிக்க முடியாமல் போயிற்று என்றார்கள்.

"சரஸ்வதி! கோபி நல்ல நியூஸா கொண்டு வந்திருக்கான். போய் திரட்டுப் பால் பண்ணி எடுத்துண்டு வா" என்றார். கட்டளை மற்றும் அப்புறப்படுத்துதல். ஒரு கல், இரண்டு மாங்காய்.

பாலைக் கொட்டி கடாயில் கண்ட, கண்ட காய்ச்சியபடி இருந்தாலும் மனமும், செவியும் கூடத்தில்தான் இருந்தன; அடாணா பற்றி விஸ்தாரமான பேச்சு. கீர்த்தனை உருவான விதம்; தினம் அவர் அதை மெருகேற்றிய விதம், எல்லாம் விவரிக்கப்பட்டது.

அத்தனை அலங்காரங்களுக்கு நடுவிலும் ஒரே ஒரு எளிய வார்த்தை. 'நீங்க வராட்டி என்னடா, என் மனைவி என் கீர்த்தனையை எப்படிப் பாடினா தெரியுமா?" கடைசி வரையில் வரவே இல்லை.

சிஷ்யகோடிகள் கீர்த்தனையைப் பாடச் சொல்ல நிர்ப்பந்திப்பதும், மாமியார் ஸ்ருதி பாக்ஸை ப்ளக்கில் சொருகுவதும், அவர் தரையில் அமர்ந்து பாடுவதும் சமையலறையிலிருந்து அவளால் கேட்க முடிந்தது.

நிதமுனைப் பணிந்தேன் சதாசிவா!
நிழலெனத் தொடர்ந்தேன் சதாசிவா!

சரஸ்வதி ஆறு கண்ணாடிக் கிண்ணங்களில் கிளறிய திரட்டுப் பாலை இட்டு நிரப்பினாள்.

"பிரமாதம் மாஸ்டர்" சிஷ்யர்கள் மெய் மறந்து பாராட்டினார்கள்.

கீழே தரையில் சுந்தரகணபதியின் முன்பு அமர்ந்திருந்த சிஷ்யர்களிடம் ட்ரேயை நீட்ட, ஆளுக்கொன்றாய் எடுத்துக் கொண்டார்கள்.

முகத்துக்கு முகம் பார்க்கும் பொழுதாவது பாராட்டி, ஒரு சொல் விழாதா என மனம் அலை பாய்ந்தது.

"குறிப்பா நிதமுனைப் பணிந்தேன் சதாசிவ என்ற இடத்தில் அடாணா மயில் மாதிரி சிலிர்த்திண்டு தோகை விரிச்சு ஆடுறது சார்..." என்றான் கோபி.

எஞ்சிய ஒரு கிண்ணத்தை அவர் முன் நீட்டினாள். சுந்தரகணபதியின் முகத்தை ஏறிட்டாள். அவரும் நேர்ப்பார்வையாகவே பார்த்தார்.

"பால்கோவா பிரமாதம்" என்றான் கோபி.

"என் மனைவி ரொம்ப நன்னா திரட்டுப் பால் பண்ணுவா. கோபியோட வெற்றியைக் கொண்டாடும் முகமாக நான்தான் பண்ணச் சொன்னேன்" என்றார் சுந்தரகணபதி. ○



"பையனுக்கு நல்ல இடத்தில் பொண்ணு பார்த்து முடிச்சு வைக்கணும்னு ஆசைப் பட்டேன் அதுக்குள்ள...!"

"அவசரப்பட்டு காதல் கல்யாணம் பண்ணிக்கிட்டானா?"

"இல்லை. சாமியாரா ஆயிட்டான்!"

- நெல்லைராஜ்

தனி ஈழம் வேண்டாமாமே...?

● டி. சுப்ரமணியன், மேலையூர்.

? இவ்வாண்டு இஃப்தார் விருந்துக்குப் பதில் அதற்கான தொகையை ஆதரவற்றோர் இல்லத்திற்கு நன்கொடையாக்க அப்துல் கலாம் முடிவு செய்துள்ளாரே?

! ஜனாதிபதியின் இஃப்தார் விருந்து அரசுச் செலவில் நடப்பது. நன்கொடையும் அரசுச் செலவு என்றால் அதில் அர்த்தமேயில்லை. சொந்த நன்கொடை என்றால் 'அட' என்று நிமிர்ந்து உட்காரலாம்.

● முகவை முத்துசாமி, தொண்டி.

? உங்களைப் பாதித்த 'கதையல்ல நிஜம்' எது..?

! எல்லா நிகழ்ச்சிகளும் சமூகத்தின் இருண்ட பக்கத்தை வெளிச்சம் போட்டுக் காட்டுகின்றன. நிகழ்ச்சியில் கலந்து கொள்ளும் பாதிக்கப்பட்டவர்களின் உணர்ச்சியை, கட்டாயப்படுத்தித் தூண்டிவிட்டு அழ வைக்கிறார்களே... இதை 'விஷுவல் பொல்யூஷன்' என்றுதான் சொல்ல வேண்டும்.

● எம். சம்பத், வேலாயுதம்பாளையம்.

? சென்னை நகரில் போஸ்டர்கள் ஒட்டவும் விளம்பரப் பலகைகள் வைக்கவும் தடையாமே... வரவேற்கிறீர்களா...?

! நஷ்டம் விளம்பரதாரருக்கு மட்டுமல்ல; மாநகராட்சிக்கும்தான். போஸ்டர் விளம்பரங்களுக்கென்று முக்கிய சில இடங்களை ஒதுக்கி, அங்கு மட்டுமே வரிசைக் கிரமமாக ஒட்டச் செய்யலாம். போக்குவரத்துக்கு இடையூறு இல்லாத இடங்களில் விளம்பரப் பலகைகளை அனுமதிக்கலாம். ஒரேயடியாகத் தடை செய்வது பிடிவாதத்தின் அறிகுறியாகத் தோன்றுகிறது.

● மல்லிகை மன்னன், மதுரை.

? 'தனி ஈழமும் வேண்டாம் ஒரு புண்ணாக்கும் வேண்டாம் – மாநில சுயாட்சி தந்தால் போதுமடா சாமி' என்று பிரபாகரன் அண்ணாச்சி இறங்கி வந்திருக்கிறாரே...?

! முதலில் அதை வாங்கிக்குவாரு... அப்புறம் இன்னும் கொஞ்சம் கேட்பாரு. இந்தப் புலிங்களுக்குத் தந்திரமும் தெரியும்.

● சி. பிரசன்னகிருஷ்ணன், சேத்துப்பட்டு.

? தமக்களிக்கப்பட்ட இரண்டு பதவிகளையும் ராஜினாமா செய்துவிட்டு, கம்பீரமான புன்னகையுடன் பத்திரிகையாளர்களிடம் பேசிய நீதிபதி வேங்கடசாமி பற்றி...?

! இரண்டாவது பதவி அளிக்க முன்வந்த சமயத்திலேயே கொஞ்சம் தொலைநோக்குடன் மறுத்திருந்தால் டெஹல்கா விசாரணையாவது பிழைத்திருக்கும். இப்போது, பதவிகளும் போச்சு, விசாரணைக்கும் தடங்கல்.

● மலரிதழ், ஆரணி.

? கர்நாடக இசை மேல்நாட்டு இசையால் முடங்கிப்போய் விட்டதே...?

! டிசம்பர் முதல் தேதி ஹிந்து நாளிதழில் வந்த நிகழ்ச்சி நிரல்களைப் பார்த்துவிட்டும் இந்தக் கேள்வியை நீங்கள் கேட்கிறீர்கள் என்றால் ஆச்சர்யமாய் இருக்கிறது. ஆல்போல் தழைத்து, குளுமையான நிழல் தந்து கொண்டிருக்கிறது கர்நாடக இசை.

● எஸ். பொன்னுசாமி, உடுமலைப்பேட்டை.

? சில பேருந்துகளின் வழித்தடத்தைத் தனியாருக்குக் கொடுப்பதைவிட அந்தத் தொழிலாளர்களுக்கே கொடுக்கலாம் என்று ராமதாஸ் கூறியிருப்பது பற்றி...?

! கூட்டுறவுத் தத்துவத்தின் பிதாமகரான ருஷ்யாவே அதற்கு இன்று டாட்டா சொல்லியாச்சு



• புதாக மாக!


• விருந்து அரசியல்!




• ரத்தான விருந்து



• தடைப்பட்ட விசாரணை!



• புட்டு வைத்த உண்மை!





• பிரமிப்பூட்டும் வேகம்!



• இறங்கிய தந்திரம்

என்பது ராமதாஸுக்குத் தெரியும். வழக்கம் போல் அரசியல் பண்ணுகிறார்; அவ்வளவுதான்.

● **கே.வி.ராமன், சென்னை _ 73.**

? *சேலம் அரசு மருத்துவ மனையில் வயிற்றுப் போக்குக்காக அனுமதிக்கப்பட்ட குழந்தைக்கு வலது கை இழப்பாமே!*

! குளுகோஸ் ஏற்று கையில் தொற்றையும் சேர்த்து ஏற்றியதன் சோக விளைவு... இனி என்ன செய்தாலும் குழந்தைக்குக் கை திரும்பக் கிடைக்குமா? மருத்துவ மனைகளில் பணிக்கு அமர்த்தப் படுவோர் பட்டம் பெற்றிருந்தால் போதாது. சுத்தம் _ சுகாதாரம் போன்றவற்றில் பயிற்சியும், மனித நேய உணர்வும் உள்ளவர்களாக இருக்க வேண்டும். முன்னதைக் கற்றுத் தரலாம்; மனித நேயம் என்பது உள்ளிருந்துதானே சுரக்க வேண்டும்.

● **பஞ்சவண்ணமகன், கருப்பம்புலம்.** ❑

? *'பூரண ஒத்துழைப்பு உண்டு' என்று நாகப்பா மனைவியிடம் சொல்லிவிட்டு, 'தமிழக எல்லைக்குள் நுழைந்தால் கொளத்தூர் மணியைக் கைது செய்வோம்' என்பது எவ்வகையில் சரி...?*

! இரட்டை வேடம் என்ற அளவில் சரி... நாகப்பாவை விடுவிப்பதற்கு மனிதாபிமான நோக்கில் மட்டுமே பிரச்னையை அணுகித் தீர்க்க வேண்டிய நெருக்கடியில் இருக்கிறோம்.

● **புலவர் எஸ்.கே. மூர்த்தி, கும்பகோணம்.**

? *அமெரிக்காவுக்குச் செல்லப்பிள்ளை இந்தியாவா, பாகிஸ்தானா?*

! பாகிஸ்தான்தான் என்பதை நம்மவங்க மறந்துட்டாலும் புடின் புட்டு வைத்திருக்கிறாரே புலவரே!

● **ஆர். காஞ்சனா, நெய்வேலி - 3.**

? *பணத்தை அச்சடிக்கும் அதிகாரம் மாநில அரசுக்கு இருந்தால், அனைத்து வாக்குறுதிகளையும் ஒரே ஆண்டில் நிறைவேற்றுவோம் என அமைச்சர் பொன்னையன் கூறுவது குறித்து...?*

! அந்த அதிகாரம் மாநில அரசுக்கு உண்டு என்று நினைத்துக் கொண்டு வாக்குறுதிகளை அள்ளித் தந்துவிட்டார்களாமா... ஐயோ, பாவம்!

● **வி.எம். முகமது இஸ்மாயில், வேலூர்.***

? *'ஆசையே துன்பத்துக்குக் காரணம்' என்றார் புத்தர். நாம் இலட்சியத்தின் மீது ஆசை வைத்தால்தானே அது நிறைவேறும்...*

! ஆசையை விடவேண்டும் என்பதே கூட ஓர் ஆசைதான் என்று வாதிடலாம். ஆனால் அது விதண்டாவாதம். உலகியல் இன்பங்கள் நிலையானவை அல்ல என்ற உணர்வுதான் முக்கியம். அதை அடைந்து விட்டால் இலட்சியங்களென்ற உயர் இலக்குகளை அடைவது எளிதாகும்; வலியற்றதாக அமையும்.

● **அஜார், சென்னை _ 18.**

? *'ஜெ'வின் சுறுசுறுப்பு எப்படி...?*

! அதிகாரிகளைத் தூக்கியடிக்கும் வேகத்தில் சச்சின் சேவாக்கைக் கூடத் தோற்கடித்து விட்டார்.

● **அ. ராஜா ரஹ்மான், கம்பம்.**

? *மறைந்த முன்னாள் துணைப் பிரதமர்கள் ஜெகஜீவன் ராம் _ தேவிலால் வசித்த டெல்லி வீடுகளை நினைவுச் சின்னமாக மாற்ற மத்திய அரசு மறுத்துள்ளது பற்றி...?*

! சரிதானே. எல்லாமே நினைவுச் சின்னம் அது _ இது என்று போனால், இன்றுள்ள தலைவர்கள், அதிகாரிகள் குடியிருக்க வீடு வேண்டாமா?

● **திலீப், திருச்சி - 14.**


? *எளிமை _ இனிமை _ எதற்கு சர்ப்பு அதிகம்.*

! எளிமைக்குத்தான். அது எப்போதும் இனிமையையும் உள்ளடக்கியிருக்கும் என்பதால்.

* ரூ.50/- பரிசு பெறுபவர்:
வி.எம். முகமது இஸ்மாயில்,
6/1, ஆதம் சாயபு தெரு,
சைதாப்பேட்டை, வேலூர் - 632 012.

❑ ரூ. 100/- பரிசு பெறுபவர்:
பஞ்சவண்ணமகன்,
கருப்பம்புலம் - 614 707.

மொட்டுவிட்டிருக்கு..



• சரண்யா

திருத்தமான உச்சரிப்புடனும், நயமான குரலுடனும் பாடும் இளைஞர் சாகேதராமன், கோயமுத்தூரில், பி.எஸ்.ஜி. கல்லூரியில் மூன்றாம் ஆண்டு சாஃப்ட்வேர் இஞ்சினியரிங் மாணவர். ஒய்ரசிளம் என்ற இளைஞருக்கான இசை அமைப்பு நடத்திய போட்டியில் முதல் பரிசைப் பெற்றவர். சகோதரி விசாகா சந்தானமும் நன்றாகப் பாடக்கூடியவர். பெற்றோருக்கும் இசையில் ஆர்வம் உண்டு. எனவே கல்வி ஒரு பக்கம் இருந்தாலும், லால்குடி ஜெயராமனிடம் இசை பயிலுகிறார் சாகேதராமன். சென்னைக்கு வரும்போதெல்லாம் குருவின் வீட்டில் சாகேதராமனைக் காணலாம். "இசையை



• குருபிரசாத்



• சாருமதி

சில சங்கீத இளைஞர்கள் அறிமுகம்...

முழு நேரத் தொழிலாகக் கொள்ளும் எண்ணம் உண்டா?" என்று கேட்டபோது "இப்போதைக்கு இல்லை" என்றார் சாகேதராமன்.



• குரு சரண்



• பாலமுரளி கிருஷ்ணா

"காரணம்?"

"நான் நன்றாகப் படிக்கிறேன் கல்லூரியில் டாப்-த்ரீ இடத்தில் இருக்கிறேன்" என்றார் தெளிவாக.

இசைக்காகவே புலம்பெயர்ந்து வருகிறவர்களை ஒரு பட்டியல் போட்டால், சாருமதி ரகுராமனுக்கும் அதில் ஓர் இடம் உண்டு.

டி.என். கிருஷ்ணனிடம் சுமார் ஆறு வருடங்களாக வயலின் கற்றுக் கொண்டார் சாருமதி. எப்படி.? பம்பாயிலிருந்து சென்னைக்கு வருவார். இரண்டு மாதங்களுக்கு ஒருமுறை வந்து, ஒரு வாரம் போல் தங்கியிருந்து கற்றுக் கொண்டு பம்பாய்க்குப் பறந்து விடுவாராம். பெண்ணின் இசைதான் முக்கியம் என்று பெற்றோர் தீர்மானித்தார்கள். வேலை காரணமாக அப்பா பம்பாயிலேயே தங்கி விட, அம்மாவோடு நிரந்தரமாகச் சென்னைக்குக் குடி வந்து



விட்டார் சாருமதி. மயிலாப்பூர் வித்யா மந்திரில் இடமும் கிடைத்தது. இப்போது குரு டி.என். கிருஷ்ணன் அமெரிக்காவில் இருப்பதால், பி.எஸ். நாராயணசாமியிடம் கற்றுக் கொண்டு வருகிறார். டி.என். கிருஷ்ணன் வயலினில் வாசித்துக் காண்பித்துச் சொல்லிக் கொடுப்பார். ஆனால் பி.எஸ். நாராயணசாமி பாடியே சொல்லிக் கொடுப்பார். பிறகு அதை வயலினில் வாசிக்க வேண்டும். "இதையேதான் தொழிலாகவும் எடுத்துக் கொள்ளப் போகிறேன். நிறைய வாய்ப்புகள் இருக்கின்றன!" என்கிறார் சாருமதி, மிகுந்த தன்னம்பிக்கையுடன்.

"முதல் குரு அப்பா கே. நாகராஜராவ்தான்!" என்கிறார் 'கடம்' என். குருபிரசாத். பிறகு விநாயகராமிடம் 91ல் சேர்ந்து, சீராகக் கற்றுக் கொண்டார். பிறகு 'கடம்' சுரேஷிடம் பயிற்சி. இத்தோடு முடியவில்லை. இப்போது மிருதங்க வித்வான் மதுரை டி. சீனிவாசனிடம், நுணுக்கமான உத்திகளை ஸ்பெஷலாகக் கற்றுக் கொண்டு வருகிறார். '97ல் முதல் கச்சேரி. கே.வி.என், டி.என். கிருஷ்ணன், கதிரி போன்ற சீனியர்களுக்கு வாசித்த சந்தோஷமான கச்சேரிகள், குருபிரசாத்துக்கு மறக்க முடியாதவை. "ஏன் கடம்?" என்ற கேள்விக்கு, "சின்ன வயதிலிருந்தே இந்த வாத்தியத்தில்தான் எனக்கு அதிக விருப்பம்!" என்கிறார் குருபிரசாத். படிப்பையும் விட்டு விடாமல், கரஸ்பாண்டென்ஸில் பி.ஏ. படித்து வருகிறார்! தனி ஆவர்த்தனம் வாசிக்கையில் ரசிகர்களில் ஒரு பகுதி வெளியே போவது இவருக்கு வருத்தம் தருகிறது. "சில பெரியவர்கள் வாசிக்கும்போது மட்டும்தான் போவதில்லை. எங்களைப் போன்றவர்கள் இவர்களிடமிருந்து கற்றுக் கொண்டு, நிறைய உழைக்க வேண்டும்" என்கிறார்.

சுகுணா புருஷோத்தமனின் மாணவி சரண்யா, ராமச்சந்திரா மருத்துவக் கல்லூரியில் பாரா-மெடிகல் கோர்ஸ் மூன்றாம் ஆண்டு படித்து வருகிறார். லாங்குவேஜ் அன்ட் ஹியரிங் சயன்ஸஸ் என்ற நாலாண்டுப் பட்டப் படிப்பு. பேச்சுத் தடுமாற்றம், மனவளர்ச்சி குன்றியவர்களின் பேச்சுக் குறைவு போன்ற பிரச்னைகளை மருத்துவரீதியாகக் குணமாக்கும் துறை. ஆரம்பத்தில் டி.எம். பிரபாவதியிடம் அடிப்படையான பாடங்கள் கற்றாராம். மியூசிக் அகடமியின் 'ஸ்பிரிட் அஃப் யூத்'. பாரத் கலாசாரின் 'யுவ உத்சவ்' எல்லாவற்றிலும் சிறப்பாகப் பாடியிருக்கிறார் சரண்யா. 'பாரதி' சேனலில் இரண்டு மணி நேரக் கச்சேரி செய்தபோது, நிறையப் பேர் பாராட்டியிருக்கிறார்கள். "கல்லூரியில் எப்படி? கர்நாடக இசை என்றால் காதைப் பொத்திக் கொள்ளுவார்களா?" "நோ. நிறைய என்கரேஜ் செய்வார்கள். கல்லூரி நிகழ்ச்சிகளிலேயே நிறையத் தடவை பாடியிருக்கிறேன்!" அக்டோபரில் நடந்த ஒரு மாநாட்டில் வாய்ஸ்



அனாலிஸிஸ் தலைப்பில், கர்நாடக இசைக் கலைஞர்கள் பங்கு பற்றிப் பேசியிருக்கிறார் சரண்யா. உண்மையில் அது ஓர் ஆராய்ச்சிக் கட்டுரை. "பாட்டா, மருத்துவமா - எதைத் தேர்ந்தெடுப்பீர்கள்?" என்ற கேள்விக்கு, "இப்போ இரண்டையுமே பாலன்ஸ் பண்ணிட்டிருக்கேன்... ஆனா இன்னும் ஏதும் முடிவு பண்ணவில்லை!" என்கிறார்.

''உங்க கட்சியில நாற்பத்தைந்து பேருக்குத் துணைத் தலைவர் பதவி, எண்பத்தைந்து பேருக்குச் செயலாளர் பதவி, நூற்று இருபது பேருக்கு துணைச் செயலாளர் பதவி கொடுத்தாச்சே, இன்னும் என்ன கவலை?''

''கட்சியிலே மெம்பரே இருநூறு பேர்தான். இன்னும் ஐம்பது பேரை புதுசா சேர்க்கணுமே!''

— கு. அருணாசலம்



பாலமுரளிகிருஷ்ணா என்று பிரபல இசைக் கலைஞரின் பெயரை வைத்துக் கொண்டு விட்டு, பாட்டு தெரியாவிட்டால் எப்படி? பதினேழு வயதான இளம் பாலமுரளிகிருஷ்ணா முதலில் வி. சுந்தரேசனிடம் கற்றுக் கொள்ள ஆரம்பித்து, இப்போது பி.எஸ். நாராயணசாமியிடம் சுமார் ஒன்பது வருடங்களாகப் பயிலுகிறார். ஒன்பது வயதிலேயே, விநாயகர் கோயில் ஒன்றில் சதுர்த்தியன்று பாடி, பிள்ளையார் சுழி போட்டாராம். தாம்பரம் கிறிஸ்துவக் கல்லூரியில் பி.காம். முதல் ஆண்டு படிக்கிறார் பாலமுரளி. இடையில், பி.எஸ். நாராயணசாமியிடம் சேருவதற்கு முன்னால், ஆறு மாத காலம் நெய்வேலி சந்தானகோபாலனிடம் கற்றுக் கொண்டாராம். அவர் படுபிஸியாகி விடவே, நாராயணசாமியிடம் வந்து விட்டார். தகப்பனார் ஆர். மீனாட்சிசுந்தரம் சங்கீத ஆசிரியர். "என் ஆசைக்காக மிருதங்கம் கற்றுக் கொள்ளுகிறேன். முதலில் பாஷ்யம் அய்யங்கார் என்பவரிடம் ஆரம்பித்து, தற்போது காரைக்குடி மணி அவர்களிடம் கற்கிறேன்" என்கிறார் பாலமுரளி கிருஷ்ணா. (அப்பாவைக் கேட்காமல் எனிதில் எந்தக் கேள்விக்கும் பதில் சொல்லி விடுவதில்லை!) "எதைத் தொழிலாக எடுத்துக் கொள்ளுவீர்கள்- பாட்டா, ஆபீஸ் வேலையா?" என்ற கேள்விக்கு உறுதியான பதில் சொல்லத் தயங்கினார். அப்பாவிடம் கேட்டு அப்புறம் முடிவு செய்வார் போலும்!

வைகல் ஞானஸ்கந்தனின் மாணவர், சிக்கில் குருசரண். இருந்தாலும் அவ்வப்போது பாட்டியார் சிக்கில் குஞ்சுமணியிடமும் பாடம் கேட்பதுண்டு. பதினோரு வயதில் இசை கற்றுக் கொள்ள ஆரம்பித்தார் குருசரண். அம்மா கர்நாடக இசைக் கல்லூரியில் புல்லாங்குழல் விரிவுரையாளர். அப்பா மருந்துகள் விற்பனைத் துறையில் இருந்தாலும், மேடை நாடகங்களில் நிறைய நடித்தவர். 'நீங்களும் ஏன் புல்லாங்குழல் கற்கவில்லை?" என்ற கேள்வி எழுப்பியபோது, "நான் சின்ன வயதில் பாடக் கேட்டுவிட்டு, 'குரல் நன்றாக இருக்கிறது. வாய்ப்பாட்டே கற்றுக் கொள்' என்று வீட்டில் சொல்லி விட்டார்கள்!" என்றார். சென்னை விவேகானந்தா கல்லூரியில் பி.காம். பட்டம் பெற்ற பிறகு, மாஸ்டர்ஸ் இன் ஃபைனான்ஷியல் மானேஜ்மென்ட் செய்து வருகிறார். பாண்டிச்சேரி பல்கலைக்கழகம் நடத்தும் இந்த வகுப்புகளை, சென்னை லயோலா கல்லூரியிலேயே நடத்துகிறார்களாம். "இப்போதைக்கு கச்சேரிகளுக்கு வாய்ப்புகள் வருகின்றன. படிப்பையும் தொடர்ந்து கொண்டிருக்கிறேன். வேலை கிடைத்தால் இரண்டையும் தொடர்ந்து செய்ய முடியும் என்ற நம்பிக்கை இருக்கிறது" என்கிறார் சிக்கில் குருசரண்.

— சாருகேசி

படங்கள் : வெங்கேடஷ்

வட்ட மேஜை

மார்கழிப் பனி சுகம்!





✉ ஏழை விவசாயி வீட்டில் விளக்கெரிய வைத்த 'கல்கி'க்கு நன்றி. வள்ளியப்பன், தமிழகத்தின் விடிவெள்ளியப்பன்!
சீனிவாசபுரம், மா.கபிலன்

✉ 'மறுக்கிறார் வைகோ' என ஓர் ஆச்சர்ய குறி. 'காதில் விழுந்தது' என்று போடுகிறீர்கள். காதில் விழுந்ததை ஊர்ஜிதம் செய்த பின் போடலாம் அல்லவா!
சென்னை, ரா.சோமநாதன்

✉ தம் ஆட்சியைத் தக்க வைத்துக் கொள்வதற்காக வி.எச்.பி., ஆர்.எஸ்.எஸ். போன்ற அமைப்புகளுக்குக் 'கொம்பு சீவி விடும்' பா.ஜ.க.வுக்கு, சங் பரிவாரின் தொடர்பு பற்றிய அம்பலம் ஆட்டத்தைத்தான் தரப் போகிறது. 'குளிர்விட்டு' நிற்கும் மதவாத அமைப்புகளுக்கு, இந்த 'குளிர்கால' கூட்டத் தொடரிலேயே ஒரு முடிவு வரட்டும்!
திருச்சி, கிரிஜா மணாளன்

✉ 24ந் தேதி ஜம்மு - ரகுநாதர் கோயிலில் நடந்த வன்முறையால் கடந்த வாரக் கல்கியின் தலையங்கக் கார்ட்டூனின் கருத்து உறுதிப்படுத்தப்பட்டுவிட்டது. யாசின் மாலிக்கை விடுவித்ததின் பயனை முஃப்தி மகம்மது சயீத் அனுபவித்து வருகிறார். கார்ட்டூனிஸ்ட்டை எவ்வளவு பாராட்டினாலும் தகும்.
சென்னை, மான்விழி

✉ 'சீஸன் வரும் பின்னே... சிறப்பிதழ் வரும் முன்னே' என வந்திருந்த இசை இதழ் 'அட்வான்ஸ்' அட்டகாசம்!
பொன்மலை, ஆர்.பிரகாஷ்

✉ டிசம்பர் மாதம் வந்துவிட்டாலே கல்கியைப் படிப்பது மார்கழிப் பனியைப் போல சுகமானது.
மொரட்டுப்பாளையம், இரா.வி. சௌந்தர்யா

✉ 'சாகஸ சுதாமூர்த்தி' என்னும் உங்கள் சர்டிபிகேட் கனகச்சிதம்!
சென்னை, கே.என்.பாலகிருஷ்ணன்

✉ காஞ்சி சுவாமிகளின் பேட்டியும் படித்தேன், சத்தியவேல் முருகனார் கடிதமும் கண்டேன். ஆதீனங்கள் கூடி எடுத்த முடிவிலும் குறையில்லை. சுவாமிகளின் பேட்டியும் பிரமாதம். ஆதீனங்கள் கூடி எடுத்த தீர்மானங்களில், திருமுறை ஓதி மட்டுமே அனைத்துக் கோயில்களிலும் கும்பாபிஷேகம் செய்யலாம் என்று முடிவு செய்யப்படவில்லை. எனவே ஆகமங்களும், திருமுறையும் இரு கண்கள் போன்றதே யாரும், யாரையும் குறை கூறவோ, குறைத்து மதிப்பிடவோ தேவையேயில்லை. மொழி தெரியாத சாமி எழுந்து ஓடட்டும், என்று அரசியல்வாதிகள் வேண்டுமானால் பேசட்டும். உண்மையான ஆத்திகர்களுக்குத் தேவையற்றது சர்ச்சை.
நீலங்கரை, சிவ.அருள்

✉ தலையங்கம் ஒருதலைபட்சமானது. பி.ஜே.பி., ஆர்.எஸ்.எஸ். மற்றும் வி.எச்.பி.மீது பத்திரிகைகள் வெறுப்புப் பிரசாரம் நடத்திக் கொண்டிருக்கின்றன. ஜாதிக் கட்சிகள், தீவிரவாத இயக்கங்கள் எல்லாவற்றையும் அணைத்துக் கொள்ளும் பத்திரிகைகள், ஹிந்து இயக்கங்களை மட்டும் சாடுவது நியாயமில்லை.
சென்னை, டி.ஜி.ராமசந்திரராவ்

✉ கல்கியின் நல்ல பெயரையும், நம்பகத் தன்மையையும், உங்கள் தலையங்கத்தினால் குழி தோண்டிப் புதைத்து விட்டீர்கள். உங்களுக்காக அனுதாபப்படுகிறேன்.
செய்யாறு, மாலதி

• மாணவிகளுடன்...



பரதநாட்டிய சிகிச்சை!

தொட்டதற்கெல்லாம் முரண்டு பிடிக்கிற மாணவி ஒருத்தியை, மனநல மருத்துவர் ஒருவர், பரத நாட்டியம் கற்பிக்கிற பெண்மணியிடம் அனுப்பி வைத்தார். அந்த மாணவிக்குத் தோழிகளே கிடையாது. நாட்டியம் நன்றாகக் கற்றுக் கொண்டாள் அந்த மாணவி. 'நீதான் நன்றாக ஆடுகிறாயே, இவர்களுக்கும் நீயே சொல்லிக் கொடேன்!' என்று அவளிடம் மற்ற சில மாணவிகளையும் விட்டு விட்டுப் பார்த்துக் கொண்டார் நடன ஆசிரியை. சக மாணவிகள் எல்லோரும் இப்போது அவளுக்கு நெருங்கிய தோழிகள்!



• சுசித்ரா

“உடல் சார்ந்த உபாதைகளும் மனம் சார்ந்த நோய்களும் குணமாகின்றன.”

ஐம்பது வயதில் விஆர்எஸ் வாங்கிக் கொண்ட வங்கி ஊழியர், நேரம் போக என்ன செய்வது என்று குழம்பினார். கைக்கு வந்த பணம் கடைசி வரை வருமா என்று பயந்தார். மன உளைச்சல் ஆரம்பித்தது. வீட்டில் மனைவியிடம் சதா எரிந்து விழுந்தார். குடும்ப அமைதி குலைந்தது. அந்த நபரை ஒரு டாக்டர், மேற்படி நடனப் பெண்மணியிடம் அனுப்பி வைத்தார். அந்த நபரும் அவர் மனைவியும் வந்து, பரதநாட்டியம் கற்பிக்கும் பெண்மணியின் பங்களாவில் உள்ள நாட்டியக் கூடத்தையடுத்த புல்வெளியில், தங்கள் விருப்பப்படி மனம் திறந்து நடனம் ஆடவும், ஓய்வு எடுக்கவும், பயிற்சிகள் செய்யவும் வசதி செய்து கொடுத்தார் நடனப் பெண்மணி. அவருடைய சுபாவத்தில் தெரிந்த எரிச்சல் குறைந்தது. அவரிடம் ஓவியம் வரையும் திறமை இருந்தது தெரிய வந்ததும், திரையப் படங்கள் வரையச் சொன்னார் நடன குரு. பல மாணவ - மாணவிகளுக்கும் அவரிடம் ஓவியம் கற்கும் ஆசை உண்டாக, சொல்லிக் கொடுக்க ஆரம்பித்தார். நேரம் போவது தெரியவில்லை; வருமானத்துக்கும் குறைவில்லை. அவருடைய வாழ்க்கை ஆனந்த





''காலையில் கபாலி வீட்டுக்கு மாமூல் வாங்கப் போனது தப்பாப் போச்சு...''

''என்னாச்சு சார்...?''

''மாமூலைக் கொடுத்துட்டு, அவன் பெண்ணை கான்வெண்ட் ஸ்கூல் வரை ஜீப்பில் கொண்டுபோய் விட்டுட்டுப் போகச் சொல்றான்!''

— அருள்மூர்த்தி

மாக, சுவாரசியமானதாக மாறி விட்டது.

காலைச் சரியாக ஊன்றி வைத்து நடக்க சிரமப்பட்டாள் அந்த எட்டு வயதுப் பெண். ஓர் ஆர்த்தோபீடிக் மருத்துவர், அந்தப் பெண்ணை நடன ஆசிரியையிடம் அனுப்பி, அவளுடைய கால்களுக்கு நடனம் மூலம் வலுவும் பயிற்சியும் அளிக்க முடியுமா என்று முயன்று பார்க்கக் கேட்டுக் கொண்டார். நடன ஆசிரியையும் அலாரிப்பு, ஜதிஸ்வரம் என்ற பழக்கமான பாடங்களை ஆரம்பித்தார். அந்தப் பெண் இப்போது நன்றாக ஊன்றி நடக்கிறாள் என்பது மட்டுமல்ல, அவளுடைய கால்கள் வலுவடைந்து; அவளுக்கிருந்த தாழ்வு மனப்பான்மையும் மறைந்துவிட்டது. நன்றாக நடனமும் கற்று வருகிறாள்!

பூனாவில் 'நிருத்ய ப்ரேர்ணா' என்ற நடனப் பள்ளியை நடத்தி வரும் சுசித்ரா தாத்தேதான் இந்தக் கதைகளைச் சொன்னவர்.

"பரதநாட்டியத்தால் உடல் சார்ந்த உபாதைகளும், மனம் சார்ந்த நோய்களும் குணமாகின்றன'' என்று சர்வ நிச்சயமாகச் சொல்கிறார்.

மும்பையிலுள்ள கிருஷ்ணா மணியிடம் பரதநாட்டியம் பயின்று, ரூபரல் கல்லூரியில் சைக்காலஜி பட்டம் பெற்று, டாட்டா இன்ஸ்டிட்யூட் அஃப் சோஷியல் சயன்ஸில் எம்.ஏ பட்டமும் பெற்றவர் சுசித்ரா. எனவே நடன ஆசிரியை மட்டுமல்ல, மாணவ - மாணவிகளின் பிரச்னைகள், குடும்பப் பிரச்னைகள் எல்லாவற்றையும் கவுன்ஸலிங் முறையில் அழகாகத் தீர்த்து வைக்கிறார். அறுபதுக்கு மேற்பட்ட மாணவிகள் - எல்லாம் மராத்தியர்கள் - இவரிடம் பரத நாட்டியம் பயிலுகிறார்கள். டாடா இன்ஸ்டிட்யூட்டைச் சேர்ந்த இரண்டு பேராசிரியர்களும் இவருடன் கவுன்ஸலிங் பணியில் பங்கெடுத்துக் கொள்கிறார்கள்.

"நினைவாற்றலை அதிகப்படுத்துகிறது பரதநாட்டியம்'' என்கிறார் சுசித்ரா. அதற்காகவே நிறையக் கல்லூரி மாணவர்களும் - மாணவிகளும் வருகிறார்களாம். "ஒவ்வொரு தனி நபரும் ஒவ்வொரு மாதிரி. எனவே அவரவர் லெவலில் சொல்லிக் கொடுக்கிறேன்'' என்கிறார்.

நிறைய மராத்தி - இந்திப் பாடல்களை தமது பரத நாட்டிய நிகழ்ச்சிகளில் வழங்கினாலும், பாரம்பரிய தமிழ் வர்ணங்களையும், பதம் - ஜாவளிகளையும் விட்டு விடுவதில்லை. ''அர்த்தம் புரிய வேண்டாமா? உங்களுக்குத் தமிழ் எந்த அளவுக்குத் தெரியும்?'' என்று கேட்டோம். "என் குழுவில் பாடும் மீனாட்சி சுப்பிரமணியம், மிருதங்கக் கலைஞர் பி.ஆர்.சந்திரன் இருவரும் தமிழர்கள். அவர்கள் அர்த்தத்தை எடுத்துச் சொல்வார்கள்'' என்கிறார்.

தமது பரத நாட்டிய நிகழ்ச்சிகள் மூலம் பல தொண்டு நிறுவனங்களுக்கும் நிதி உதவி செய்கிறார் சுசித்ரா. மகாபாரதத்திலிருந்து 'குந்தி - ஏக் கதா' என்ற இவருடைய பரத நாட்டியப் படைப்புக்கு, முழுக்க முழுக்க இந்துஸ்தானி இசைதான். ஆனால் அவருக்கு எக்கச்சக்கப் புகழைத் தேடிக் கொடுத்து விட்டதோடு, 'அடுத்த நிகழ்ச்சி எப்போது?' என்று நிறைய ரசிகர்களைக் கேட்க வைத்திருக்கிறதாம்.

— சித்தார்த்



யாரோவொரு மனசறியா
முரடனுக்கு மணமாகி
கக்கத்திலொன்றும்
கர்ப்பத்திலொன்றுமாய்
சுமந்து போகிற
இப்போதும் உன் மீது
எனக்கிருக்கிறது
காதல்.

காதலித்தவளின் மீதுள்ள காதல் மட்டுமல்ல, கல்யாணம் முடிந்த காதலியிடமும் காதல் முடிவடைவதில்லை. அவள் பிறரைத் திருமணம் முடித்தாலும் இவன் கொண்ட காதல் இற்றுவிடாது. தொட்டுத் தொடராமல் பற்றிப் படர்ந்த பாசக் கயிறு அது. கள்ளக்காதல் என்று தினசரிகளில் வருகிற செய்திகள் வியப்பானவை. காதலில் எது கள்ளம்? காதலே கள்ளத்தின் இன்னொரு வடிவம் தானே. இதிலென்ன கள்ளக் காதல்? காதல்; மரபான குடும்ப உறவுகளை மீறவல்லது. குடும்ப அமைப்புகள் சிதைவுறாத தேசத்தில் காதல் கற்பொழுக்கத்தோடு சம்பந்தப்படுத்திப் பார்க்கப்படுகிறது. காதல் குற்றத்தைப் போல தண்டிக்கப்படுகிறது. காமத்தைக் கள்ளமென்று சொல்லலாம். அதாவது, கள்ள உறவு கொண்டவர்கள் என்று அவர்களைக் கடிந்து கொள்ளலாமே தவிர கள்ளக்காதலென்று பிரஸ்தாபிப்பது விநோதமானது; வேடிக்கையானது.

'நெருப்புக்குச் சொந்த வடிவம் என்பதில்லை, ஆனால், விறகுக் கட்டையின் வடிவத்தை அது எடுத்துக் கொள்கிறது. அதே விதத்தில் வடிவமற்ற கடவுள், பக்தர்கள் பொருட்டுப் பல வடிவங்களையெடுத்துக் கொள்கிறார்' – இது பரமஹம்ஸர் அருளியது. எப்போதெல்லாம் நெருப்பைப் பார்க்கிறமோ, அப்போதெல்லாம் இறைவனின் பேராற்றல் இந்த வரிகளால் வடிவம்பெற்றுத் திகழும்.

காதல் ஓசை 7

காதலும் கடவுளைப் போல வடிவமற்றது. கடவுளைப் போல அல்லது அதற்கு மேலான ஆற்றலை கொண்டிருப்பது. காதலின் சக்தி காதலிப்பவனின் இதய சுத்தியைப் பொறுத்தது. கடவுளின் சக்தியும் பக்தனின் நம்பிக்கையை நிகர்த்தது. வடிவம் வேண்டுமா? வடிவம் இல்லாமல் ஒன்றை உணர முடியும். உணர்த்த முடியாது. உள்ளத்தில் காதல் மலர்ந்துவிட்டால், பார்க்கும் இடந்தோறும் அதே வடிவம் பரவி விடுகிறது.

பாட்டியின் மடியில் அமர்ந்து கொண்டு பேய்க் கதைகள் கேட்ட அனுபவம் எமக்கு முந்தைய தலை முறைக்கு நிறைய உண்டு. இன்றைைய தலை முறைக்கு தொலைக்காட்சியின் பேருதவியால் மந்திரவாசல்கள். பேய்கள் இருந்தது போலவே பாட்டித் திணறித் திணறி சொல்லிக் கேட்டதற்குப் பின்னால், நள்ளிரவு தோறும் பேய்களின் நடமாட்டம் மனதில் உலவும். பேய்களின் சிரிப்புச் சத்தம், வளையல் சத்தம், கொலுசுச் சத்தம். விட்டலாச்சாரியாரின் கற்பனையை





விட நமக்கு அதிகம். காரணம், கதை கேட்டு வளர்ந்த மரபு நம்முடையது. இன்று கதைகளில்லை. பேய்களின் வடிவில் தொலைக்காட்சிகள் வீட்டிலிருக்கின்றன. இந்தப் பேய்கள் ஏற்படுத்தும் பதற்றத்தை ஒத்தது காதலின் பதற்றம் என்கிறது நளவெண்பா. ஆழ்ந்த அன்போடு ஒன்றை உள்வாங்கிக் கொண்டால் பயம் தொலையும். பிசாசுகளை மறக்க வேண்டுமானால் இதயத்தில் பிரியம் வேண்டும், போல.

எழுந்திருக்கும் ஏமாந்து பூமாந் தவிசில்
விழுந்திருக்கும் தன்னுடம்பை மீளச் _ செழுந்தளரத்
தூணோடு சேர்க்கும் துணையேதும் இல்லாதே
நாணோடு நின்றழியும் நைந்து.

நளன் மீது தமயந்தி வைத்திருந்த காதல். யாரும் யார் மீதும் வைக்க முடியாத அளவுக்கு அதீதமானது. தமயந்தி ஒரு கதா நாயகியை விட அழகானவளாய் இருந்திருக்கக்கூடும். நளன், அவள் பார்வையில் அவளை விட அழகு மிகுந்த ஜீவனாய் இருந்திருக்கக் கூடும். இறைவன் தூணிலும் இருப்பான், துரும்பிலும் இருப்பான் என்பார்கள். காதல் மயக்கம் வந்து விட்டால், தூணும் துரும்பும் காதலனின் முகமாகவே தோன்றும் காதலிகளுக்கு. ஆயிரம் பேர் கூடிய விழாவில் தனக் கானவனைத் தேடி விடுகிற சாமர்த்தியம் காதல் விழிகளுக்குண்டு.

எங்கோ போய்விட்டான் நளன். தமயந்தி படுக்கையில் கிடந்து பதறிக் கொண்டிருக்கிறாள். உள்ளத்தில் உறங்காத நளனின் ஞாபகச் சுவடுகள் அறையிலிருக்கும் தூண்கள் முழுவதும் பதியக் காண்கிறாள். 'ஏய் நீ இங்கேதான் இருக்கிறாயா, எனக் கட்டிக் கொள்கிறாள். கட்டிக் கொண்ட தேகத்தில் தூணின் குளிர்ச்சி திகைப்புற வைக்கிறது. 'அட, ச்ச.' என சலித்துக் கொண்டு மறுபடியும் படுக்கையில் சுருண்டு விழுகிறாள். மறுபடி இன்னொரு தூண் மறைவிலிருந்து எட்டிப் பார்க்கிறாள். எட்டிப் பார்க்க... கட்டிப் பிடிக்க.. கட்டில் சரிய.. எட்டிப்பார்க்க... நளனுக்கு தமயந்தி. நம்மூர் தமயந்திகளுக்கு எத்தனை இரவுகள் இப்படி கழிகின்றனவோ? மெய்க்காதல் கொண்டால் நினைவுகள் முழுவதும் அதிலேயே மொய்த்துக் கிடக்கும் என்பதற்கான அரிய பாடல் இது. இதே, மனநிலையில் நளனும் தமயந்தியை நினைத்து ஏங்கித் தளும்புகிறான்.

வழிமேல் விழிவைத்து வாணுதலாள் நாம
மொழிமேற் செவிவைத்து மோகச் _ சுழிமேல் தன்
நெஞ்சோட வைத்துயர்வான் கண்டான் நெடுவானில்
மஞ்சோட அன்னம் வர

இந்தப் பிரபஞ்சத்தில் அவன் கேட்கும் ஒற்றைச் சொல்

தமயந்தி. அதைத் தவிர அவன் கேட்க விரும்பும் சொல் எதுவுமில்லை. இந்த நிலத்தில் வீசும் காற்று தமயந்தி. அந்தக் காற்றைத் தவிர வேறு எதுவும் அவனைத் தீண்டுவதில்லை. இந்த ஓடையில் பாயும் நீர் தமயந்தி. அந்த நீரைத் தவிர வேறு எதனாலும் அவன் தாகத்தைத் தீர்க்க முடியாது.

தமயந்தியிடம் பதில் வாங்கி வரப் போன அன்னம் வரவில்லை. வரும்வரை காத்திருக்கும் தவிப்புடன் வானத்தைப் பார்க்கிறான். மேகம் மிதக்கிறது. தமயந்தியின் விழிகளைப் போல இதமாக. இடது மூலையிலிருந்து வலது மூலைக்குச் செல்லும் வரை ரசித்தவன், மேகக் கூட்டத்தை அன்னமென்று நம்பி ஏமாந்து போகிறான். தூணைப் பார்த்து தமயந்தியும், வானைப் பார்த்து நளனும் ஏமாந்து கொண்டாலும், ஒருவரை ஒருவர் நினைத்துக் கொண்டதை புகழேந்திய புலவர் புரிய வைத்து விடுகிறார்.

இந்தச் சொற்கள் காதலை எழுதும் போது மட்டும் கவிஞர்களுக்கு எப்படி கச்சிதமாய் கை வருகிறது. வேறு உணர்வுகளை எழுதுவதற்கும் காதலை எழுதுவதற்குமுள்ள வித்யாசம் என்னவெனில், காதல் உள்ளிருந்து வெளி வருகிறது. மற்றவை வெளியிலிருந்து உட் செல்கிறது. உள் இருந்து வருவது எப்போதுமே சுத்தமாகத்தான் வரும். வீட்டிலிருந்து கிளம்புகிறவனைப் போல.

உன்னைப் பாடுவதற்காய்
தேடியலைந்து
நான் தேர்ந்தெடுத்த சொற்கள்
கை நிறைய கூழாங்கற்கள்
தனிமை இருட்டில்
உன் விழிகளின் வெளிச்சத்தில்
நீ சிந்திய மௌனங்கள் எல்லாம்
என் நெஞ்சில்
பனி தோய்ந்த பாடல்கள்
உன்னிடம் நான் கேட்ட கேள்விகள்
பதிலேதும் பெறாவிடினும்
உன்னிடம் கேட்டதினாலேயே
அவை பதில்களாயின.

உன்னை நினைக்கும்போது இரவுகள் பகல்களாகின்றன. தமயந்திக்கு, தூண்கள் நளனின் முகமாகத் தோன்றின. நளனுக்கு மேகக் கூட்டம் அன்னமாகத் தெரிந்தது. கவிஞர் இந்திரனுக்கோ கேள்விகள் பதில்களாகின்றன. உன்னிடம் கேட்டதினாலேயே அவை பதில்களாயின என்பது விசேஷம். நீ மறுப்பதினாலேயே அவை ஏற்கப்படுகின்றன எனவும் பொருள் கொள்ளலாமில்லையா? நீ சிந்திய மௌனங்கள் என் நெஞ்சின் பனி தோய்ந்த பாடல்கள். பனி தோய்ந்த – பனி பூத்த அல்ல; தோய்ந்த காதலில் தோய்ந்தவனின் கண்கள் நெருப்பாய் எரியும். காதலில் தோய்ந்தவளின் கண்கள் பனியாய் உறையும்.

அடர்ந்த கானகத்தில் விழுகிற மழைத்துளி எங்கு விழுகிறதோ, அங்கிருந்து ஒரு மரம் அல்லது ஒரு மரத்துக்கான பருக்கையை அது வழங்கியிருக்கிறது. ஒரு துளி தானே, என மரமோ நிலமோ அதை வெறுப்பதில்லை. அதைப் போலத்தான் ஒவ்வொரு துளியிலும் ஒருவனின் அழுகை, ஒருவனின் சந்தோஷம், ஒருவனின் தாலாட்டு, ஒருவனின் காதல் – இலக்கியத்தில் குறிக்கப்பட்டிருக்கின்றன. இந்தக் குறிப்புகளால், இந்தக் காதல் சுவையால் யாது பயனென்று சமூகவியலாளர்கள் பலர் கேட்பர். சமூகத்தைக் காதலோடு பார்த்த பலருக்கும், காதல்தான் சமூகத்தைக் கற்றுத் தந்திருக்கிறது. மேடைப் பாடல்களில் உள்ள காதல் அடுத்த இதழில்.

(தொடரும்)

"ஒரு வாரம் ஊர் போயிட்டு கண்ட ஓட்டல் சாப்பாடு அலுத்து வருவாரேன்னு நிறைய காய்கறி எல்லாம் அவருக்குப் பிடிச்சதா வாங்கி வெச்சிருக்கேன்..."

"நேரமாச்சே! சமைக்க வேண்டியது தானே?"

"அவர் வந்துதானே சமைக்கணும்?"

– ரமணி ரங்கநாதன்





பெண்கள் எல்லாப்


தாய்க்குலத்தின் ஆதரவைத் திரட்ட, ஆனானப்பட்ட பெத்த, படா கட்சிகளே படாதபாடு பட்டுக் கொண்டிருக்க, அத்தனைப் பெரிய மகளிர் கூட்டத்தை, சர்வ சாதாரணமாகக் கூட்டி விட்டார். மும்பையின் முன்னணி அழகுக் கலைஞர் ஆஸ்கர் பெரேரா.

சென்னை நகரின் மாடலிங் பெண்கள், நாட்டியத் தாரகைகள், அழகுக் கலைஞர்கள், கல்லூரிப் பெண்கள், என அழகுப் பட்டாளமே பெரேரா நடத்திய காஸ்மடாலஜி பட்டறையில் கலந்து கொண்டு சிறப்பித்தது.

''சென்னை நகருக்கா போகிறாய்? மஞ்சள் தேய்த்துக் குளிக்கும் பெண்களிடையே உன் பாச்சா பலிக்காது சாமி'' என்று என் மும்பை நண்பர்கள் தமாஷாக எச்சரித்தார்கள்.

"இன்னமும் மஞ்சள் தேய்த்துக் குளிக்கும் பெண்களா...? அப்படியானால் அங்கேதான் எனக்கு வேலை அதிகம்" என்று சொல்லிவிட்டு வந்தேன். என்னுடைய கணிப்பு தவறவில்லை... சென்னையில் எனக்கு அமோக வரவேற்பு'' என்று மகிழ்ச்சியுடன் பேசினார் மருத்துவ அழகியல் துறையின் முன்னோடி





ஆஸ்கர் பெரேரா.

இன்டர்நேஷனல் ஏஸ்தடிக்ஸ் கோர்ஸ் படித்தவர். காஸ்மோ ருடிகல்ஸ் துறையில்

பெற்ற பல வருட அனுபவம், ஆராய்ச்சியின் பயனாக 'ஷெரில்ஸ் காஸ்மெடிக்ஸ்' என்ற நிறுவனத்தை நடத்தி வருகிறார்.

"ஷெரில்ஸ் காஸ்மெடிக்ஸ்களில் அப்படி என்ன புதுமை?" என்று கேட்டால் உதாரணம் சொல்லி விளக்குகிறார்.

"உங்களுக்குக் குளிர் ஜுரம் என்று வைத்துக் கொள்ளுங்கள். நேராக மருந்துக் கடைக்குப் போய்க் கேட்டால், அங்கே ஏதாவது மருந்து, மாத்திரை கொடுப்பார்கள். அது உங்களுக்குச் சில சமயம் பயன் தரலாம். சில சமயம் குணமாவது போல பாவ்லா காட்டி விட்டு, மீண்டும் வரலாம். இன்னும் சிலருக்குப் பக்க விளைவுகளும் ஏற்படுத்தலாம். இதுவே, நீங்கள் உங்கள் குடும்ப டாக்டரிடம் போனால், அவர் முறையாகப் பரிசோதித்து, நம்பகமான சிகிச்சை தருவார் இல்லையா... அது போலதான் எங்கள் சிகிச்சை முறையும். மற்ற சிகிச்சை முறைகளிலிருந்து முற்றிலும் வேறுபடுகிறது.



"எங்கள் தயாரிப்புகளை, ஃபேன்ஸி ஸ்டோர்களில் வாங்கிவிட முடியாது. சரும நோய் நிபுணர், பியூட்டி தெரபிஸ்ட், பிளாஸ்டிக் சர்ஜன் போன்றவர்களின் பரிந்துரையின் பேரிலேயே தரப்படுகின்றன. ஏனென்றால் ஷெரில்ஸ் காஸ்மெடிக்ஸ் வெறும் அழகு சாதனங்கள் அல்ல; அழகியல் மருந்துப் பொருட்கள். பொத்தாம் பொதுவாக, எல்லாருக்கும் ஒரே அழகுப் பொருள் தருவது ஏமாற்று வேலை" என்கிறார்.

தமிழ்நாட்டுப் பெண்களின் முடி வறண்டு காணப்படுவதற்கும் சருமம் கறுத்து, உலர்ந்து போவதற்கும், இங்குள்ள கரீர் வெயிலே காரணம் என்று குறிப்பிட்ட ஆஸ்கர் பெரேரா, கையோடு சில யோசனைகளைச் சொன்னதும், பெண்கள் சிரத்தையாக 'நோட்ஸ்' எடுத்துக் கொண்டார்கள்.

"'சன் பிளாக்' பூசாமல் வெளியே கிளம்பாதீர்கள். சாயங்கால வேளைதானே... சூரியன் தீய்க்க மாட்டான் என்று நினைக்காதீர்கள். மாலை வேளை விழும் யூ.வி. கதிர்கள் இன்னும் ஆபத்தானவை. குடை, கூலிங் கிளாஸ், தொப்பி பயன்படுத்துங்கள். நிறைய தண்ணீர் குடியுங்கள். தலைக்குக் குளிக்கும்போது, கண்டிஷனரோடு, 'சீரம்' எனப்படும் பதப்படுத்தும் பொருளையும் சேர்த்து அலச வேண்டும். வைட்டமின் ஏ, சி, ஈ நிறைந்த உணவைச் சாப்பிடுங்கள்" என்று சொல்லி, 'வாழ்க அழகுடன்' குறிப்புகள் தந்தார்.

சருமம், மற்றும் முடி பாதுகாப்புக்கு எழுபது விதமான, நம்பகமான சிகிச்சைகள் இருப்பதாகச் சொல்லி ஆஸ்கர் பெரேரா விளக்கியபோது, அதில் எக்கச்சக்க ஆர்வக் குறிகளைத் தோற்றுவித்தவை, என்ஸைம் தெரபியும், ப்ரோட்டீன் ப்ளஸ் ஹேர் ட்ரீட்மெண்ட்டும்தாம்!

என்ஸைம் தெரபி என்பது இறந்து போன சரும செதில்களை நீக்கி, இளமை தரும் சிகிச்சை. முக்கியப் பொருள் கார் அரிசி.

ப்ரோட்டீன் ப்ளஸ் ஹேர் ட்ரீட்மெண்டுக்கான புரதத்தை, பட்டுப் பூச்சிகளின் கூடுகளில் ஒட்டியிருக்கும் ஒருவிதப் பசையிலிருந்து எடுக்கிறார்களாம்!

• அனு

இவர் பின்னே!



வயலின் விழா!

ஏழு எட்டு வயதுச் சிறுவர் சிறுமியர் முதல் முப்பது வயது இளைஞர் வரை நூறு பேர். ஒரு சேர நூறு வயலின்கள் இழைய, வந்தே மாதரம், ரகுபதி ராகவ... சிலிர்க்க வைத்தன. ஆகஸ்ட் பதினைந்து சுதந்தர தினத்தன்று 'பொதிகை'யில் ஒளி பரப்பினார்கள்.

"அனந்த நாராயணன் என்பவர்தான் தயாரிப்பாளர். ஆகஸ்ட் நான்காம் தேதியே பதிவு செய்து விட்டோம்," என்றார் வயலின் கலைஞர் வி.ஏ. ராஜசேகர். அத்தனை பேரும் இவரது சிடர்கள்.

"இரண்டு வருடங்களுக்கு முன் அறுபது மாணவ - மாணவிகளை வைத்து இசை நிகழ்ச்சி நடத்தினேன். போன வருடம் தொண்ணூறு பேர். இந்த வருடம் நூறு பேர். இந்த வருடமே செப்டம்பர் பதினான்காம் தேதி நூற்று இருபது பேர் வயலின் வாசித்தார்கள். டி.வி.யில் அல்ல, மேற்கு மாம்பலம் அயோத்யா மண்டபத்தில்!" என்றார் ராஜசேகர். "ரொம்ப சிரமப்பட்டுப் பண்ணியிருக்கார்" என்று ஹரித்வாரமங்கலம் பழனிவேல் பாராட்டினார். 'கச்சேரில வாசிக்கறது சுலபம். ஆனா இது மாதிரி நிகழ்ச்சியிலே வாசிக்கறது கஷ்டம். ராஜசேகர் நன்றாக நடத்தி விட்டார் என்று பேசினார் ஹரித்வாரமங்கலம்."

"எத்தனை முன்னேற்பாடு, ஒத்திகை?"

"மே மாதம், கீர்த்தனைகள் வாசிக்கிற அளவில் இருக்கிற மாணவர்கள், அவர்கள் பெற்றோர்களுடன் திருவையாறுக்குப் போனேன். சமாதியில் வாசித்தோம். பிறகு சுற்றி இருக்கிற கோயில்களுக்கு எல்லாம் போனோம். டூர் போன மாதிரியும் இருந்தது. வித்தியாசமாகப் பயிற்சி செய்த மாதிரியும் இருந்தது. பிறகு ஜூலை - ஆகஸ்ட் மாதங்களில் நாற்பது நாட்கள் ஒரு ஹாலில் தொடர்ந்து பயிற்சி. அப்புறம் தான் மேடை ஏறினோம்."



சீஸன் சிறப்புப் பக்கம்

"இப்படி நூற்றுக்கணக்கில் மாணவ-மாணவிகள் இருந்தால் எப்படிச் சொல்லிக்கொடுப்பீர்கள்?"

"எல்லோருமே பள்ளிக்கூடம் போகிறவர்கள். ஒரு குழுவுக்குப் பத்து முதல் பதினைந்து பேர்தான். வாரத்தில் இரண்டு வகுப்புகள். ஆனால் தினசரி வகுப்பு நடந்து கொண்டே இருக்கும். மாலை ஐந்து மணி முதல் ஒன்பது மணி வரை பயிற்சிகள் தருவேன்!"

டி.வி.யில் நிகழ்ச்சி முடிந்த அன்று, நாள் முழுக்கத் தொலைபேசியைக் கீழே வைப்பதும் எடுப்பதுமாகவே இருந்தாராம் ராஜசேகர்! அத்தனை தொலைபேசிப் பாராட்டுகள்! நூறு வயலின்களுக்குப் பக்கவாத்தியமாக பி.சிவராமன் மிருதங்கம். என்.சுந்தர் தபேலா; சங்கர் கஞ்சிரா. பாலகுரு மோர்சிங். செப்டம்பர் பதினான்கு நிகழ்ச்சியில் ராதா கிருஷ்ணன் கடம் வாசித்தாராம். எல்லோருக்கும் மெடலும், சான்றிதழும் கொடுத்திருக்கிறார் ராஜசேகர்.

இசைக் குடும்பத்தின் நான்காவது தலைமுறை கலைஞர் ராஜசேகர். இந்த நிகழ்ச்சிக்குப் பிறகு இன்னும் இருபது பேர் இவரிடம் வயலின் கற்றுக் கொள்ளச் சேர்ந்துவிட்டார்கள். ஆக, அடுத்த தடவை நூற்று நாற்பது பேர் பங்கு கொள்வார்கள்!

- நம்பி

“ஹரிஹரி' என்று ஆடுவது தவறா? அதுவும் வழிபாடுதானே?''

கூட்டத்திலிருந்த ஓர் இளம் பெண் கேட்டாள். சங்கரய்யர் உடனே அவள் பக்கம் திரும்பினார்.

“வழிபாட்டில் எவ்வளவு மும்முரமாக இருக்கிறீர்கள் என்பதுதான் இங்கே முக்கியமான கேள்வி. 'ஹரி ஹரி' என்று ஆடினால் போதும் என்று தயவு செய்து நினைக்காதீர்கள்.

''கடவுள் என்பது சீரியஸுக்கும் சீரியஸான விஷயம். இது போதும். அது போதும் என்று சொல்வதெல்லாம் வெறும் பம்மாத்தாகவே முடியும். 'ஹரி ஹரி' என்று கும்மியடித்துவிட்டு, பிறகு பொங்கல் வடை சாப்பிட்டு அரட்டை அடித்திருப்பதால் எந்த மாறுதலும் மனசுக்குள் ஏற்படாது. தனிமையைக் கொடுக்கின்ற, உங்களை உற்றுப் பார்க்கின்ற, அமைதியைக் கொடுக்கின்ற வழிபாடுதான் மிகச் சிறந்தது. 'ஹரிஹரி' என்று ஆரம்பியுங்கள். அதைத் தவறு என்று நான் சொல்லவில்லை. ஒரு புளியமரத்தின் இலைபோல, பல பிறவிகளுக்கு நீங்கள் 'ஹரி ஹரி' என்று சொல்லி பிற்பாடு தான் ஆத்மவிசாரம் அடைய முடியும்.''

“தெளிவாகச் சொல்லுங்கள்... எது... எது கடவுள் வழிபாடு?'' மறுபடியும் அதே பெண் கேட்டாள்.

''மந்திர ஜபங்கள்தான்.

பாலகுமாரன்

வழிபாட்டை மும்முரமாக்கும். மந்திர ஜபங்கள் செய்வதற்கு நாடி சுத்தி என்ற மூச்சுப் பயிற்சியும், அதைத் தொடர்ந்த பிராணாயாமமும், பிராணாயாமத்தைத் தொடர்ந்த யோகப் பயிற்சியும் மிக முக்கியம். ஆறு கடக்கும் வரை ஓடத்தை ஒழுங்காகப் பேண வேண்டும். உனக்குள் கடவுள் நிலை கொள்ளும் வரை, உடம்பைப் பாதுகாத்தல் மிக முக்கியம். யோகப் பயிற்சியால் உடம்பைச் சீராக்கிக் கொண்டு, மூச்சை சீராக்குவதால் மனத்தை, யோசிப்பைச் சீராக்கிக் கொண்டு, யோசிப்பைச் சீராக்குவதால் ஆழ்ந்த ஓர் அமைதியை ஏற்படுத்திக் கொண்டு, அந்த அமைதியில் விளைந்த சுகத்தில், நிம்மதியில், உள்ளிருப்பது யார் என்று கூர்மையாக இடையறாது... இடையறாது கவனிக்கப் பழகிக் கொண்டால், கடவுள் தரிசனம் கிடைத்தாலும் கிடைக்கலாம்.''

''என்ன சொல்கிறீர்கள். இப்படிச் செய்தால் கிடைக்குமென்று நிச்சயமான வழியில்லையா?''

''உங்கள் வீட்டு ஜன்னல் கதவு



களை நன்கு திறந்து வைத்து, வீட்டைச் சுத்தம் செய்து, கதவுகளையும் அகலவிரித்து, காத்திருந்தால் தென்றல் வந்தாலும் வரலாம். தென்றல் வரும்போது வீடு நாறிக் கொண்டிருந்தால், வீடு பூட்டிக் கிடந்தால் என்ன புண்ணியம். அதேபோல கடவுள் வரும்போது, உங்கள் மனம் வெறும் பொங்கல் வடையில், அரட்டை சுத்தில்,

வெறும் வம்புப் பேச்சில் ஆழ்ந்திருந்தால் என்ன புண்ணியம். ஆகவே, உள்ளுக்குள் உள்ள அமைதியைத் தூண்டிவிடக் கூடிய பயிற்சியைப் பொங்கின்ற வழிபாடுதான் மிக முக்கியம்."

30

மனம் உருகுதே...



"கடவுளைக் காணுதல் எளிதில்லை என்று சொல்கிறீர்களா?"

"நான் மட்டும் சொல்லவில்லை. உலகிலுள்ள அத்தனை பேரும் அதைத்தான் சொல்கிறார்கள். எல்லா மகான்களும் இதைத்தான் சொல்லியிருக்கிறார்கள். கடவுளைக் காட்டுங்கள் என்று ஒரு பக்தன் கேட்டபோது, ராமகிருஷ்ண பரமஹம்ஸர் அவனை கங்கைக்கு அழைத்துப் போய் மூழ்கச் சொல்லி, மூன்றாம் முறை அவன் மூழ்குகிறபோது அவன் தலையை அழுத்திப் பிடித்து வெளியே வரவொட்டாமல் செய்தார். அவன் திகைத்துத் திணறி உதறிக் கொண்டு வெளியே வந்து நின்று, என்னை கொல்லப்பார்க்கிறீர்களே என்று கத்தினான். அப்போது ராமகிருஷ்ண பரமஹம்ஸர் மிருதுவாகச் சொன்னார். ஒரு பிடி மூச்சுக்காக எப்படித் தவித்தாய். எத்தனை வேதனைப்பட்டாய். இதுபோல பலமடங்கு தவிப்பு இருந்தால்தான் கடவுளைக் காண முடியும் என்று சொன்னார்."

சங்கரய்யர் பெருமூச்சு விட்டார். தொடர்ந்து பேசினார்.

"நான் என் குருவோடு சண்டை போட்டவன். கேள்வி கேட்டவன். அவரோடு முறைப்பாகப் பேசியவன். ஆனால் என் குரு கருணையின் வடிவம். அது என்னைப் பல்வேறு விதமாக ஆசுவாசப்படுத்தி, அமைதிப்படுத்தி என்னுடைய யோக்கியதைக்கும் மிஞ்சி பல்வேறு விஷயங்களை எனக்குள் புகுத்தியது. என்னை உருமாற்றியது. உள்ளத்தில் புத்துணர்ச்சியை ஏற்படுத்தியது. அம்மாதிரி ஏற்படுத்த எல்லோராலும் இயலாது. மகான்களால் மட்டுமே இயலும். என் குரு ஒரு மகான்."

சங்கரய்யர் கை கூப்பினார். கண் மூடி அமைதியாக உட்கார்ந்திருந்தார்.

கூட்டம் அவரையே பார்த்துக் கொண்டிருந்தது.

"கடவுளை அடைய கடுமையாக உழைக்க வேண்டும் என்று சொல்கிறீர்கள். அவ்வளவுதானே?"

ஒரு பெண் கேட்டாள்.

"ஆமாம். அவ்வளவுதான். இது இடையறாத பணி. மூச்சு இருக்கும்வரை வெகு வேகமாகச் செய்ய வேண்டிய பணி. சற்று கூட ஓய்வில்லாமல் உள்ளுக்குள் இதே சிந்தனையாக இருக்க வேண்டிய விஷயம்.

ஏனெனில் ஒன்பதிலிருந்து ஆறு மணி வரை அலுவலகம். பிறகு வீடு, பிறகு ஏழு மணியிலிருந்து ஒன்பது வரை பஜன் என்றெல்லாம் வெறும் தனுக்குத்தனமாக இருந்தால் போதாது. சத்சங்கம் ஒரு ஆரம்பம். பிறகு நீண்ட நெடுந்தூரம் போக வேண்டும். ராதாகிருஷ்ணன் நீங்கள் போகலாம்.''

சட்டென்று சங்கரய்யர் திரும்பி ராதாகிருஷ்ணனைப் பார்த்து கைகூப்பி விடை கொடுத்தார்.

நீண்ட நெடுந்தூரம் போக வேண்டுமென்று சொன்னதும் நீங்கள் போகலாம் என்று உத்தரவிட்டதும் ராதாகிருஷ்ணனைத் திகைக்க வைத்தன. இந்த இரண்டும் ஒரே சொல் என்று தோன்றியது.

அவர் எழுந்தார். கை கூப்பினார். நீண்ட நெடுஞ்சாண்கிடையாக மனைவியோடு விழுந்து வணங்கினார்.

''எவ்வளவு சீக்கிரம் கிளம்ப முடியுமோ அவ்வளவு சீக்கிரம் கிளம்பறேன்.''

''ஆமாம். எந்தப் பக்கம் போகறமாதிரி உத்தேசம்?''

''தாம்பரம் பக்கம் நன்னாயிருக்குன்னு சொல்லியிருக்கா. அங்க போய் நிலம் பார்க்கலாம்னு நினைச்சுண்டிருக்கேன்.''

''தாம்பரம் பக்கம் பல கிராமங்கள் அருமையா இருக்கு. செழிப்பான பூமி. வயல்கள் நிறைந்த பிரதேசம். நகர்ப்புறத்திற்கு அருகே இருக்கிற ஜனங்கள். பட்டணத்து மோகத்தால நிலத்தை வித்துட்டு சிட்டிக்குள்ள வந்துடறா. இங்க வந்து சின்ன குடிசைக்குள்ள வாழ்க்கையை ஆரம்பிக்கறா. அந்த நிலம், அந்தக் காத்து, அதனுடைய சுகம் அவாளுக்குத் தெரியலை. சம்பாத்தியம் பட்டணத்துலதான் இருக்குன்னு ஒரு தப்பான அபிப்ராயம். நீங்களெல்லாம் அங்க போனா, அங்கிருக்கற ஜனங்களைத் தக்க வைக்கலாம். அதுதான் உங்க இடம்.''

ராதாகிருஷ்ணனும் ரேவதியும் மறுபடியும் கைகூப்பும்போது எழுந்து நின்று சங்கரய்யரும் கை கூப்பினார்.

''சௌக்கியமா இருப்பேன். இடையறாத... இடையறாத மந்திர ஜபம் ரொம்ப முக்கியம். நிறைய மந்திரஜபம் பண்ணுங்கோ. உக்கிரமா பண்ணுங்கோ, திரும்பத் திரும்ப பண்ணுங்கோ ஏதோ ஓர் இடத்துல ஒரு பிடிமானம் ஏற்படும்.

மஹா தந்திரம்!

'கார்த்திக் ஃபைன் ஆர்ட்ஸ்' சார்பில் 'பாதாஞ்சலி' அரங்கேற்றிய 'மஹாதேவம் - மஹாசேனம் பஜே' நாட்டிய நாடகம் நாரதகான சபாவில் கோலாகலமாக நடந்தது. ஆர்.எஸ். மனோகரின் காட்சி அமைப்புகள், பணி



அனிதா குஹா

இது இன்னதுன்னு சொல்லவே முடியாது. அப்பேர்ப்பட்ட ஒரு சுகம். மிகப் பெரிய சந்தோஷம். அளப்பரிய ஒரு அமைதி உள்ளுக்குள்ள ஏற்படும். நான் சொல்ற இந்த வார்த்தையும்கூட சரியாக இல்லை.''

உள்ளே. ஏதோ உடைந்தது. ஏதோ நிறைந்தது.

ராதாகிருஷ்ணனுக்குத் தன் வாழ்க்கை திசை மாறியது மிக நன்றாகத் தெரிந்தது.

புருஷனும் மனைவியும் காலையிலிருந்து மாலைவரை விதம்விதமான இடங்களில் உட்கார்ந்து ஜபம் செய்யத் துவங்கினார்கள். ஒருவருக்கொருவர் அதிகம் பேசாது சங்கரய்யர் என்ன சொல்லிக் கொடுத்தாரோ, அதேவிதமாக பயிற்சி செய்யத் துவங்கினார்கள்.

''ஒரு வருஷம் கொடுத்திருக்காங்கறதுக்கு ஒரு வருஷம் முழுக்க இருக்கணுமா. கொஞ்சம் முன்னாடியே நாம நகர்ந்துட்டா என்ன?''

''நானும் அதுதான் யோசனை பண்றேன்.''

ரேவதியின் கேள்விக்கு ராதாகிருஷ்ணன் பதில் சொன்னார்.

''தாம்பரம் பக்கம் வீடு வாடகைக்கு எடுத்துண்டு போயிடலாமான்னு பார்க்கறேன்.''

''எதுக்கு வாடகைக்கு, வீடு வாங்க வேண்டாமா?''

ஆயிரத்து ஐந்நூறு ரூபாய்க்கு இரண்டு ரூம். ஒரு ஹாலோட நல்ல ஃப்ளாட் வாடகைக்குக் கிடைக்கறது. தாம்பரத்துலே தங்கினால் குழந்தைகளுக்குப் படிப்பு சுலபம். காலேஜ் போகிறவரைக்கும் அங்க

• ரதி - மன்மதன் சிருங்காரம்



சூழ்ந்த கைலாய மலைக்கே அழைத்துச் சென்றன என்றால், ரதி மன்மதன் நடனக் காட்சியின் பின்னணி இசையில் நந்தவனத்துப் பறவைகளின் 'கீச் கீச்' காதல் ஒலி, சிவன் பார்வதி நடனத்தில்கூட ஸ்பெஷல் சங்கு கொம்பு வாத்திய கோஷ்டி என புதுமையான முயற்சிகளைச் செய்து அசத்தி விட்டார் அனிதா குஹா. கிளைமாக்ஸில் மேஜிக் காட்சியையும் விட்டு வைக்க வில்லை. மரமாகி நின்ற சூரனைப் பிளந்து, முருகன் வேலும் மயிலுமாக நின்ற காட்சியில் பி.சி. சர்க்காரைக் கூப்பிட்டிருப்பார்களோ என்னவோ! பார்வையாளர்களைக் கட்டிப் போடும் தந்திரமும் தெரிந்தது.

- ஆதர்ஷ்

சௌகரியமா இருந்துட்டு, அதுக்கப்புறம் இன்னும் தெற்கே நகரலாம். ஆனா, இப்பவே தாம்பரத்துக்கு அந்தப் பக்கம் கொஞ்சம் நிலம் வாங்கிப் போடலாம்."

"ஏன் தாம்பரத்துலேயே வாங்கினா என்ன?"

"நம்மகிட்ட இருக்கற காசுக்கு நிறைய வாங்க முடியாது."

"ஒரு கிரவுண்ட் கிடைக்காதா?"

"கிடைக்கும். இரண்டு கிரவுண்டே கிடைக்கும்."

"எங்க நிலம் வாங்கப் போறேள்?"

"பெருங்களத்தூர்ல..."

"எவ்வளவு வாங்கப் போறேள்?"

"ஆறு கிரவுண்டோ ஏழு கிரவுண்டோ..."

"ப்பா... ஆறு கிரவுண்டா?"

"பின்னால பிரிச்சு வித்துடலாம்."

"சாப்பாட்டுக்கு, குழந்தேள் படிப்புக்கு?"

"அங்கேயே தாம்பரத்துலயே ஏதாவது ஒரு கம்பெனியில வேலை செய்ய வேண்டியதுதான். இல்லை. சாப்பாட்டுக் கடை ஆரம்பிக்க வேண்டியதுதான்."

"அடாடா... அது பண்ணலாம். சின்னதா மெஸ் மாதிரி ஆரம்பிக்கலாம்."

"ஆனால், குழந்தேள் படிக்க முடியாது. அதுங்க ரொம்ப நன்னாப் படிக்கணும். குறிப்பா இந்தப்புள்ள நன்னாப் படிப்பான்னு எனக்குத் தோணறது. படிக்கிற ஒரு சூழ்நிலையை ஏற்படுத்தணும். மெஸ் நடத்தினா அவாள தூக்கு, இறக்கு, பரிமாறு, துடைச்சு வை, அப்படின்னு ஏவுவோம். பசங்க இதுதான் சாக்குன்னு வேலைக்கு வருவா. படிப்பு பாழாய்ப் போயிடும். மெஸ் கூடவே கூடாது."

"அப்போ வேறே என்ன வேலை?"

"மளிகைக் கடை ஆரம்பிக்கலாமா?"

"நமக்கு அதுக்கு சாமர்த்தியம் போறாது."

"உங்களால டியூஷன் சொல்லித் தர முடியுமா?"

"எனக்கு அப்படியொரு எண்ணம் இருந்தது. ஆனால், இன்னிக்குப் படிப்பு வேற, நம்ம படிப்பு வேற. எவ்வளவு தூரம் எனக்கு சரியா டியூஷன் சொல்லித் தர முடியும்னு தெரியலை. பள்ளிக்கூடத்துல இருக்கற வாத்தியாரை விட்டுட்டு நம்மகிட்ட வந்து டியூஷன் படிப்பானான்னும் தெரியலை."

"தம்புச் செட்டித் தெருலேர்ந்து புடைவை வாங்கிண்டு வந்து அதைக் கொண்டு போய் தாம்பரத்துல வித்தா?"

"விக்கலாம். நான் புடைவை மூட்டை தூக்கிண்டு போய் விக்க முடியுமா? எனக்கு அந்த அமைதி வருமா? ரொம்ப இனிமையா பேசணும். என் முகம் கொஞ்சம் முரடு. நான் திரும்பிப் பார்த்தேன்னா பொம்மனாட்டிகள் பயந்து எழுந்து போயிடுவா. அப்படியே வேகமாப் பார்த்து பழக்கமாயிடுத்து. மிருதுவா பார்க்கக் கூட தெரியலைங்கறபோது, பேச எப்படித் தெரியும். புடைவை வியாபாரத்துக்கு நான் லாயக்கில்லை."

(தொடரும்)

கிராமத்துப் பள்ளிக்கூடம்!



- வாயில்
  மாங்காய் பத்தை
  உள்ளங்கையில்
  வேர்க்கடலை
  சட்டைப் பையில்
  அச்சு வெல்லம்

  இறை வணக்கம்
  ஆரம்பம்!

- தேன்மொழி டீச்சர்
  பிள்ளையைத்
  தூங்க வைப்பது
  இன்று யார் முறை?

- ஏழுமலை
  பொறுக்கிய மகிழம் பூ
  செல்வி டீச்சர்
  டிபன் ஃபாக்ஸில்

— பா. தீனதயாளன்

அக்னி சர்மா பக்கம்

நடக்குமென்பார்; நடக்கும்!



மேஷம் : ரஷ்ய அதிபர் புதினின் இந்திய பயணத்தால் முக்கியமான ஒப்பந்தங்கள் கையெழுத்தான மாதிரி, இந்த வாரம் நீங்க மேற்கொள்ற பயணத்தால நல்லது நடக்கப் போகுது. எடுத்த காரியம் திட்டமிட்டபடி நடக்கும். குடும்பத்தில் மங்களகரமான காரியங்கள் நடக்க வாய்ப்பிருக்கு. பெண்களுக்கு இது கொண்டாட்ட வாரம். சுயமா தொழில் பண்றவங்களுக்குச் சந்தோஷமான திருப்பம் வரும். வரவேண்டிய பணம் வந்து பாக்கெட்டை நிரப்பும். இரும்பு, இயந்திரம், கெமிக்கல்ஸ் உலோக வகை ஆகிய இனங்கள்ல தொழில் பண்றவங்களுக்கு ஆதாயம் உண்டு.

ரிஷபம் : காதலிச்ச பொண்ணே நடிகர் ஷாமுக்கு மனைவியான மாதிரி, எதிர்பார்த்திருந்த விஷயத்துல அதிர்ஷ்டம் அடிக்கப் போகுது. பண நடமாட்டத்துக்குப் பஞ்சமில்லை. எதிர்ப்புகள் மறையும். வழக்கு விவகாரங்கள்ல நிவாரணம் உண்டு. அலுவலகத்தில் ஜாலியான சூழ்நிலை நிலவும். வேறு வேலைக்குத் தாவ முயற்சி பண்ணிட்டிருந்தவங்களுக்கு அதுக்கான வாய்ப்பு வரும். நண்பர்கள் உறவினர்கள் வருகைன்னு குடும்பம் கலகலப்பா இருக்கும். சட்டம், காவல், இராணுவம் போன்ற துறைகளைச் சேர்ந்தவங்களுக்கு முன்னேற்றம் உண்டு.

மிதுனம் : நியூஸிலாந்தில் நடந்த மேக்ஸ் கிரிக்கெட் போட்டியில் இருபத்தேழு பந்துகளில் எழுபத்தியிரண்டு ரன் குவித்த சச்சின் மாதிரி நீங்களும் அதிரடியா ஏதாவது பண்ணுவீங்க. புதியவங்க அறிமுகம் கிடைக்கும். அது மூலமா முக்கியமான நன்மைகள் நடக்கப் போகுது. பண வசதி தாராளமா இருக்கும். சிலருக்குப் பதவி உயர்வு, இடமாற்றம் கிடைக்கலாம். குடும்பத்துல அமைதி நிலவும். குல தெய்வ பிரார்த்தனை செய்வீங்க. புது வீடு, சொத்து வாங்க சிலருக்கு வாய்ப்பிருக்கு. பெண்களுக்கு இது அதிர்ஷ்டமான வாரம்.

கடகம் : இந்த வாரம் தெய்வ பலம், தெய்வீக ஈடுபாடு அதிகரிக்கும். பயணங்களில் வெற்றி உண்டு. உத்தியோகத்தில் மேன்மை நிலவும். இதுவரை இருந்து வந்த குழப்பம், கருத்து வேறுபாடு ஆகியவை மறையும். எதிர்ப்புகள் விலகும். கொடுக்கல் வாங்கல் நன்மை தரும். குடும்பத்துல மகிழ்ச்சி நிலவும். குடும்பத்தோடு வெளியூர், புனிதத் தலம் போகும் வாய்ப்பிருக்கு. மாணவர்கள் வெற்றி நடை போடுவாங்க. கலைத் துறையைச் சேர்ந்தவங்களுக்குப் பெயர், புகழ் அதிகரிக்கும்.

சிம்மம் : சிக்கலான காரியங்களைக்கூட திறமையா நிறைவேற்றுவீங்க. எதிர்ப்புகள் விலகும். அலுவலகத்துல மேலதிகாரிகள் பாராட்டுக் கிடைக்கும். இதனால உற்சாகம் கரைபுரளும். எதிர்பார்த்திருந்த பண உதவி இப்ப கிடைக்கும். அரசியல்வாதிகள் மதிப்பு, அந்தஸ்து உயரும். கலைத் துறையைச் சேர்ந்தவங்களுக்குப் புதிய ஒப்பந்தங்கள் கிடைக்கும். குடும்பத்தில் ஒற்றுமை அதிகரிக்கும். இதுவரை இருந்துவந்த குழப்பம், கருத்து வேறுபாடு நீங்கும். பெண்கள், விருந்து உபசாரம், புதிய பொருள் வாங்குதல், ஜாலி ரவுண்ட்டுனு மகிழ்ச்சியா இருப்பாங்க.

கன்னி : இந்த வாரம் மன சுல தன்னம்பிக்கை, துணிச்சல் ஏற்படும். இதுவரை தாமதமாகி

வந்த காரியங்கள் வெற்றியடையும். பண வசதிக்குப் பஞ்சமில்லை. புதியவங்க அறிமுகம் கிடைக்கும். அலுவலகத்தில் சிலருக்குப் பதவி உயர்வு, இடமாற்றம் கிடைக்க வாய்ப்பிருக்கு. அரசியல்வாதிகளுக்குச் செல்வாக்கு, மதிப்பு உயரும். கடன் தொல்லைகள் நீங்கும். கூட்டாகத் தொழில் பண்றவங்களுக்கு லாபம் கொட்டும். இதுவரை தாமதமாகிவந்த சுபகாரிய முயற்சிகள் இப்ப நடக்க வாய்ப்பிருக்கு.

துலாம் : வேலை விஷயமாகச் சிலர் வெளிநாடு போக வாய்ப்பிருக்கு. இதனால ஆதாயம் உண்டு. மனசுல அமைதி நிலவும். கொடுக்கல் வாங்கல்ல அனுகூலம் கிடைக்கும். பார்ட்னர்ஷிப்ல தொழில் பண்றவங்க எச்சரிக்கையா இருங்க. குடும்பஸ்தானத்தைக் குரு பார்க்கறதால திருமண முயற்சி அனுகூலம் தரும். சிலர் வீடு கட்ட, வாங்க வாய்ப்பிருக்கு. பெண்களுக்கு மனத்தில் உற்சாகம் கரைபுரளும். கலைத் துறையைச் சேர்ந்தவங்களுக்குப் பெயர், புகழ் கூடும். மாணவர்கள் உயர் படிப்புக்கு வெளிநாடு போக வாய்ப்பிருக்கு.



துலாம் ராசிக்காரரான காரைக்குடி மணிக்கு பெயர், புகழ் கூடுமாம்!

விருச்சிகம் : இந்த வாரம் எல்லா காரியத்திலும் முன்னேற்றம்தான். மனசுல துணிவு தன்னம்பிக்கை ஏற்படும். இதுவரை இழுத்தடித்துக் கொண்டிருந்த பிரச்னைகள் இப்பொழுது சுமுகமா நடக்கும். அலுவலகத்தில் சில பிரச்னைகள் ஏற்பட்டு விலகலாம். அமைதியா இருங்க. பேச்சில பதற்றம் வேண்டாம். ஏற்றுமதி இறக்குமதி தொழில் பண்றவங்களுக்கு எதிர்பாராத ஆதாயம் வந்து சேரும். குருபலம் நிறைந்திருப்பதால் பொன், பொருள் சேர்க்கை ஏற்படும். புனிதப் பணிகளில் பங்கு கொள்ள சந்தர்ப்பம் வரும்.

தனுசு : இந்த வாரம் பண வசதி தாராளமா இருக்கும். இதனால மனசுல மகிழ்ச்சிக்குப் பஞ்சமிருக்காது. மனசுல அமைதி நிலவும். தன்னம்பிக்கை, துணிச்சல் பிறக்கும். குரு குடும்பஸ்தானத்தைப் பார்ப்பதால் வீட்ல விஷேசம் நிகழ வாய்ப்பிருக்கு. வழக்கு விவகாரங்கள்ல சாதகமான தீர்ப்பு வரலாம். சட்டம், காவல், இராணுவம் போன்ற துறைகளைச் சேர்ந்தவங்களோட பெயர், புகழ் கூடும். ஓவியம், சிற்பம், சினிமா போன்ற கலைத் துறையைச் சேர்ந்தவங்களுக்கு முன்னேற்றம் உண்டு.

மகரம் : இந்த வாரம் முன்னேற்றமான திருப்பம் ஏற்படும். தெய்வ பலம் கூடும். பயணத்தால் வெற்றி உண்டு. அலுவலகத்தில் சிலருக்கு ஊதிய உயர்வு, இடமாற்றம் ஏற்படும். சட்டம், காவல், இராணுவம் போன்றத் துறைகளைச் சேர்ந்தவங்க ஏதாவது சாதனை படைப்பாங்க. இதனால புகழ், பாராட்டுத் தேடி வரும். கொடுக்கல் வாங்கல் நன்மை தரும். திருமணமாகாதவங்களுக்கு அதுக்கான வாய்ப்புத் தேடி வரும். வீட்ல நண்பர்கள் உறவினர்கள் வருகை நிகழும். விருந்து உபச்சாரம்னு கலகலப்பா இருக்கும்.

கும்பம் : இந்த வாரம் எடுத்த காரியங்கள் திட்டமிட்டபடி நடக்கும். தெய்வ கருணை கூடியிருக்கறதால பணம் பல வழிகள்ல வரும். மனசுல இனம்புரியாத குழப்பம், பயம் ஏற்பட்டு விலகும். குடும்பத்துல சுப மங்கள காரியங்கள் நடக்க வாய்ப்பிருக்கு. வீடு, மனை, நிலம் இந்த வகையில் அனுகூலமான திருப்பம் உண்டாகும். நெருங்கிய உறவினர்கள் உதவுவாங்க. கடன் தொல்லைகள் குறையும். மாணவர்களோட உழைப்பு, திறமை வீண் போகாது. சுயமாகத் தொழில் பண்றவங்களுக்கு வளர்ச்சி உண்டு.

மீனம் : குடும்பத்துல ஒற்றுமை, குதூகலம் நிறைந்திருக்கும். வெளிநாடு சென்றிருந்தவங்க இப்போ வருவாங்க. நண்பர்கள் உறவினர்கள் வருகைன்னு வீடு அமர்க்களப்படும். கலைத் துறையைச் சேர்ந்தவங்களுக்குப் புகழ், பாராட்டு உண்டு. அலுவலகத்தில் இதுவரை இருந்து வந்த தடைகள், தாமதம், இப்போ நிவாரணமாகும். கடன் தொல்லை நீங்கி, மகிழ்ச்சி ஏற்படுத்தும். புதிய வேலை முயற்சிகள் நன்மை தரும். எதிர்ப்புகள் விலகும். புதியவங்க அறிமுகத்தால பயன் உண்டு.

அமரர் கல்கி நினைவுச் சிறுகதைப் போட்டியில் பிரசுரத்துக்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட வைட்டமின் சிறுகதை - 15

பிரம்ம ரகசியம்

நான் சொன்னதைக் கேட்டு டாக்டர் கலகலவென்று சிரித்தார்...! அதை அப்படியே மீண்டும் சொல்கிறேன், உங்களுக்கும் சிரிப்பு வருகிறதா பாருங்கள்...

"தலையில் அடிபட்ட சிலருக்கு அம்னீஷியா - அதான் பழைய நினைவுகள் மறந்து போவதும், சிலருக்கு ஈஎஸ்பி... இஎஸ்பி... இனோர் வாயென்ஸ் - நடக்கப் போவதை முன் கூட்டியே அறிந்து கொள்ளும் ஆற்றல் உண்டாவதையும், நான் கேள்விப்பட்டிருக்கேன். ஹாலந்து நாட்டைச் சேர்ந்த பீட்டர் ஹுர்காஸ் என்பவருக்கு மண்டையில் பலத்த அடி பட்டதன் காரணமாக, அடுத்து நடக்கப் போவதை முன் கூட்டியே அறியும் ஆற்றல் கொண்டவராக இருந்தார், என்பதை அவரது சுயசரிதையில் படித்தும் இருக்கிறேன்... அதனால் எனக்கும் அப்படியொரு ஆற்றல்..."


"ஏன் சார்... நீங்களும் டாக்டரைப் போலவே ஏளனமாகச் சிரிக்கிறீர்கள்... சரி... நான் முழு விவரத்தையும் சொல்லி விடுகிறேன்.

"நான்கு நாட்களுக்கு முன்பு, பஸ்ஸில் பயணம் செய்து கொண்டிருந்தேன். எனக்கு முன் சீட்டில், தனது கைக் குழந்தையுடன் ஒரு பெண் அமர்ந்து கொண்டிருந்தாள்... அம்மாவின் தோள்மீது எச்சில் பண்ணியவாறே அந்தக் குழந்தை என்னைப் பார்த்துச் சிரித்தது! குழந்தைகளை எனக்கு மிகவும் பிடிக்கும். பற்களே இல்லாத அந்த சொப்பு வாய்...! பால் வாசனையா.. பவுடர் வாசனையா என்று இனம் பிரிக்க முடியாத அந்தக் குழந்தை வாசனை! அந்த 'களுக்' சிரிப்பு... இத்யாதி.. இத்யாதி... நானும்



அந்தக் குழந்தையைப் பார்த்துச் சிரிக்க... உற்சாகம் பொங்கிய நிலையில் தலையை நிமிர்த்தி, ஏகமாக சத்தமிட்டான் குழந்தை. அந்தப் பெண் சட்டென்று திரும்பி என்னைப் பார்த்தாள். நானும் ஒரு கணம் - ஒரே கணம்தான் அவளை உற்றுப் பார்த்தேன். சட்டென்று என் உள்ளுணர்வு சொல்லிற்று. இன்னும் சிறிது நேரத்தில் இந்த பெண்ணுக்கு ஏதோ விபரீதம் நடக்கப் போகிறது என்று... எனக்கு ஒரே குழப்பம். நாம் ஏன் இப்படி நினைத்தோம்? இது நினைப்பல்ல! உள்ளுணர்வு. மீண்டும் என் மனசு சொல்லியது. நான் இறங்க வேண்டிய பஸ் ஸ்டாப்பில், நான் குழப்பத்துடன் இறங்க, அந்த பெண்ணும் குழந்தையுடன் இறங்கினாள். சிறிது தூரம்தான் நடந்திருப்பேன். 'ஐயோ' என்ற அலறல், திடுக்கிட்டுத் திரும்பிப் பார்க்கிறேன். யாரோ இரண்டு பேர் மோட்டர் பைக்கில் வந்து, வட்டம்

போட்டு, அந்தப் பெண்ணின் கழுத்துச் செயினைக் களவாடி, வந்த வேகத்தில் சென்று மறைந்தனர். செயினைப் பறிகொடுத்த அதிர்ச்சியில் அந்தப் பெண் அலற, குழந்தை அம்மாவைப் பார்த்து 'வீல்' என்று கதற, "அடக் கடவுளே.. என் உள்ளுணர்வு 'விபரீதம்' என்று உணர்த்தியது இதைத்தானா?"



என்று அதிர்ச்சி கலந்த ஆச்சரியத்தில் நான் திகைத்து நின்றேன்...!

அடுத்த நாளும் என் அலுவலகத்தில் இதே போன்றதொரு சம்பவம்!

என் நண்பன் சிவராஜ் என் எதிரே அமர்ந்தான்.

"ஏன் சிவராஜ், என்னவோ போலிருக்கே?" என்றேன்.

"உனக்குத் தெரியாததா? இந்த முறையும் எனக்கு மதுரைக்கு மாற்றல் கிடைக்காவிட்டால்?" சோகத்துடன் சொன்னான்.

"டேய் சிவராஜ், டோண்ட் ஒர்ரி. உனக்கு மாற்றல் நிச்சயம் கிடைக்கும்..." என்னையறியாமலேயே நான் மனத்தில் பட்டதைச் சொல்லியும் விட்டேன்.

"சங்கர்... உன் வாய் வார்த்தை அப்படியே பலிக்கட்டும்..." என் கைகளை ஆதங்கத்துடன் பிடித்துக் கொண்டான்.

அன்று மதியம் இரண்டிருக்கும்.. எங்களது தலைமை அலுவலகத்திலிருந்து சிவராஜின் மாற்றலுக்கான உத்தரவு வந்தே விட்டது.

"சங்கர்... எப்படியடா..? உனக்கு இது முன் கூட்டியே தெரியுமா...?" சிவராஜ் கேட்டான்.

'முன் கூட்டித் தெரியாது. முன்னால் நடக்கப் போவதை முன் கூட்டியே சொல்ல முடியும்...' இப்படி மனசுக்குள் சொல்லிக் கொண்டேன். சிவராஜிடம் சொல்லவில்லை...!

எனக்கு இப்படியொரு ஆற்றல் ஏற்படக் காரணம் ஒரு விபத்துதான். பத்து நாட்களுக்கு

க. ஒப்பிலி அப்பன்

முன்னால் வீட்டில் மின்விசிறியை துடைக்க, ஒரு ஸ்டூல் மேல் ஏறி நின்றேன். விசிறியின் தகடுகளைத் துடைக்கும் மும்முரத்தில் ஸ்டூலின் விளிம்பில் கால்களை வைக்க, 'மடக்' என்று ஸ்டூல் கவிழ்ந்தது. தடால் என்று என் உடல் தரையில் சாய்ந்தது. என் தலை சுவரில் மோதியது. சிறிது நேரம் எனக்கு எதுவுமே புரியவில்லை. சத்தம் கேட்டு ஓடி வந்த என் மனைவி பார்வதி, நான் செய்த காரியத்தைப் பார்த்து சத்தம் போட்டாள். வற்புறுத்தி என்னை டாக்டரிடம் கூட்டிச் சென்றாள். ஸ்கேன் எடுக்கும் அளவுக்குப் போய்விட்டது.

"நல்ல காலம். தலையில் பாதிப்பு எதுவு மில்லை. இந்தாங்க ஸ்கேன் ரிப்போர்ட். பயப்பட வேண்டாம்.." என்றார் டாக்டர்.

அந்தச் சம்பவத்திற்குப் பிறகுதான், அந்த பஸ் சம்பவமும், அலுவலகத்தில் அந்த நிகழ்ச்சியும் நடந்தன. எனக்கொரு விஷயம் தெளிவாகிவிட்டது. ஏதோவொரு சக்தி என்னிடம் ஏற்பட்டிருக்கு. இதற்கு அந்த விபத்து காரணமாக இருக்கலாம்.

என் நண்பன் சிவராமகிருஷ்ணனைப் பார்த்து, அவனிடம் மனம்விட்டுப் பேசினேன்.

"இதோ பார் சங்கர். நீ சொன்ன விஷயங்களைப் பற்றி நானும் கேள்விப்பட்டிருக்கேன். படித்தும் இருக்கேன். இவ்வளவு ஏன்? மண்டையில் அடி பட்டு, பழைய விஷயங்களை மறந்துபோவது போல, எத்தனை சினிமாக்கள், இப்போது சீரியல்கள் - வந்திருக்கின்றன. நீ சொல்வது சற்று விசித்திரமானது. விபரீதமானதும்கூட."

"எதை நீ விசித்திரம் என்கிறாய்? எதை விபரீதம் என்கிறாய்?"

"அடுத்து நடக்கப் போவதை முக்காலம் உணர்ந்த ஞானியைப் போல் உன்னால் அறிய முடிகிறது என்பது விசித்திரம். ஏதோ இரண்டொரு சம்பவங்கள் தற்செயலாக நீ நினைத்த படி நடந்திருக்கு. இதற்குப் போய் இப்படி விபரீதக் கற்பனை பண்ணாதே. நான் கூடத் தான் உன்னைப் பற்றி நினைத்தேன். இதோ நீ வந்து என்னிடம் பேசிக் கொண்டிருக்கிறாய். எனக்கு நீ சொல்ற ஈ.எஸ்.பி. உணர்வு வந்து விட்டது என்று அர்த்தமா?"

"சரி விடு. இதில் விபரீதம் எங்கிருந்து வந்தது?"

"நீ இப்படியே கற்பனை பண்ணி அதே எண்ணத்தில் இருந்தால், நிச்சயம் ஏதாவது விபரீதமாக முடியும்..?"

"எனக்கு நீ சொல்றது விளங்கலை."

" விளங்கலை. அப்ப என்னை உற்றுப் பார். இதோ கால் மணியில், நான் என் அக்காவைப் பார்க்க அண்ணா நகர் வரை போகப் போகிறேன். அண்ணா நகர் போவேனா... இல்லை வழியில் ஏதாவது லாரியில் அடிபட்டுச் சாவேனா. சொல்... சீக்கிரம் என் முகத்தைப் பார்த்துச் சொல்.."

"என்னடா சிவராமா? இப்படிப் பேசிட்டே? நீ என் நண்பன். உனக்குப் போய் அப்படி... ச்சே... ச்சே.. நான் அப்படி நினைப்பேனா?"

"சங்கர்.. நீ நினைக்க மாட்டாய்.. ஆனால் உன் உள்ளுணர்வு இப்படிச் சொல்வதாக வைத்துக் கொள்.. நீ என்ன செய்வாய்..? என் சாவைத் தடுத்து விடுவாயா..?"

"வேண்டாம் சிவா... இந்தப் பேச்சே வேண்டாம்.."

மாலை வீடு திரும்பியதும் சூடான காப்பியை என்னிடம் நீட்டினாள் பார்வதி...

சிவராமன் சொன்னது என் காதில் ரீங்காரமிட்டுக் கொண்டிருந்தது.

"நான் அண்ணா நகர் போவேனா. அல்லது வழியில் லாரியில் அடிபட்டுச் சாவேனா?"

மலங்க மலங்க விழித்தவாறே நான் பார்வதியிடமிருந்து காபி டம்ளரை வாங்க, "என்னங்க. என்னாச்சு உங்களுக்கு. திருடனுக்குத் தேள் கொட்டியது போல முழிக்கிறீங்க.." என்றாள். அவ்வளவுதான். கோபத்துடன் அவளை முறைத்தேன்.

என் உள்ளுணர்வு சொல்லியது... "இவளை இன்றிரவு தேள் கொட்டப் போகிறது." சட்டென்று அதிர்ச்சியில் நான் தலைகுனிந்து கொண்டேன்.

அன்றிரவு மணி பதினொன்று இருக்கும். தூக்கம் வராமல் புரண்டு புரண்டு படுத்த எனக்கு இலேசாகக் கண் இழுத்தது.

திடீரென்று என் மனைவி 'ஐயோ' என்று அலறியபடி எழுந்தாள். காலில் ஏதோ 'சுரீர்' என்றதுங்க, என்றதும், பகீரென்றது. எழுந்து விளக்கைப் போட்டேன். தேள்... கருந்தேள்...!

"நானும் நாற்பது வருஷமா வாசிச்சுக் கிட்டிருக்கேன். எனக்கு இன்னும் கலை மாமணி பட்டம் தரலே!"

"அப்படியா! என்ன இசைக்கருவி வாசிக்கறீங்க... வயலினா.. வீணையா?"

"ஒத்து!"

- புளியரை கணேசன்



அவளது காலுக்கடியில் ஓடியது.

தேளை அடித்துவிட்டு, பார்வதியை அழைத்துக் கொண்டு டாக்டரிடம் ஓடினேன். விஷ முறிவுக்கு ஊசி போட்டார். பார்வதியை வெளியே ஹாலில் உட்கார வைத்துவிட்டு, டாக்டரின் அறைக்குள் சென்றேன்.

"என்ன சங்கர். நத்திங் டு ஒர்ரி. தேள் கொட்டிய இடத்தில் விண்.. விண்.. என்று வலிக்கும். பயப்பட ஒன்றுமில்லை.." என்றார் டாக்டர்.

"டாக்டர்... விஷயம் விஷத்தைப் பற்றியது அல்ல. என்னைப் பற்றியது. என் மனைவிக்குத் தேள் கொட்டப் போவது எனக்கு முன் கூட்டியே தெரியும்."

"வாட்? சங்கர்...நீங்க என்ன சொல்றீங்க?"

நான் சிவராம கிருஷ்ணனிடம் பேசியது... அவன் என்னிடம் சொன்னது. மனைவியுடன் சாப்பிடும்போது ஏற்பட்ட அனுபவம் எல்லாவற்றையும் ஒன்றுவிடாமல் சொன்னேன்.

எல்லாவற்றையும் பொறுமையாகக் கேட்டுக் கொண்டிருந்த டாக்டர் இந்த முறை என்னைப் பார்த்துச் சிரிக்கவில்லை. சற்று சீரியஸாக முகத்தை வைத்து கொண்டு சொன்னார்.

"இதோ பாருங்க சங்கர். நான் மறுபடியும் உறுதியாச் சொல்றேன். உங்களுக்குத் தலையில் பட்ட அடி சாதாரணமானது. ஆனா அந்த சம்பவம் உங்களை மனசளவில் அதிகம் பாதிச்சிருக்குன்னு நான் நினைக்கிறேன். வீணா எதையெல்லாமோ கற்பனை பண்ணி, மனசைப் போட்டுக் குழப்பிக்காதீங்க. மனசை அலைபாய விடாதீங்க. தியானம் அல்லது யோகா பயிற்சி பண்ணுங்க. நான் ஒரு மாத்திரை எழுதித் தரேன். எடுத்துக்கோங்க. எல்லாம் சரியாயிடும். மனசே ரிலாக்ஸ் ப்ளீஸ்." என் தோளில் தட்டிக் கொடுத்தார் டாக்டர்.


அன்றிரவு நான் அமைதியாகத் தூங்கினேன். காலை எழுந்துகொள்ளும்போது மணி எட்டு.

அவசரம் அவசரமாக ஆபீஸ் கிளம்பும் சமயம், எதிர் வீட்டு சுந்தரம் என்னைப் பார்த்து 'விஷ்' பண்ணினார். அவர் ஒரு ரிடையர்ட் டீச்சர். வயது எழுபது இருக்கும். பதிலுக்கு அவரைப் பார்த்து நானும் "நமஸ்காரம் சார்!" என்றேன்.

அன்று அலுவலகம் முடிந்து வீட்டிற்குத் திரும்ப பஸ் ஏறினேன்.

"ஆழ்வார்பேட்டைக்கு ஒரு டிக்கெட்..!"

"இது ஆழ்வார்பேட்டை போகாது. பஸ் நெம்பர் பார்த்து ஏறு." கண்டக்டர் எரிந்து



''இந்த டிசம்பர் சீசன்ல 'ஃப்யூஷன்' பைத்தியம் ரொம்ப அதிகமாயிடுச்சு...''

''எப்படி சொல்றீங்க?''

''காபியையும் டீயையும் கலந்து 'காடீ'ன்னு தர்றா..''

- டி. காமாட்சி

விழுந்ததும், பஸ்ஸை விட்டு இறங்கினேன்.

'கண் முன்னால் நடப்பதிலேயே தவறுகள் செய்கிறேன். 'எனக்கா முன் கூட்டி அறியும் ஆற்றல்?' சிரித்துக் கொண்டேன்.!

மாலை வீட்டிற்குள் நுழைந்த எனக்கு அதிர்ச்சி காத்திருந்தது.

''என்னங்க. எதிர்வீட்டு வாத்தியார் இறந்துட்டாருங்க...'' பார்வதி இப்படிச் சொன்னதும் பதைபதைத்துப் போன நான்,

"காலையில் நான் வேலைக்குப் போகும் போதுகூட என்னைப் பார்த்து 'விஷ்' பண்ணாரே.." என்றேன்.

"காலைய விடுங்க. நான் மதியம் காபி சாப்பிடும்போதுகூடப் பார்த்தேன். ஏதோ புஸ்தகம் படிச்சுக்கிட்டிருந்தாரே, மணி நாலு இருக்கும். ஏதோ மார்வலின்னு சொன்னாராம். டாக்டரை அழைச்சுக்கிட்டு வருவதற்குள் உயிர் போய்விட்டது."

எதிர் வீட்டிற்குள் நுழைந்தேன்.

என்னைப் பார்த்ததும் டீச்சரின் மனைவியும், அவரது மகளும் தேம்பித் தேம்பி அழுதனர்.

தூங்குவது போல கிடக்கும் சுந்தரம் சாரைப் பார்த்ததும், எனக்கு துக்கம் தொண்டையை அடைத்தது. மனம் விட்டு அழுதேன்.

எனக்கு இதற்கு முன்பு ஏற்பட்ட உள்ளுணர்வு வெறும் மனப்பிரமையோ அல்லது நிஜமோ.. அப்பொழுதெல்லாம் நடந்து போன சம்பவங்களைக் கண்டு மற்றவர்களைப் போல என்னால் துக்கப்பட முடியவில்லை. பயமும் அதிர்ச்சியும்தான் ஏற்பட்டது.

ஆனால் இன்று சுந்தரம் சாரின் மரணம் எனக்கு அதிர்ச்சியாக இருந்தாலும், மற்றவர்களைப் போல - மற்றவர்களுடன் சேர்ந்து என்னால் மனம் விட்டு அழ முடிந்தது.

இந்த இரண்டுக்கும்தான் எத்தனை வேறுபாடு. நிம்மதியாகத் தொடர்ந்து அழுதேன். ●

தும்புரு

நல்ல கூட்டம்; அபூர்வமானதொரு அமைதி நிலவியது. திறந்தவெளி அரங்கில் நட்சத்திரங்களும் மரங்களும்கூட சாந்தமாக அடங்கியிருந்தன. மிகவும் நிதானமான காலப் பிரமாணத்தில் 'வாதாபி கணபதிம்' தொடங்கியது. மகன் ஸ்ரீராமின் வாத்தியத்தில் மெல்லினம்; மகள் விஜியின் வயலினில் கம்பீரம்; 75ஆவது வயதை எட்டிய அப்பாவின் வயலினிலோ, இரண்டும் கலந்து குழைந்த வாசிப்பு... திருவாரூர் பக்தவத்சலத்தின் மிருதங்கம் இன்று மிருதுவாகப் போஷிக்கிறது. மனத்தைத் தொடும் மென்மையுடன், வைக்கம் கோபாலகிருஷ்ணனின் கடம் சேர்ந்து கொள்கிறது. துல்லியமான சுருதி சுத்தம், அப்படியே ரசிகர்களை இன்பத்தில் ஆழ்த்துகிறது.

வயலின் கலைஞர் பாப்பா வெங்கட்ராமையாவின் நூற்றாண்டுக் கொண்டாட்டத்தை நிறைவு செய்யவும், டி.என். கிருஷ்ணனின் 75வது பிறந்த நாளைக் கொண்டாடவும், ஹம்சத்வனி ஏற்பாடு செய்திருக்கும் கச்சேரி.

அடுத்து வரும் ஆனந்தபைரவியின் அழகும், தொடர்ந்து சியாமா சாஸ்திரியின் 'மரிவேரே' கீர்த்தனையும், ரசிகர்களை எளிதில் ஒன்றிக் கரைய வைக்கிறது. அந்த மென்மாலைப் பொழுதில் காலம் சற்றே உறைந்து நிற்கிறது.

தொடரும் கல்யாணி ஆலாபனையில் ஒரு தொய்வு. எதிர்பார்க்கும் ஆழம் இன்றி சிறிது ஏமாற்றம். 'ப்ரானப்ரோவ இதே' கீர்த்தனையின் கம்பீரம் வெளிப்பட மறுக்கிறது. நிரவல், ஸ்வரங்களின் மென்மை, கீர்த்தனையோடு ஒட்டாமல் தனித்துத் தெரிகிறது.

இத்தனைக்கும் ஊடே மேடையில் கலைஞர்களின் உற்சாகமும் ஈடுபாடும் குன்றாமல் தொடர்கிறது.

'கா வா வா' வின் ஜெட் வேகம் முருகனை மூச்சிரைக்க ஓடி வர வைத்துவிடுவோமோ. ஆனால் வராளியின் நெக்குருக்கும் தெறிப்புகள் அங்கங்கே வளமாகத் தெரிகின்றன.

ஷண்முகப்ரியாவில் ராகம் - தானம் பல்லவி. உயர்ந்த பட்டு நெசவில் அங்கங்கே 'டெஸ்டட் ஜரிகை' பிடிகள் வந்து விழுந்து வித்தை காட்டுகின்றன. அனாயாசமான ராகமாலிகை, ஸ்வரகல்பனைகளின் முடிவில் மிக உயர்தர, கச்சிதமான தனியாவர்த்தனம்.



* டி.என்.கிருஷ்ணன்



அழகும் அமைதியும் ததும்பும் சூழ்நிலையில் நடந்த மற்றொரு கச்சேரி ஸ்ரீராம் பரசுராம் - அனுராதா ஸ்ரீராம் தம்பதியின் ஜுகல்பந்தி. செட்டிநாடு வித்யாஸ்ரம் பள்ளியின் ஏ.ஸி. அரங்கு, ஜெயா டி.வி. நிறுவனம் செய்திருந்த ஜோடனையில் பிரகாசிக்க, அடேயப்பா, என்ன கூட்டம்! நிகழ்ச்சிக்கிடையே கேள்வி - பதில் நேரம் என்றொரு நூதனம் வேறு. தனி ஆரம்பித்ததும் ஓடிப்போகும் தயிர் சாத ரசிகர்களைக் கட்டிப்போட நல்ல யுக்தி, என்றாலும், இது போன்ற இடைவெளிகள் நிகழ்ச்சியின் தொடர் அமைப்புக்கு இடைஞ்சலாக அமையக்கூடும்.



ஆனால் பாடிய தம்பதி எந்த இடைஞ்சலையும் பொருட்படுத்தவில்லை... சப்தபதி ராமா என்பது

நிகழ்ச்சி தலைப்பு. அந்தக் காலத்துப் பாட்டிக் கதைகளில் ஏழு கடல் ஏழு மலை தாண்டிப் போய் புதையலைத் தேடிய ராஜகுமாரனைப் போல், எக்கச்சக்க நிபந்தனைகளைப் போட்டுக் கொண்டு ஸ்ரீ ராமனைத் தேடினார்கள், அனுராதாவும் ஸ்ரீராமும். ராமனைப் பற்றி ஏழு வெவ்வேறு மொழிகளில் ஏழு உருப்படிகள், அவற்றுக்கான ஆலாபனையும் வின்யாசமும் கர்நாடக சங்கீத பாணியிலும், ஹிந்துஸ்தானி இசைப் பாணியிலும் மாறி மாறி அமைய வேண்டும்.

'ராமகலி' என்ற அபூர்வ ராகத்தில் முத்துஸ்வாமி தீக்ஷிதர் கிருதியும் (ராம ராம), ஸ்ரீராம் அதற்காகப் பாடிய ஆலாபனை, கற்பனை ஸ்வரங்களும் வெகு சுவாரஸ்யமாய் அமைந்து நிமிர்ந்து உட்காரச் செய்ய, ஹிந்துஸ்தானி ராம்கலியில் அனுராதா அட்டகாசமாய் ரவை புரட்டினார்.

* ஸ்ரீராம் பரசுராம் - அனுராதா ஸ்ரீராம்





* ஹம்சத்வனியில்...

பட்டு நெசவு; டெஸ்டட் ஜரிகை!

இரண்டு தம்பூராக்கள் ஒரு எலக்ட்ரானிக் சுருதிப் பெட்டி வேறு... இத்தனையையும் மீறி, 'கானடாவா..? அது எங்கே, காணோம்டா!' என்று அங்கலாய்க்கும்படி செய்துவிட்டது அனுராதாவின் மேல்ஸ்தாயி ஆலாபனை. அந்த ராகத்தில் தியாகராஜ கீர்த்தனை 'சுகி எவ்வரோ ராம நாம' - (புத்தகத்தில் வார்த்தை பார்த்துப் பாடுவது கர்நாடக சங்கீத பந்ததியா? ஹிந்துஸ்தானி பந்ததியா?) கீர்த்தனையின் எடுப்பு... சகிக்கும்படி இல்லையென்றால், 'சு... முகி எவ்வரோ' என்று பிரித்தது சகிக்கும்படியில்லை. மிகவும் பழக்கப்பட்ட சங்கதிகளுடன் கூடிய கீர்த்தனைகளை இருவர் சேர்ந்து இசைக்கும்போது, அமைய வேண்டிய துல்லியம் இல்லை.

பக்கவாத்தியக்காரர்களுக்கு அதிகம் வேலையில்லை; ஆனால் தங்கள் பங்கைப் பூரணமாய் ஆற்றினார்கள். கே.வி. பிரசாத் மிருதங்கம், உதயராஜ் கபூர் தபலா இணைந்த தனியாவர்த்தனம், கானடா ராகத்தின் சௌக்கியத்தைப் பிரதிபலித்தது சிறப்பு. பக்கால ராமதாஸ் வயலினிலும் உமாகாந்த் பூரணிக் ஹார்மோனியத்திலும் அணியில் சேவை புரிந்தார்கள்!

மிஸ்ர சந்திர கௌன்ஸ், தேஷ், யமன் கல்யாணி, இறுதியாக மராட்டி அபங் என்று நிறைவடைந்த நிகழ்ச்சி நூதனம்தான்; உற்சாகமாய்த்தான் பாடினார்கள்; ரசிகர்கள் சந்தோஷமாய் வீட்டுக்குப் போனார்கள்..

ஆனால், 'ராமர் கிடைத்தாரா...?' என்று கேட்டீர்களேயானால் 'மாயமான் வேட்டை' என்று தான் பதில் சொல்ல வேண்டியிருக்கிறது!

சீஸன் சிறப்புப் பக்கம்

படங்கள் : **வெங்கடேஷ்**

யுத்த களத்தில் தந்திர முறைகளைக் கடைபிடிப்பது என்பது புராண சாட்சியாக இருப்பதால்...

இரண்டு விதமான கருத்துக்கணிப்புகள் வெளி வந்திருக்கின்றன. மொத்தம் 182 சட்டமன்றத் தொகுதிகள். ஒரு கருத்துக் கணிப்பின் படி, மூன்றில் இரண்டு பங்கு மெஜாரிட்டியுடன் பா.ஜ.க மீண்டும் ஆட்சிக்கு வருமாம். இதற்கு நேர் எதிராக காங்கிரஸ் நூலிழை மெஜாரிட்டியில் ஆட்சியைப் பிடித்துவிடும் என்று மற்றொரு கருத்துக் கணிப்புச் சொல்கிறது.

இரண்டு கட்சிகளிலும் வேறுபாடு இல்லாமல் தலை விரித்தாடுவது உட்கட்சி சண்டை, கோஷ்டிப் பூசல். மோடிக்கு தலைவலி மற்றும் திருகுவலியாக விளங்குபவர்கள் கேசவ் பாய் படேல் மற்றும் ஹிரேன் பாண்டியா. படேலை நீக்கிவிட்டு மோடியைக் கொண்டு வந்ததில் அவருக்குக் கோபம். இது தவிர மாநில பா.ஜ.க விவகாரங்களிலும், அரசு நியமனங்களிலும், யாரையும் கலந்தாலோசிக்காமல் யதேச்சையாக மோடி செயல்பட்டதாகக் குற்றம் சாட்டுகிறார் படேல். சௌராஷ்ட்ரா பகுதியில் செல்வாக்கு மிக்கவர் இவர். மாநிலத்தில் இவரது சமுதாயம் பதினாறு சதவீதம் இருக்கிறது. மோடி அமைச்சரவையில் முக்கியப் பொறுப்பில் இருந்தவர் ஹிரேன் பாண்டியா. இந்த முறை அவர் வென்ற எல்லிஸ் பிரிட்ஜில் அவருக்கு டிக்கெட் கொடுக்கக்கூடாது என்று தலைமையிடம் அழிச்சாட்டியம் செய்து வெற்றி பெற்று விட்டார் மோடி. இதனால் கடுப்பில் இருக்கிறார் பாண்டியா. ராஜ்கோட் தொகுதி சௌராஷ்ட்ரா பகுதியில் இருக்கிறது. அங்கு கடந்த தேர்தலில் போட்டியிட்டு வென்ற மோடி, இந்தமுறை படேலுக்கு பயந்து கொண்டு ஆமதாபாத் நகரில் உள்ள நடுத்தர மக்களைக் கொண்ட தொகுதியான மணி நகருக்கு மாறிவிட்டார். சங்கக் குடும்பம், தங்களின் புதிய தளபதியாக மோடியை அடையாளம் கண்டிருக்கிறது. எனவே அவரது வெற்றிக்காக முழு மூச்சுடன் பாடுபடுகிறது.

சௌராஷ்ட்ரா பகுதியில் உள்ள 56 தொகுதிகளில் படேல் - மோடி உட்கட்சி மோதலால், பா.ஜ.க பலமான சரிவைச் சந்திக்கும் என்கிறார்கள். இங்குள்ள மக்களின் பிரச்னைகள், வேலை வாய்ப்பு, குடிநீர், விலைவாசி உயர்வு போன்றவைதான். குறிப்பாக, கட்ச் பகுதியில் பூகம்பத்தைத் தொடர்ந்து புனர்வாழ்வுப் பணிகள் முறையாக நடக்கவில்லை என்ற மனக்கசப்பு இருக்கிறது. மின் கட்டணம் உயர்த்தப்பட்டதால் விவசாயிகள் கடுங் கோபத்தில் இருக்கிறார்கள். பத்துக்கும் மேற்பட்ட கூட்டுறவு வங்கிகள் திவாலாகி விட்டதால், லட்சக்கணக்கான நடுத்தர டெபாஸிட்தாரர்களின் பணம் ஸ்வாஹா ஆகிவிட்டது. இதனால் பா.ஜ.க மீது ஆத்திரத்துடன் இருக்கிறார்கள்.

குஜராத்

காங்கிரஸில் வகேலாவுக்கு சவால் விட்டு நிற்பவர் முன்னாள் முதல்வர் அமர் சிங் சவுத்திரி. ஆதிவாசி இனத்தைச் சேர்ந்தவர் சவுத்திரி. பா.ஜ.கவில் இருந்த வகேலா கடந்த சட்டமன்றத் தேர்தலின்போது அகில இந்திய ராஷ்ட்ரிய ஜனதா கட்சியைத் தோற்றுவித்துப் போட்டியிட்டார். இவரது கட்சி வோட்டைப் பிரித்ததால், காங்கிரஸ் தோற்று பா.ஜ.க பதவிக்கு வந்தது. யதார்த்த நிலை உணர்ந்து, தேர்தலுக்குப் பின் தனது கட்சியைக் காங்கிரஸுடன் இணைத்து விட்டார் வகேலா. பா.ஜ.கவைச் சமாளிக்க இவர் தான் பொருத்தமான நபர் என்று அவரைத் தலைவராகப் போட்டுவிட்டது காங்கிரஸ்.

குருக்ஷேத்திரம்!

நீண்டகால காங்கிரஸ்காரரான சவுந்திரிக்குப் பொத்துக் கொண்டு கோபம் வந்துவிட்டது. ஆனால் பா.ஜ.க.வை குஜராத் தேர்தலில் தோற்கடிக்க வேண்டுமென்பதை காங்கிரஸ் தனது ஒரே குறிக்கோளாக வைத்துச் செயல்படுவதால், கோஷ்டிகள் தற்காலிகமாக வாலைச் சுருட்டிக் கொண்டிருக்கின்றன. எல்லா கோஷ்டித் தலைவர்களின் வாரிசுகளுக்கும் தாராளமாக சீட்டுகள் கொடுக்கப் பட்டிருக்கின்றன.



• நரேந்திர மோடி, சங்கர்சிங் வகேலா

கிட்டதட்ட 60 தொகுதிகளில் வெற்றி வாய்ப்பை நிர்ணயிக்கும் வாக்காளர்களாக இருப்பவர்கள் முஸ்லிம்கள். அவர்களின் வோட்டு தங்களுக்குக் கிடைக்காது என்பது வெளிப்படையாகவே பா.ஜ.க.வுக்குத் தெரிந்தபடியால், அவர்களை வோட்டுப் போட விடாமல் தடுக்கும் யுக்திகளை வகுத்துக்கொண்டிருப்பதாக, காங்கிரஸ் குற்றம் சாட்டுகிறது. ஆனால் பெரும்பாலான முஸ்லீம்களோ பயம் காரணமாக வோட்டுச் சாவடிக்கு வரத் தயங்குவார்கள் என்று சொல்லப் படுகிறது. அவர்களின் பயத்தை விரட்டியடித்து வோட்டுப் போட வைக்கும் முயற்சியில் காங்கிரஸ் முழு மூச்சாக இறங்கும்.

முஸ்லீம் வோட்டுகளைத் தவிர காங்கிரஸ் மிகவும் நம்பிக்கையோடு எதிர்பார்ப்பது, 'காம்' அணியின் வோட்டுக்களைத்தான். அது என்ன காம்? KHAM என்பது, சத்திரிய, ஹரிஜன, ஆதிவாசி, முஸ்லீம் என்பதன் சுருக்கம். ஹரிஜனங்களும், ஆதிவாசிகளும் பாரம்பரியமாக காங்கிரஸ் வாக்கு வங்கிகளாக இருப்பவர்கள். ஆனால் கோத்ரா சம்பவத்துக்குப் பிறகு, சத்திரிய ஹரிஜன் மற்றும் ஆதிவாசிகள் மத்தியில் மத உணர்வைத் தூண்டி, தங்களுக்கு ஆதரவாக ஒற்றுமை ஏற்படுத்தும் யுக்தியில் பா.ஜ.க முழுமுச்சுடன் இறங்கியிருக்கிறது.

எப்படிப் பார்த்தாலும் குஜராத் தேர்தல் என்பது, காங்கிரஸ் மற்றும் பா.ஜ.க.வுக்கு வாழ்வா, சாவா தேர்தல்தான். குஜராத்தில் தோற்றால், அது மத்தியில் உள்ள தே.ஜ.மு ஆட்சியைப் பலமாகவே பாதிக்கும். பா.ஜ.க கூட்டணிக் கட்சிகள் உதறிக் கொண்டு ஓடி விடும் ஆபத்து இருக்கிறது. இது தவிர, அடுத்த வருடம் நடக்கவிருக்கும் பத்து மாநிலத் தேர்தல்களில் குஜராத்' எதிரொலிக்கும். எனவே பா.ஜ.க எதையும் விட்டுக் கொடுக்கத் தயாராகயில்லை. யுத்த களத்தில் தந்திர முறைகளைக் கடைபிடிப்பது என்பது புராண சாட்சியாக இருப்பதால், பா.ஜ.கவும், சங்கக் குடும்பமும் எல்லா 'கலை'களையும் செயல் படுத்துகின்றன. மேலும் பா.ஜ.க.வைப் பொறுத்தவரை குஜராத் என்பது அதற்கு ஒரு சோதனைக் களம். மத உணர்வுகளைத் தூண்டி, வகுப்புவாதத்தைக் கிளப்பி விட்டு, இந்து மக்களின் வோட்டுக்களை வாங்கி விட முடியுமா, என்பதைப் பரீட்சை செய்து பார்க்கும் களமாக குஜராத்தை எடுத்துக் கொண்டிருக்கிறது பா.ஜ.க. இங்கு வென்றால், இந்தியா முழுக்க அதே யுக்தியைக் கையாளும்.

— ப்ரியன்

குறை ஒன்றுமில்லை

மாதா பிதுவாக அவனைக் கொண்ட பிறகு நான் வேறென்ன பண்ணுவதற்கு இருக்கிறது? என்கிறார் அல்லவா நம்மாழ்வார்? அதே பெரிய திருவந்தாதியிலே இன்னொரு இடத்திலே சொல்கிறார்:

புவியும் இரு விசும்பும் நின் அகத்த - நீயென்
செவியின் வழிபுகுந்தென் னுள்ளாய் - அவிவின்றி
யான்பெரியன் நீ பெரியை யென்பதனை யாரறிவார்!
உன் பருகு நேமியா யுள்ளு.

சக்கரத்தைக் கையில் வைத்துக் கொண்டிருக்கும் ஹே எம்பெருமானே! நீதான் சொல்ல வேண்டும். எனக்குத் தெரியாது என்று பகவானிடமே விட்டுவிட்டார்!

எல்லாவற்றையும் நீ உன் வயிற்றிலே அடக்கியிருக்கிறாயே; சகல சராசரங்களும் உன்னுள்ளே இருக்கின்றன... அப்படிப்பட்டவனான உன் பிரபாவங்களைக் கேட்டுக், கேட்டுக், கேட்டு என் செவியின் வழி புகுந்து எனக்குள்ளே நீ இப்போது இருக்கிறாயே...

கேட்பது எவ்வளவு முக்கியம் என்பது இதிலிருந்து தெரிகிறது பாருங்கள்! பிருஹதாரண்யக உபநிஷத்தில் பார்த்தல், கேட்டலின் முக்கியத்துவமெல்லாம் சொல்லப்பட்டிருக்கிறது.

'நன்கு கேட்டு, உன்னையே என்னுள் அடக்கி வைத்திருக்கிறேனே' என்கிறார் ஆழ்வார். "எல்லாவற்றையும் உள்ளே அடக்கியவன் நீ... உன்னை என்னுள்ளே அடக்கியவன் நான். நீதான் சொல்ல வேண்டும் இப்போது... நீ பெரியவனா? நான் பெரியவனா? நீயே சொல்லு!" என்கிறார்.

அதனால்தான் சுவாமி தேசிகன் பாதுகா சஹஸ்ரத்திலே சொல்கிறார்: 'விசித்ர ஜகதாதாரனான எம்பெருமானைப் பாதுகை தாங்குகிறது. அப்படியானால் பாதுகை பெரியதா? பகவான் பெரியவனா? என்று கேள்வி எழுகிறது" என்கிறார்.

பாதுகையிலே எம்பெருமான் ஏறி நிற்கிறான். அது அவனையே தாங்குகிறது. சகலத்துக்கும் அவனே ஆதாரம். அவனே நமக்குப் புகல் என்பது உயர்ந்த சப்தார்த்தம்.


இவ்வாறு பரமாத்ம சப்தமானது, எம்பெருமானின் பதினொரு லக்ஷணங்களைக் குறிக்கிற சப்தமாக இருக்கிறது. எந்தவிதமான அவ்வியாப்தி, அதி வியாப்தி, அசம்பவம் என்கிற தோஷமில்லாத லட்சியமாக எம்பெருமான் இருக்கிறான்.

நாம் யக்ஞம் பண்ணுகிறோம் அல்லவா, அந்த யக்ஞத்திலே தவறுகள் நேரலாம். ஏனென்றால், இந்த த்ரிகுணாத்மகமான பிரகிருதியிலே நாம் வாழ்ந்து கொண்டிருப்பதனாலே, ஸ்ம்ருதி பலமும் குறைகிறது; வாக் பலமும் குறைகிறது. சரீரத்தில் பலம் குறைகிறது. ஒரே ரீதியாக, ஒரு சமயம் பண்ணின மாதிரி நம்மால் இன்னொரு சமயம் பண்ண முடிவதில்லை. க்ஷணத்துக்கு க்ஷணம், பலம் குறைவதனாலே சிலது, அசிரத்தையால் சிலது, முடியாததால் சிலது என்று பல தவறுகள் ஏற்படும். திரவிய லோபமும் ஏற்படும். நியம லோபமும் ஏற்படும்.

பலவிதமான லோபங்கள் இவ்வாறு ஏற்படக் கூடும் என்பதை வேதமே ஏற்கிறது. அதனால்தான், என்னென்ன நாம் செய்யக்கூடாது என்பதையும் அதுவே நினைவூட்டுகிறது.

சோம்பேறித்தனத்தை உண்டு பண்ணக் கூடிய சில பதார்த்தங்கள் உண்டு. அவற்றை எப்போதுமே

முக்கூர் லக்ஷ்மிநரசிம்மாச்சார்யார்


19

சாப்பிடக் கூடாது. தூக்கத்தைக் கொடுக்கும்படியான சில பதார்த்தங்கள் உண்டு. இவற்றையெல்லாம் சாப்பிட்டால், எந்தக் காரியமானாலும் 'போதுமே, இதோடு நிறுத்திக் கொள்ளலாமே' என்று தோன்றும்.

சாத்விக குணம் இருந்தால்தான் எப்போதுமே உற்சாகம் குறையாமல் நாம் காரியங்கள் பண்ண முடியும். ஆகவே, ஆகார நியமமும் யக்ஞ சமயத்திலே ரொம்ப முக்கியம்.

யக்ஞ சமயத்திலே நடத்தைக் கெடுதலும் ஏற்படக் கூடாது. அது எவ்வாறு ஏற்படும் என்றால், பரஸ்பரம் கோபித்தல், அடித்தல், எல்லாமே நடத்தைக் கெடுதல்தான். சண்டைக்கோ, கோபத்துக்கோ இடங்கொடுக்கக் கூடாது. சாத்விக பாவம் இருக்க வேண்டும். எம்பெருமானே யக்ஞத்திலே வந்து ஹவிஸை ஏற்கிற காரணத்தினாலே, நாம் மௌனம் காக்க வேண்டும்.

மதுராந்தகம் வேத பாடசாலையிலே, கோஷ்டிபுரம் சுவாமிகள் என்பவர் பிரின்ஸிபாலாக இருந்தார். கோஷ்டிபுரம் சுவாமி பரம ஏகாந்தி. அவரைப் போல் சாத்விகர் யாரும் கிடையாது. அப்படிப்பட்ட மகானைப் பார்த்து, இவ்வளவு ஞானம், அனுஷ்டானம், வைராக்கியம் எல்லாம் தங்களிடத்திலே உள்ளதே, ஒரு யக்ஞம் பண்ணலாமே என்று கேட்டனர்.

அதற்கு அந்த சுவாமி, "யக்ஞம் பண்ணுவதென்றால் அவ்வளவு சுலபமாக இருக்கிறதா உங்களுக்கு! நீங்கள் என்னிடத்திலே விச்வாசம் வைத்திருக்கிறீர்கள்; அதனால் என்னைப் பண்ணச் சொல்லுகிறீர்கள். ஆனால், யக்ஞம் என் ஒருவனால் ஆகக் கூடியது அல்லவே. பலபேருடைய சகாயத்தினால் தான் ஆகக் கூடியது. ஆகையினால், என்னைப் போல் இன்னும் நாற்பது பேரை அழைத்துக் கொண்டு வாருங்கள், பண்ணுகிறேன்" என்றார்.

ஆகவே, ஞானமும் இருக்க வேண்டும்; வைராக்கியமும் இருக்க வேண்டும்; அனுஷ்டானமும் இருக்க வேண்டும்.

இந்த குணங்கள் இருந்தால்தான் யக்ஞம் நடத்தலாம் என்று வேதமே கொண்டாடிச் சொல்கிறது. உயர்ந்த ஞானம் இருக்க வேண்டும்; என்ன நடக்கிறது என்று அதிலேயே புத்தி இருக்க வேண்டும். வீணான விஷயங்களிலே மனது போகக் கூடாது. அதனால்தான் 'துஸ்சரிதாத்!' 'துஸ்சரிதாத்!' என்று மீண்டும் மீண்டும் எச்சரிக்கிறது

''என்னோட கச்சேரியைக் கெடுக்க பயங்கரமான சதி நடக்குது!''

''எப்படிச் சொல்றே?''

''கச்சேரி நடந்து கொண்டிருக்கும் போது யாரோ ரிமோட்டால் சுருதிப் பெட்டியை ஆஃப் பண்ணிட்டாங்க!''

— புளியரை கணேசன்

வேதம்.

துஸ்சரிதாத் — கெட்ட நடத்தை — என்பது யக்ஞ காலத்திலே பரஸ்பரம் ஒருத்தருக்கொருத்தர் பேசி கோபப்படுவது. இவ்வாறு நடவாமல் இருப்பதற்கும் பகவானைத்தான் பிரார்த்திக்க வேண்டும் என்கிறது வேதம். பகவான்தான் அந்த துஸ்சரிதையைத் திருத்த வேண்டும் என்று சொல்கிறது!

'இவ்வாறு துஷ்க்ருத்யங்கள் நடைபெறாமல் வழிகாட்டக் கூடிய எம்பெருமானே! நாராயணா! நீ தேவதைகளுக்கெல்லாம் வழி காட்டுகிறாய். இந்த யக்ஞத்திலும் எங்களுக்கு வழிகாட்டி, இதன் பலன் எங்களுக்குப் பூரணமாய் ஏற்படும்படியாய் அனுக்கிரஹம் பண்ணு' என்று எம்பெருமானை நினைத்து, பிரார்த்திக்கச் சொல்கிறது வேதம்.

யக்ஞ காலத்திலே நாம் சொல்கிற வேத வாக்குகள் பலனளிக்க வேண்டும். நாம் சொன்னவுடனேயே அந்த எம்பெருமான் எழுந்தருள வேண்டும். 'ஒரு தடவை கூப்பிட்டு வரவில்லையானால், இரண்டாம் தடவை கூப்பிடு' என்கிறது வேதம். 'இரண்டாவது தடவையும் வரவில்லையானால், மூன்றாவது தடவை கூப்பிடு. மூன்று தடவை கூப்பிட்டும் வரவில்லையென்றால், யக்ஞத்தையே நிறுத்திவிட்டுப் புறப்பட்டுப் போய்விடு! யக்ஞமே பண்ணாதே!' என்று சொல்லிவிட்டது!

ஆகவே, மூன்று தடவை கூப்பிட்டும் வரவில்லையானால், ஏதோ தோஷம் இருக்கிறது என்று அர்த்தம்.

ஹோமம் பண்ணுகிற அத்வர்யூ ரொம்ப முக்கியமானவர். அக்னி புகைகிறது; ஜ்வலிக்கவில்லை... இவர் பாட்டுக்கு அதிலே திரவியங்களை எடுத்துப் போட்டுக் கொண்டிருக்கிறார். இந்த மாதிரி புகையிலே மேலும் மேலும் திரவியங்களைப் போட்டால் கண் பார்வைதான் பாதிக்கும். எதிரே



உட்கார்ந்து கொண்டிருப்பவர்களுக்கும் அதுதான் ஆகும்.

ஆகையினாலே, எந்த இடத்திலேயும் நமக்கு சிரத்தை குறையக் கூடாது.

கடைசியிலே வரும் மந்திரத்தை உரக்கச் சொல்கிறோம். ஏனென்றால் அது அக்னிக்கே நாம் திரவியங்களைச் சமர்ப்பிக்கிற மந்திரம். இத்தனை நாழி மற்ற தேவதைகளுக்கெல்லாம் நாம் கொடுத்ததைக் கொண்டு சேர்த்தான் அக்னி. இப்போது அக்னிக்கே நாம் கொடுக்கிறோம். லௌகிகத்திலே, கடைசியிலே, எல்லாம் ஆனபிற்பாடு நன்றி நவிலல் மாதிரி இது! இந்த நன்றி நவிலலும் வேதத்திலேயிருந்து வந்ததுதான்!

எல்லாம் பண்ணி முடித்த பிறகு, கடைசியிலே நாம் ரொம்ப சோர்வாக இருக்கிறபோது, அக்னிக்குச் சமர்ப்பிக்க வேண்டிய இந்த மந்திரம் வரும். ஆனால் சோர்ந்துவிடக் கூடாது. அப்போதும். நீயல்லவோ எல்லாவற்றுக்கும் மூலம், ஹே பிரபு! நீதான் எல்லாவற்றையும் நடத்திக் கொடுக்க வேண்டும், என்று இந்த இடத்திலே சொல்லப்படுகிறதனாலே எம்பெருமான் சர்வேச்வரன், யக்ஞ கர்ம சமாராத்யனாய் விளங்கிக் கொண்டு, அவரவர் பண்ணக்கூடிய கர்மானுஷ்டானத்திலே லோபம் இருந்தால் அவற்றையெல்லாம் போக்கி, விசேஷமான முறையிலே அனுக்கிரஹம் பண்ணுகிறான்.

பராசர பட்டர் என்கிற ஆசார்யர், 'சர்வதா பஜனீய' என்று சொல்கிறார். எப்போதும் பஜிக்கத் தகுந்தவன் பகவான் என்று பொருள்.

ஏனென்றால், எல்லா பாபத்தையும் போக்கக் கூடிய சக்தி அவனிடத்திலே இருக்கிறது. அவன் திவ்ய திருவடிகளைப் பற்றி, 'என்ன குறையிருந்தாலும் போக்கி, இது சாஸ்திரானுசிதமாக, சாஸ்திர முறையிலே செய்யப்பட்டதாக ஆக்கித்தர வேண்டும்' என்று எம்பெருமானிடத்திலேயே பிரார்த்திக்கிறது வேதம். இந்த மாதிரி பிரார்த்தனை யக்ஞ புருஷனான பகவானிடத்திலே நடப்பதனாலும், அதை அவன் ஏற்று நமக்கு அருள்வதனாலும்தான், அவனைப் பரமாத்மா என்கிறோம்.

ஏனென்றால், மீதிப் பேரெல்லாம் மன்னிக்க மாட்டார்கள். உலகத்திலே எல்லோருக்கும் கோபம் வரும். 'ஏன்? ஏன் அப்படி? ஏன் இப்படி?' என்று கேட்பார்கள். 'உனக்குத் தெரியாதா?' 'முன்னாடியே பண்ணக்கூடாதா?' என்பார்கள். தோஷத்தையே சொல்லிக் கொண்டிருப்பார்கள் உலகத்திலே! ஆனால் பகவான்... 'கேசவ: தோஷ போக்ய! என்று பெயர் அவனுக்கு. நம் தோஷத்தையே போக்யமாக எடுத்துக் கொள்ளக் கூடியவன் எம்பெருமான்தான். எவ்வளவு தப்பு பண்ணினாலும், அந்தத் தப்பைப் பொருட்படுத்துவதில்லை அவன். நம்மை மன்னிக்கிறான்.

அதற்காக அவன் கேட்பதில்லையே என்று நாம் தப்பு பண்ணிக் கொண்டேயிருக்கலாமா...? அவன் கேட்கிறான்; பார்க்கிறான் என்ற பிரக்ஞையோடுதான் நாம் காரியம் பண்ண வேண்டும்.

ஒருத்தர் பூஜை பண்ண ஆரம்பித்தார். தட்டு நிறைய அட்சதை. புரோஹிதர் சொல்படி. பாத்யம், அர்க்கியம், பானீயம், கந்தம், தூபம் என்று எல்லாவற்றுக்கும் அட்சதையையே சமர்ப்பித்தார்! கடைசியில் பூஜையெல்லாம் முடிந்தது. புரோஹிதரிடம் 'தட்சிணார்த்தம் அட்சதாம் சமர்ப்பயாமி' என்று தக்ஷிணைக்கும் அட்சதையை நீட்டினார்! நடுநடுங்கிப் போய்ட்டார் அவர்!

ஆகையினாலே, பகவான் கேட்கவில்லை என்பதற்காக நாம் இஷ்டத்துக்குப் பண்ணலாகாது. எம்பெருமான் உகக்கும்படியாக உபசாரம் பண்ண வேண்டாமா?

மகான்கள் பூஜை பண்ணுவதைப் பார்த்திர்களானால் தெரியும். இன்னும் சற்று நேரம் பண்ண மாட்டார்களா; நாம் பார்த்து ஆனந்தப்படமாட்டோமா என்னும்படிக்கு இருக்கும்.

நடாத்தூர் அம்மான் என்று ஓர் ஆசார்யர். ஆசார்யருக்கு ஒரு ஸ்த்ரீ பெயரா என்பீர்கள். அதற்கு ஒரு கதை உண்டு. சொல்கிறேன்.

(வளரும்)

UA கும்மாளம்



குளிர்ச்சியான ஊட்டியில் வசிக்கும் நான்கு ப்ளஸ்டு பையன்கள், தங்களது கோடை விடுமுறையை ரொம்பவே வறட்சியாக உணர்கிறார்கள். ரதி எனும் சிறகு முளைக்காத தேவதை அங்கே வந்து சேர்ந்ததும், பையன்களின் மனசுக்குள் மழை! மாறி மாறி நால்வரும் ரதியைக் காதலிக்க, ரதியோ நால்வரில் ஒருவரைத்தான் காதலிக்கிறார். ஆனால் அந்த அதிர்ஷ்டக்காரர் யாரென்று சொல்ல முடியாத சூழ்நிலை ரதிக்கு. இப்படி நகரும் திரைக்கதைக்கு, இளமைத் துள்ளல் நிறைந்த காட்சிகள் கைகொடுத்திருக்கின்றன. குலதெய்வக்கோவிலுக்கான வேண்டுதலாக முடி காணிக்கை செலுத்த அம்மா சொல்லியும் அடம் பிடிக்கும் செல்வம், (கலைவாணர் பேரன்) "உனக்கு மொட்டை ஸ்டைலாக இருக்கும்" என்று ரதி சொன்னதும் சந்தோஷமாகத் தலைமுடியைத் தியாகம் செய்துவிட்டுச் சிரிப்பதை ரசிக்கலாம்.

நான்கு நாயகர்களுமே (மதுன் தேஜஸ்வி, கணேஷ், செல்வம், ஆதித்யா) புதுமுகம் என்ற உணர்வேயில்லாமல் நடித்திருக்கிறார்கள். என்றாலும், நாயகி ரதியின் நடிப்பில் இயல்பின் ஆட்சி அதிகம்.


பாதிப்படம் நெருங்கி விட்ட சூழ்நிலையில் சுசன்கானைக் காட்டியதும் ஒரு கணம் அடி வயிறு கலங்கியே போனது. வில்லனை இறக்கி விட்டார்கள், இனி வழக்கமான சினிமாதான் என்று முடிவு செய்து தெளிந்த போது, மென்மையான, அகதிகள் முகாம் அதிகாரியாக அவரைக் காட்டியதும் தியேட்டருக்குள் ஆரோக்கியமாக சுவாசிக்க முடிந்தது.


துடிப்பான படத்தின் இறுதியில் வரும் அகதிகள் முகாம் ப்ளாஷ் பேக்கில் அடர்த்தியும் ஆழமும் அதிகம். என்றாலும் வினிதா பாத்திரமும், திணிக்கப்பட்ட பாடல்களும், கும்மாளம் ஒரு வியாபார சினிமா என்பதை அவ்வப்போது நினைவூட்டுகின்றன.

— விஷ்ணுவல்தாசன்

• ஆவரெஜ்

Printed and published by K. Rajendran at the Bharathan Press on behalf of Bharathan Publications Pvt. Ltd. Editorial Team : C. Egnath Raj, Anuradha Sekhar, C.Jesudoss. Layouts : S.Stephen, P.R. Rajan. Editor : Seetha Ravi.
Address : 47, Jawaharlal Nehru Road, Ekkaduthangal, Chennai - 600 097.
Telephones : Editorial : 2345624; Circulation Manager, Subscription and Advertisement : 2345623; Chief Administrative Officer : 2345622; Fax: 2345621.
Annual Subscription : India : Rs. 330/-; Half Yearly Subscription : India : Rs. 165/-
Overseas (Air Mail) Annual : 62 U.S. Dollars, Srilanka Rs.2000/-





Registered with the Registrar of Newspaper of India under No 1041/57 " Registered No. TN / Chief PMG-141 / 2002 "
Licensed to post without prepayment under PMG's Licence No. WPP 37 " Registered as a Newspaper in Srilanka



மாதங்களில்
மார்கழி நான்.



பகவான் கூறுகிறார் :

சூரியோதயத்துக்குச் சற்று முன்புள்ள நேரம் பிரம்ம முகூர்த்தம் எனப்படுகிறது. ஆத்ம சாதனத்துக்கு அது சிறந்த வேளையாகும். மனிதர்களுடைய ஒரு வருஷம் தேவர்களுக்கு ஒரு நாள் ஆகும். தை மாதமாகிய உத்தராய புண்ணிய காலம் அவர்களுக்கு சூரியோதயம். அதிலிருந்து உத்தராயணம் ஆறு மாதம் அவர்களுக்கு பகல். ஆடியிலிருந்து மார்கழி வரையில் தக்ஷிணாயணம் அவர்களுக்கு இரவு. அதில் மார்கழி மாதம் விடியற்காலம் தேவர்களது நாளில் பிரம்ம முகூர்த்தமாகிறது. அப்பொழுது செய்யும் தேவாராதனை, வந்தனை, வழிபாடு முதலியன மனதை நன்கு பண்படுத்த வல்லவை களாம். இங்ஙனம் மார்கழி மாதம் புலனடக்கம், கடவுள் வழிபாடு ஆகியவைகளோடு முழுதும் இணைக்கப்பட்டிருக்கிறபடியால் மாதங்களுள் தாம் மார்கழி மாதம் என்கிறார்.

பகவான்

